(பொ) தன்னுடையசித்தமாகிய பிலத்துவாரத்திலிருப்பதாயும், நானாவிதமானமயக்கத்திற்கேதுவாயுமிருக்கிற மன்மதனென்னும்பிசாசினால் பலாத்காரமாய்ப்பிடிக்கப்பட்டு, யௌவனத்தில் ஸ்வாதீனமற்றவனாய் விஷயாசையுடன் கூடியிருக்கிறேன்.

[illegible] ।
[illegible] ॥ (93½)

(பொ) அசத்தியமாயிருக்கிற யௌவனம், சத்தியம்போற்றோற்றி, சீக்கிரத்திற்கெடுதியைக்கொடுப்பதாயும், சொப்பனத்திற்கண்ட ஸ்திரீசுகத்திற்கொப்பாயுமிருப்பதால் எனக்கு ருசிக்கவில்லை.

[illegible] ।
[illegible] ॥ (94½)

(பொ) சகலபுருஷர்களுக்கும் க்ஷணத்திற்சந்தோஷத்தைக்கொடுப்பதாயும், கந்தர்வபட்டணம்போல் நிலையற்றதாயுமிருக்கிறயௌவனமானது எனக்கு இன்பத்தைக்கொடுக்கவில்லை.

காஙாவியொமஜாலெதநஹ௱ஜிஷ-ஷுஸஶஃவஹிநா ।
யௌவநெநஷ஁ஹ௱லெதஜஜ-ஷுர-ஷ௱ாவாஹி௱நா௱யமா ॥ (95½)

(பொ) வனத்திலிருக்கிற விருக்ஷமானது காட்டுத்தீயால்நாசமுறுவது போல், ஸ்திரீயைப்பிரிந்ததினிமித்தம்மனசிலுண்டாயிருக்கிற அக்கினியால் யௌவனகாலத்தில் ஜீவனானவன் தகிக்கப்படுகின்றான்.

ஸ-நிமஃஶாவிவிஷீண௱ாவாவிந௱விஹியௌவநெ ।
மதிஃகஶ-ஷ தாமெதிவ௱ாவ௱ஷீவதாஸ௱ம்ிணீ॥ (96½)

(பொ) வருஷாகாலத்தில் நதியானது கலங்கிப்போடுவதுபோல் நிர்மலமாயும் விஸ்தாரமாயும் பரிசுத்தமாயுமிருக்கிற புத்தியானது, யௌவனகாலத்தில் விஷயாசையாகிற கல்மஷத்துடன் கூடிக்கெடுகின்றது.

## ஆத்மவித்தியாவிலாசம்.

தாா-ண௱மெத௱க-ஶயௌவநா-ஏவஸம்வ ஜிஷ௱ாதிமவ௱வி ஹி
தாதஹிதாஹிமாஷஃ । விணு-ஏது௱மாஂஸா-யிராஷுமயெஶநீ
ரெநா௱ா ா-வி ஂஸ ம -வயாதிஜநொவிவிதுஂ ॥ (97½)

(பொ) நாமின்னகுலத்திற்சனித்தோம் மகாவித்தைகளையுங்கற்றோமென்றகர்வத்தால் மூடப்பட்டமனசையுடையவனாயிருக்கிறயௌவனபுருஷன் மலமூத்திரமாம்சாதிகளால் நிறைந்தஸ்திரீசரீரத்திலாசையுடன்கூடிக்கெட்டுப்போகிறானன்றோ? இஃதாச்சரியமல்லவா எனசதாசிவபிர்மயதீந்திரர் கூறியுள்ளார்.

## வாசிஷ்டம்.

தெவ-ஐஜ௱ாஷெுமஹாதாநஷுவவவ-ா-ஷாஹ-வி ।
யெஷ-வெநஷும-தீண௱ாஷுாயொயௌவநஸஂகடாஃ॥ (98½)

(பொ) ஹேராமா! எவர்கள் யௌவனசங்கடத்தினின்று சுலபமாய்த்தாண்டியிருக்கிறார்களோ அவர்களேபூஜ்யர்கள், அவர்களே மகான்கள், அவர்களே இப்புவியிற்சனித்தவுத்தமபுருஷர்கள்.

[illegible] ॥(99½)

(பொ) விநயத்தாலலங்காரம்பண்ணப்பட்டதாயும், பெரியோர்களுக்கிருப்பிடமாயும், கருணையாற்சுவலித்துக்கொண்டிருப்பதாயும், சற்குணங்களால் நிறைந்ததாயும், இந்த யௌவனம் விளங்குமானால், ஹேமகரிஷியே, ஆகாசத்திலுண்டானநந்தனவனத்திற்கொப்பாயிவ்வுலகத்தில் வெகு அருமையாய்ப்பிரகாசிக்குமல்லவா.

## ஸ்திரீ தூஷணம்.

---

[illegible] ॥ (100½)

(பொ) அஸ்தி நரம்புமுதலானவைகளாற்கட்டப்பட்டதாயும் மாம்சமயமானபொம்மையாயும், யந்திரங்கள்நிறைந்ததாயுமிருக்கிறசரீரத்தையுடையஸ்திரீகள் எங்ஙனம் அழகுடையவராவர்?

[illegible] ॥(101½)

(பொ) தோல், மாம்சம், ரக்தம், கண்ணீரிவ்வகளைப்பிரித்தறிந்தபிறகு, கண்ணென்பதேது, மயக்கத்தினலழகென்றெண்ணி வீணாயேன்மோகத்தையடைகிறாய்?

[illegible] ॥ (102½)

[illegible] ॥(103½)

(பொ) மேருமலையுச்சியிலுண்டாயிறங்கும் கங்கை நீரருவிக்கொப்பான முத்தாரங்களையுல்லாசமாய் மார்பிலணிந்திருக்கிறஸ்திரீகளின் ஸ்தனமானது மயானத்திலும் திக்குவிதிக்குகளிலும், சரீர நாசகாலத்தில் சாக்மானது பலியன்னத்தை புசிப்பதுபோல், நாய்களால் நன்று நன்றென புசிக்கப்படுகின்றன.

கேஶகஜ்ஜலதாரிண்யோ து:ஸ்பர்ஶா லோசனப்ரியா: |
துஷ்க்ருதாக்னிஶிகா நார்யோ தஹந்தி த்ருணவந்நரம் || (104½)

(பொ) கேசமாகிற புகையானிறைந்து, கண்களாகிறஜுவாலைகளுடன் கூடி, பாபமயமாகிறநெருப்பையொத்த பெண்கள், புருஷனை துரும்புபோலெரிக்கிறார்கள்.

ஜ்வலதா அதிதூரே(அ)பி ஸரஸா அபி நீரஸா: |
ஸ்த்ரியோ ஹி நரகாக்னீநாமிந்தனம் சாரு தாருணம் || (105½)

(பொ) வெகுதூரம்வரையும்சுவலிக்கும் உருவமுடையவர்களாயும், ரசமற்றவர்களாயிருந்தும் ரசம்போற்பார்க்கப்படுகிறவர்களாயுமிருக்கிறகாந்தைகள், நரகமாகிற அக்கினிக்கு உலர்ந்தகட்டையாகவிருக்கிறார்கள்.

காமநாமகிராதேந விகீர்ணா முக்தசேதஸாம் |
நார்யோ நரவிஹங்காநாமங்கபந்தனவாகுரா: || (106½)

(பொ) அற்பபுத்தியுடன்கூடினபுருஷர்களாகியபக்ஷிகளைப்பிடிப்பதற்கு ஆசையென்னும்கயற்றாற்பின்னப்பட்டிருக்கிறஸ்திரீகளாகிறவலைகள், மன்மதனாவேடனாலிச்சகமான காட்டில் வீசப்பட்டிருக்கின்றன.

ஜந்மபல்வலமத்ஸ்யாநாம் சித்தகர்தமவாஸிநாம் |
பும்ஸாம் துர்வாஸனாரஜ்ஜுர்நாரீ படிஶபிண்டிகா ||(107½)

(பொ) மாதர்கள், கொடியமனமென்னும் அளறுநிறைந்த பிறவியென்னும் சிறுகுளத்தில்வசிக்கும் மனிதராகியமீன்களைப்பிடிப்பதற்கு விஷயவாசனையென்னும்பாசத்திற்கட்டிய தூண்டின்முள்ளில்வைத்தமாம்சத்திற்கிணையாவர்.

ஸர்வேஷாம் தோஷரத்நாநாம் ஸுஸமுத்கிகயாநயா |
து:கஶ்ருங்கலயா நித்யமலமஸ்து மம ஸ்த்ரியா: || (108½)

(பொ) மிகுந்ததுக்கமாகிற இருப்புவிலங்காயும், சகலதோஷங்களான ரத்தினங்கள் வைத்திருக்கும்சம்புடமாகவுமிருக்கின்றமாதர்களதுசுகத்தையான் விரும்பேன்.

யஸ்ய ஸ்த்ரீ தஸ்ய போகேச்சா நிஸ்த்ரீகஸ்ய க்வ போகபூ: |
ஸ்த்ரியம் த்யக்த்வா ஜகத்த்யக்தம் ஜகத்த்யக்த்வா ஸுகீ பவேத் ||(109½)

(பொ) யாவன் மனைவியுடன்கூடியவனோ அவனுக்கே போகத்திலாசையுண்டாகும், மனைவியற்றவனுக்கு போகத்தாலாகியவின்பமெவ்விடத்துளது? போகத்திற்கிடமானபெண்ணைவிடில் மனதின்கண்ணுள்ளவுலகபந்தம்போம், நாமமாத்திரமான உலகம் நீங்குங்காலை நீங்காத பேரானந்தமுதயமாம்.

## வார்த்திக தூஷணம்.

---

தாஸா: புத்ரா: ஸ்த்ரியஶ்ச பாந்தவா: ஸுஹ்ருதஸ்ததா ।
ஹஸந்த்யுந்மத்தகமிவ நரம் வார்த்தககம்பிதம் ॥(110½)

(பொ) வேலைக்காரர்களும் புத்திரர்களும் ஸ்திரீகளும் பந்துக்களும் சிநேகிதர்களும், பைத்தியங்கொண்டவனுக்கொப்பாக வார்த்திகத்தால் நடுக்கமடைந்திருக்கிறமனுஷியனைக்கண்டு நகைக்கிறார்கள்.

தைந்யதோஷமயீ தீர்க்கா வர்த்ததே வார்த்தகே ஸ்ப்ருஹா ।
ஸர்வாபதாமேகஸகீ ஹ்ருதி தாஹப்ரதாயிநீ ॥ (111½)
அப்ரதீகாரயோக்யம் ஹி வர்த்ததே வார்த்தகே பயம் । (112)

(பொ) பிறரிடத்தில் யாசிக்கிற தோஷமயமாயும் சகல ஆபத்திற்கொரே சிநேகிதமாயும், மனதைசதா துக்கிக்கச்செய்வதாயுமிருக்கிற ஆசையானது வார்த்திககாலத்தில் விசேஷமாய் விருத்தியடைந்துகொண்டிருக்கிறது. மேற்கூறிய துக்காதிகள் நிவர்த்திக்கத்தகாததாயும் பயத்தைப்பண்ணுவதாயுமிருந்துகொண்டிருக்கின்றன.

## கால தூஷணம்.

---

திஶோ(அ)பி நஹி த்ருஶ்யந்தே தேஶோ(அ)ப்யந்யத்வமேஷ்யதி ।
ஶைலா யத்ர விஶீர்யந்தே ஶீர்யந்தே தாரகா அபி ॥(113)

(பொ) பிரளயகாலத்தில் திக்குகளும் பார்க்கப்படாமற்போகின்றன, தேசங்களும் அதேசமாகின்றன, பருவதங்களும் ஜீரணிக்கின்றன, நக்ஷத்திரங்களும் நாசமுறுகின்றன.

ஶுஷ்யந்த்யபி ஸமுத்ராஶ்ச த்ருவோ(அ)ப்யத்ருவஜீவந: ।
ஸித்தா அபி விநஶ்யந்தி ஜீர்யந்தே தாநவாதய: ॥(114)

(பொ) சமுத்திரங்களும் சோஷணமடைகின்றன, துருவனும் நாசமடைகிறான், சித்தர்களும் அசுரர்களும் நாசமுறுகிறார்கள்.

க்ஷிப்த்வாவித்யதெவெஷாஸம்ஸாரெஸுவஹாவநா ।
ஸுவஹஸ்தம்ஹிவாஸாஷ்காஙஸ்தாஉவிக்ருஷதி ॥ (115)

(பொ) கட்டையை பலமாய்ப்பிடித்தவன்போல் பாபத்தையடைந்து சம்சாரத்திற்சுகபாவனையையெவர்கள் பண்ணுகிறார்களோ அவர்களைக்காலன் நாசமுறச்செய்கிறான்.

த்ருணம்வாம்ஸுமஉஹெந்த்ஸுவணும்உரஸுவஷ்டுவம் ।
க்ஷூதம்ஹரிதயாஸவடுஉாகூஸாக்ஷதடுஉஷ்தஃ ॥ (116)

(பொ) துரும்பையும் தூளியையும் மகேந்திரகிரியையும், சுவர்ணமயமான மகா மேருவையும், கடுகையும் சர்வ பக்ஷகனான காலன், தானுய்விழுங்குகிறான்.

வரஉஷ்யவிநிஷ்டாவாநீ யதெஹ்ரிரவ்யஜஃ ।
ஹவொவ்யஹாவஉயாதிஜீயடுஷெவெஷிமீஸ்யுராஃ (117)

(பொ) நிஷ்டாவானான பிர்மதேவனும், உற்பத்தியற்ற விஷ்ணுவும், ஈசுவரனும் இந்திரன் முதலான அஷ்டதிக்குப் பாலகர்களும் காலனால்பீடிக்கப்படுகின்றனர்.

ஸ்ரூஹா விஷ்ணுஸ்த ஈஷ்ரஸ்தஸவடுஉவாஹுதஜாதயஃ।
நாஸஉவாநஸயாவஷிஸமிஷா நீவவாஙபம் ॥(118)

(பொ) சமுத்திர ஜலத்தை வடவாக்கினி விழுங்குவதுபோல் திருமூர்த்திகளும் சகலபிராணிகளும் நாசமடைகிறார்கள்.

ஆவதஃக்ஷணஉாயாஷிக்ஷணஉாயாஷிஸம்வதஃ ।
க்ஷணம்ஜந்தூயஉரணம் ஸவடும்நஸ்வரஉவதக ॥ (119)

(பொ) கணத்தில் ஆபத்தையும் கணத்திற்சம்பத்தையுந்தருவ தாயும் (?) கணத்திற் ஜனனமரணமளிப்பதாயுமிருக்கிற இச்சகம் நசுவரமேயொழிய வேறல்ல.

விஷம்விஷயவெஷஉம் நவிஷம் விஷஉவ்யெத ।
ஜந்மாந்தரஷ்நாவிஷயாவஷஜந்தூஹாரம்விஷம் ॥ (120)

(பொ) விஷம் விஷமல்ல, விஷயமே மேலான விஷமாயிருக்கிறது. விஷத்தை புசித்தவன் இந்த ஜன்மத்தைமாத்திரமிழப்பன், விஷயமாகிறவிஷம் அநேகஜன்மங்களை அடையச்செய்கிறது.

[illegible] ।
[illegible] ॥ (121)

(பொ) மேற்சொல்லியதோஷங்களாகிற காட்டுத்தீயால் தகிக்கப்பட்டிருக்கிற என் மனதில் போக ஆசையாகியகானல் நீரானது ஒருக்காலுந்தோன்றமாட்டாது.

[illegible] ।
[illegible] ॥ (122)

(பொ) ஆகையால் ஹே, குரோ எனக்கு தத்துவஞானத்தை போதிப்பீராக. அவ்விதம்போதியாவிடில் மாத்ஸரியமிழந்தவனும் மமதையற்றவனுமிருக்கிற யான் மௌனத்திலிருந்துவிடுகிறேன்.

## அ-கை. இவ்விதமுரைத்த சீடனைநோக்கி, ஆசானுண்மையைவெளியிடுதல்.

---

[illegible] ।
[illegible] ॥ (123)

(பொ) ஹேவித்துவன், யமபயத்தைவிட்டுவிடக்கடவாய், நித்தியனும் இரண்டற்றவனும் பரமானந்தரூபனும் பிர்மமாயுமிருக்கிற உனக்கு, மிருத்தியுவென்பது ஒருக்காலுமில்லவேயில்லை மயக்கத்தாலொன்றுமறியாதவனாயிருந்து பயத்துடன் நிரைந்தமனதால், என்னை இரக்ஷிக்கவேண்டுமென்று கூறுகின்றாய். நித்திரையையடைந்தவன் தானுப்புலம்புவதையொத்து நீயும் புலம்புகிறாய், அதுவாஸ்துவமல்ல.

[illegible] ।
[illegible] ॥ (124)

(பொ) சுவப்னவஸ்தையில் நல்லதூக்கத்தையடைந்த புருஷன் அரவ முதலானவைகளாற்கடியுண்டவனுயெண்ணித்தன்னைரக்ஷிக்கவேண்டுமென்று புலம்பினதைக்கேட்டுச்சமீபத்திற்படுத்திருந்தசினேகிதனுல் நன்ருய்த்தட்டியெழுப்பப்பட்டு விழிப்பையடைந்தபுருஷன் யானென்றுமறியேனென்று சொல்லுகிறவசனத்திற்கென்னபயன் சொல்லுவாயாக.

ரஜ்ஜ்வஜ்ஞாநாத்க்ஷணேநைவ யத்வத்ரஜ்ஜுர்ஹி ஸர்பிணீ ।
பாதி தத்வச்சிதிஸ் ஸாக்ஷாத்விஶ்வாகாரேண கேவலா ॥ (125)

தத்வஜ்ஞாநாதி தக்ஷ்யதி ... ।
... ॥(126)

மந்தாந்தகாரவேளையிற் பழுதையின் சுபாவத்தையறியாதமயக்கத்தால், பழுதையிற் சர்பமிருப்பதாயெண்ணி, அழுது, பயந்து, நடுங்கினபுருஷன் விசாரிக்குங்காலத்தில் சர்பம் வாஸ்தவமல்லவென்றுணர்வதுபோல்.

(பொ) உன்னால் அஞ்ஞானத்தால் ஆத்மாவான உன்னிடத்தில் ஜந்மம், நாசம், வியாதி ஜரை முதலானதுக்கங்கள் பொய்யாய்க்கற்பிக்கப்பட்டு புலம்பிய நீ, குருபதேசவிசாரஜன்னிய ஞானத்தால் மேற்கூறியவைகளனைத்தும் ஆத்மாவிடத்தில் வாஸ்தவமல்லவென்றுணர்ந்து பயத்தைநீக்கக்கடவாய்.

ஸ்வாநாத்மநோ ... பாவ்யஸே ... ।
தஜ்ஜ்ஞாநக்ருதம் ஸம்ஸயம் ... ॥ (127)

(பொ) நீ, அனாத்மாவானபஞ்சகோசாதிதர்மங்களை ஆத்மாவிடத்திற் கற்பித்துத்துக்கிக்கிறுய், அந்த துக்கமானது அஞ்ஞானத்தாலுண்டுபண்ணப்பட்டதென்றறிந்து சகலபயங்களையுமொழித்துச்சுகியாயிருக்கக்கடவாய்.

சர்வவேதாந்தசித்தாந்தசாரசங்கிரகம் $262\frac{1}{2}$ முதல் $267\frac{1}{2}$ வரை சுலோகங்களிற்கூறுகிறது.

அ-கை. ஆசான் உத்தமாதிகாரியான சீடனுக்கு மோக்ஷமடையஹேதுவான சமாதிகளின் தன்மையை மஹோபநிஷத் 4-வதத்தியாயத்திற்கூறியவாறு இங்கு வெளியிடுகின்றனர்.

---

... விஜாநாஸி ... தயா ।
... ॥ (128)

(பொ) நிஷ்காமகர்மத்தாலுபாசிக்கப்பட்டு ஈசுவரானுக்கிரகத்தாலுண்டாயிருக்கிறப்பிரஞ்ஞையால் நீ, பிர்மத்தையறிந்து மனதிலுண்டாயிருக்கிற அஞ்ஞானமாகிற மயக்கத்தைப்போக்கக்கடவாய்.

மோக்ஷத்வாரே த்வாரபாலாஶ்சத்வார: பரிகீர்திதா: ।
ஶமோ விசாரஸ்ஸந்தோஷஶ்சதுர்தஸ்ஸாதுஸங்கம: ॥ (129)

(பொ) மோக்ஷமாகிறராஜகிரகத்தில் சமம் விசாரம் சந்தோஷம் சாது சங்கமமென்ற நான்கு காவலர்கள் வசிக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஏகம் வா ஸர்வயத்நேந ஸர்வமுத்ஸ்ருஜ்ய ஸம்ஶ்ரயேத் ।
ஏகஸ்மிந்வஶமாயாதே சத்வாரோऽபி வஶம் கதா: ॥ (130)

(பொ) எவ்விதமுயற்சியாலாவது அந்நால்வர்களிலொருவனையாவது சுவாதீனஞ்செய்துகொள்ளவேண்டும், அவருளொருவன் சுவாதீனமாவனேயானால் அக்காவலர்கள் மற்றைமூவர்களும் சுவாதீனமாவார்கள்.

## வாசிஷ்டம் முமுக்ஷுப்பிரகரணம் 13-வதத்தியாயம்.

---

பூர்வாபரஸமாதாநக்ஷமபுத்தாவநிந்திதே ।
ப்ருஷ்டம் ப்ராஜ்ஞேந வக்தவ்யம் நாதமே பஶுதர்மிணி ॥ 131.

(பொ) ஆசாரியர் அனுக்கிரகஞ்செய்கின்ற அர்த்தங்கள்யாவும், துவக்குங்கருத்தையும் முடிக்குங்கருத்தையுஞ்சேர்த்தறிபவர்க்கே உபதேசிப்பாரன்றி பசுத்தன்மைபோன்றவதமர்களுக்கு பிராக்ஞர்கள் தத்துவஞானத்தையுபதேசியார்.

## மோக்ஷமாகிற ராஜகிரகத்தில் வசிக்கும் சமத்தின் லக்ஷணங்கூறல்.

---

ஶமேநாஸாத்யதே ஶ்ரேய: ஶமோ ஹி பரமம் பதம் ।
ஶம: ஶிவ: ஶம: ஶாந்தி: ஶமோ ப்ராந்திநிவாரணம் ॥ 132.

(பொ) சமத்தால் மோக்ஷம் அடையப்படுகிறது, சமமேபரமபதத்தைக் கொடுக்கிறது, சமமே மங்கள்த்தையும் சாந்தியையும் அஞ்ஞானமயக்கநிவாரணத்தையுமளிக்கின்றது.

शमसंतृप्तस्य शीतलामलचेतसः ।
शमभूषितदेहस्य शत्रुरप्येति मित्रताम् ॥ (133)

(பொ) சமத்தால் திருப்தியடைந்தவனும், குளிர்ந்தமனதுடையவனும், சமமாகிய ஆபரணத்தால் அலங்கரிக்கப்பட்ட சித்தமுடையவனுமிருக்கின்றபுருஷனுக்கு சத்துருவும் மித்திரனாவான் என்பதில் ஐயமில்லை.

यानि दुःखानि या तृष्णा दुःसहा ये दुराशयाः ।
तत्सर्वं शान्तचित्तस्य तमोऽर्केणेव नश्यति ॥ (134)

(பொ) சகலதுக்கங்களும், பணத்தாசையும், சகிக்கக்கூடாதமனோவியாதிகள்முதலியசமஸ்தமும் சாந்தமனதுடையவனுக்கு சூரியனைக்கண்டவிருள்போல் நசிக்கும்.

मातरीव परं यान्ति विषमाणि मृदूनि च ।
विश्वासमिह भूतानि सर्वाणि शमशालिनि ॥ (135)

(பொ) விஷமமானவஸ்துக்களும், மிருதுவானவஸ்துக்களும் சமஸ்தப்பிராணிகளும் சமசாலியிடத்தில் விசுவாசத்துடன்கூடி, தாயைப்புத்திரர்கள் ஆசிரயிப்பதுபோல் ஆசிரயிப்பார்கள்.

न रसायनपानेन न लक्ष्म्यालिङ्गनेन च ।
तथा सुखमवाप्नोति शमेनान्तर्यथा जनः ॥ (136)

(பொ) தேவாமுதமானது, தான் புஜிக்கும்படி கிடைத்தலானும், வளப்பமுள்ள பங்கயமலரிலுறையும் லக்ஷ்மிவந்தணைதலாலும் உண்டாகும் சுகமும் சமவானுக்குண்டாயிருக்கிற அந்தரங்கசுகத்திற்கிணையாகாவாம்.

श्रुत्वा स्पृष्ट्वा च दृष्ट्वा च भुक्त्वा घ्रात्वा शुभाशुभम् ।
न हृष्यति ग्लायति यः स शान्त इति कथ्यते ॥ (137)

(பொ) சுரோத்திரேந்திரியத்தால் அஷ்டாதசபாஷைகளைச்சிரவணஞ்செய்யினும், ஸ்பரிசேந்திரியத்தால் ஸ்திரீவிஷயங்களைஸ்பரிசிக்கினும், சக்ஷுரிந்திரியத்தால் பல உருவங்களைப்பார்த்தாலும், ரசனேந்திரியத்தால் பதார்த்தங்களைப்புசிக்கினும், இச்சரீரத்திற்குஸ்நானஞ்செய்வித்தாலும், இவைகளினாலுண்டாகிற சுபாசுபங்களில் யாவன் சந்தோஷவியசனங்களையடையவில்லையோ அவனே சாந்தனென்று கூறப்படுவான்.

തപസ്വിഷു ബഹുജ്ഞേഷു യാജകേഷു നൃപേഷു ച ।
ബലവത്സു ഗുണാഢ്യേഷു ശമവാനേവ രാജതേ ॥ (138)

(பொ) முதிர்ந்த அறிவுள்ளோர் தபசுவிகள் யாகதீக்ஷிதர்கள் பலத்தையுடைய அரசர்கள் சத்குணங்கள் நிறைந்தோர் இவர்களில் இச்சாந்தகுணமுள்ளபரிசுத்தவான்களே மேன்மையாய்ப்பிரகாசிப்பார்கள்.

ശമമൃതമിഹായാതാ യാതാ മഹത്ത്വം പരമം പദം സംപ്രയാതാഃ ।
രസ്തന്നയയാ മഹാനഹാവാഃ കൃതേനാവാപ്യസിദ്ധയേ തമേവ ॥ (139)

(பொ) சிரேஷ்டமாயும், பெரியோர்களால் இரகசியமாய்வைக்கப்பட்டதாயுமிருக்கிற சமாமிருதத்தையடைந்தமகானுபாவர்கள் எப்பதவியை அடைந்திருக்கிறார்களோ, ஹே ராமா? அப்பதவியை நீயுமடையும் நிமித்தம் அம்மார்க்கத்தையனுசரிக்கக்கடவாய்.

## 14-வதத்தியாயம் முமுக்ஷுப்பிரகரணம். விசாரலக்ஷணங்கூறல்.

---

ശാസ്ത്രാവബോധാമലയാ ധിയാ പരമപൂതയാ ।
കർതവ്യഃ കാരണജ്ഞേന വിചാരോऽനിശമാത്മനഃ ॥ (140)

(பொ) குரு வேதாந்தசாஸ்திரஜன்யஞானத்தாலும், தெளிவானபரிசுத்தமுள்ள நுட்பவறிவினாலும், பூர்வபக்ஷத்தைத்தள்ளி சித்தாந்தத்தைக்கிரகிக்கும் சுவபாவத்தாலும், ஆத்மசொரூபத்தின் விசாரணையைச்சார்வகாலமும் செய்யக்கடவன்.

വിചാരാത്തീക്ഷ്ണതാമേത്യ ധീഃ പശ്യതി പരം പദം ।
ദീർഘസംസാരരോഗസ്യ വിചാരോ ഹി മഹൗഷധം ॥ (141)

(பொ) அவ்வாத்மவிசாரணையால், புத்தி சூக்ஷுமதத்துவத்தையறிய யோக்கியமாகி நுட்பமான பரமபதத்தைத்தெரிசிக்கின்றது. இவ்விசாரணையே தீர்க்கசம்சாரவியாதிக்கு அரிதான ஔஷதமாம்.

അനഷ്ടം യത്കരോഷു ബഹുതേജസ്സ്വവിഹിതം ।
പശ്യത്യവ്യവഹിതം വിചാരശ്ചാരുലോചനം ॥ (142)

(பொ) அந்தகாரத்தில் மறையாததாயும், மிகுந்தபிரகாசத்திலொளிமங்காததாயுமிருக்கிற இவ்விசாரமாகிறநேத்திரத்தால், ஆத்மவஸ்துவைத்தடையின்றிபார்க்கக்கடவாய்.

[illegible]
[illegible] (143)

(பொ) நாமார், இத்தோஷமெப்படிப்பட்டது, சம்சாரம் நமக்கெவ்விதம் வந்ததென்ற நியாயத்தால் சதா ஆலோசிப்பதே விசாரணையாம்.

[illegible]
[illegible] (144)

(பொ) மேற்கூறியவிசாரத்தால்தத்துவஞானமுண்டாம். அத்தத்துவஞானத்தால் ஆத்மாவிடத்தில்விசிராந்தியுண்டாம். ஆகையால் சகலதுக்கநாசரூபமான சாந்தசுவபாவத்தை மனதிற்பழகக்கடவாய்.

## 15-வதத்தியாயம் முமுக்ஷுப்பிரகரணம். சந்தோஷ லக்ஷணங்கூறல்.

---

[illegible]
[illegible] (145)

(பொ) சத்துருகாதகனை ஹே ராமா, சந்தோஷமே மேலான சிரேயசு, சந்தோஷமே சுகம், மேற்கூறியசந்தோஷத்தையடைந்து பிர்மசொரூபத்தில் விசிராந்தியாயிருக்கக்கடவாய்.

[illegible]
[illegible] (146)

(பொ) எந்த மகான்கள் சந்தோஷமாகியவமிருதபானத்தால் சிரேஷ்டமான திருப்தியடைந்திருக்கிறார்களோ, அவர்களால் சகலபோகவிஷயமும் விஷமாகவே பார்க்கப்படும்.

[illegible]
[illegible] (147)

(பொ) அடையப்படாத வஸ்துவினுண்டாகிறவாசையை விட்டும், அடையப்பட்ட வஸ்துவில் சமமான புத்தியையுடையவனும், சந்தோஷவியசனமற்றவனும், யாதொருமகான் விளங்குவனோ, அவனே சந்தோஷத்தோடு கூடினவனென்று சொல்லப்படுவான்.

கூஶாலெவெயஸ்யவிஷயெஶஷிதெதஸஷொரஷஜிதெ ।
ஓாநெவக்கூவிவாதபெஶநஜூாநம்வூதிவிபவதி ॥ (148)

(பொ) களங்கமான கண்ணுடியிலெவ்விதம் தன்முகம் நன்ருய்விளங்காதோ அவ்விதம் ஆசையின் சுவாதீனப்பட்டதாயும் சந்தோஷமற்றதாயுமிருக்கிற மனதில் தன்னுத்மஞானம் நன்ருய் விளங்காது.

நாவிவாஞ்சத்யஸம்வூாவூம் வூாவூம் ஹலெஜயயாகூஒம் ।
யஸ்லுஸளஒஸஒாவாரஸ்லஷு ஐதிகயலெத ॥ (149)

(பொ) யாதொருமகான், தன்னையடையாததான விஷயத்தை இச்சியாமலும், பிராரப்தாதீனமாய்த்தன்னைவந்தடைந்தவிஷயத்தைப்புஜித்துக்கொண்டும், இவ்விரண்டிலும் சமபுத்தியுடன் கூடியிருக்கின்ருனே, அவனே சந்தோஷமுடையவனென்று கூறப்படுகிருன்.

ஶஒதயாஒதயாமணஶாவீநாம்வஊஷரிவிஹயஸ்லஒமம்கூ தः ।
தஒஒமம்வூணஒஜிநஹஸ்ூராகவிஒஹாஒநயொரவநீ ந ॥ (150)

(பொ) இப்புவியில் எம்மகான், சந்தோஷத்துடன் கூடியிருக்கிருனே அவனே குணசாலிகளுக்குள் சம்புத்தியுடன் கூடின புருஷராஜனென்று உதகரிக்கப்படுகிருன். நிர்மலனுயிருக்கிற அப்புருடனை ஹே ரகுநந்தனு, தேவகணங்களும், மகாமுனிகளும் வணங்குவார்கள்

16-வதத்தியாயம் முமுக்ஷுப்பிரகரணம். சாதுசங்கமகிமைகூறல்.

---

விஶெஷெண ஒஹாபவெஜ ஸம்ஸாரெரா த்தாரணெ நுணாம் ।
ஸவுதெதாவ கரொரா தீஹஸாயஸ்லாயஸஒாமஒ ः ॥ (151)

(பொ) மேலான புத்தியுடன் கூடின ஹே ராமா, ஜீவர்களுக்கு விசேஷமாக சம்சாரசமுத்திரத்தைக்கடப்பதற்கு இப்புவியில் மகான்களின் சேர்க்கையே முக்கிய உபாயமாகவிருக்கிறது.

ஸாயஸம்மதரொாஜூர்தம்விவெககஸஒஷீதம் ।
ரக்ஷிஜீயெஒஹார்தாரொநாஹாஜநஹெஷ்மஶீயः ॥ (152)

(பொ) எந்த விவேகிகள், சாதுசங்கமென்னும்விருக்ஷத்திலுண்டாகிற விவேகமாகிய புஷ்பத்தைப்பரிபாலனஞ்செய்துவருகிறார்களோ, அவர்களே மோக்ஷபலத்தை அடைவார்கள்.

[illegible]
[illegible] ॥ (153)

(பொ) மிகவும் அற்பமான அறிவைப்பூரணமாக்குவதாயும், விஷயங்களால்வரும் ஆபத்துக்களைச்சம்பத்தாக்குவதாயும், அமங்களமானமரணத்தைமங்களமாக்குவதாயுமிருக்கிற சிறந்த மகான்களின் சங்கமே முக்கியகாரணமாயிருக்கிறது.

[illegible]
[illegible] ॥ (154)

(பொ) ஆபத்தாகியதாமரைப்புஷ்பங்களுக்குப்பனிக்கட்டியாயும்,மோகமாகிற பனித்திவிலைகளுக்கு மாருதமாயுமுள்ளசாதுசங்கம் ஒன்றே இச்சகத்தில் மேன்மையாய்ப்பிரகாசிக்கின்றது.

[illegible]
[illegible] ॥ (155)

(பொ) புத்திக்கு மேலானஞானத்தை விருத்திபண்ணுவதாயும், அஞ்ஞானமாகியவிருக்ஷத்தை வேருடன்களைவதாயும், மனோவியாதிகளைப்போக்குவதாயுமுள்ள சாதுக்களின்சங்கம் மேலானதாயிருக்கிறதென்றறியக்கடவாய்.

[illegible]
[illegible] ॥ (156)

(பொ) சாதுசங்கத்தால்,மேலானவிவேகமாகிய தீபமானதுண்டாகிறது. உத்தியானவனத்தில்விளங்கிய புஷ்பபலங்கள்போல் சாதுசங்கமானது மனதிற்குச்சந்தோஷத்தைக்கொடுக்கிறது.

[illegible]
[illegible] ॥ (157)

(பொ) சாதுசங்கமாகிற ஐசுவரியம் அபாயமில்லாததாயும், கெடுதியற்றதாயும், இடைவிடாமல் விருத்தியடைந்துகொண்டிருக்கிற ஒழிவுரூபமான உத்தமபதவியைத்தருகின்றது.

[illegible] |
[illegible] || (158)

(பொ) மேலான கஷ்டத்தை அடைந்தவர்களாயும், அற்பபோகத்துடன்கூடிப்பரவசர்களாயுமிருக்கிறமனுஷ்யர்களால் ஒருக்காலும் நல்லோர் சேர்க்கை விடத்தகுந்ததல்ல.

[illegible] |
[illegible] || (159)

(பொ) இவ்வுலகில், சாதுசங்கதிகள் நன்மார்க்கத்தைவிளக்கிவைக்கும்தீபங்களாயும், அஞ்ஞானவிருளை அகற்றுவதான ஞானசூரியர்களாயும், பிரகாசிக்கின்றன.

[illegible] |
[illegible] || (160)

(பொ) எப்புருடர், அதிக குளிர்ச்சியுடன்கூடினசாதுசங்கமாகிற கங்காஸ்நானம் செய்திருக்கின்றன்ரோ அப்புருடருக்குத் தானம்செய்வதாலும் புண்ணியதீர்த்தாடனம்பண்ணுவதாலும் யாகங்களாலும் தபசாலும் ஒரு பிரயோசனமுமில்லை.

[illegible] |
[illegible] || (161)

(பொ) ஹேபாபரஹிதா, ஆசையற்றவர்களாயும், சகல சந்தேகங்களிழந்தவர்களாயும், ஹிருதயக்ரந்தியகன்றவர்களாயுமிருக்கிற மகான்களின்சமீபத்தில் எவர் வசிக்கின்றனரோ அவர்களுக்கு தீர்த்தாடனாதிகளாலும் கிருச்சிரசாந்திராயணாதி தபசுகளாலும் யாது பிரயோசனமுமின்று.

[illegible] |
[illegible] || (162)

(பொ) பிர்மசொரூபத்திலாறுதலான மனதுடையவர்களாயும், செய்யவேண்டியதைச்செய்துமுடித்தவர்களாயும், அடையவேண்டுவதைஅடைந்தவர்களாயுமிருக்கிற சாதுக்களின் சங்கமாகிய இரத்தினங்கள் முமுக்ஷுவானதரித்திரனல் வெகு முயற்சியுடன் அனவரதம் அபேக்ஷிக்கத்தக்கவைகள்.

ஸத்ஸங்கமஸமுத்பூதா ஸ்வாநுபூதிஸ்ஸதாம் ஸதி: |
கமலேவாப்ஸரோவ்யாப்தஸரஸ்யேவ விராஜதே || (163)

(பொ) அப்ஸரஸ்திரீகள்நிறைந்ததாமரைத்தடாகமானதெவ்வாறு பிரகாசிக்கின்றதோ அவ்வாறுசாதுசங்கச்சேர்க்கையாலுண்டான ஞானிகளின் சுவானுபூதி எப்பொழுதும் விளங்கிக்கொண்டிருக்கிறது.

தேநாமலவிசாரஸ்ய ப்ரஸ்யாத்மாவபோததா |
ப்ரதிதா யேந யத்நேந த்யக்தா ஸாதுஸமாகதி: || (164)

(பொ) நிர்மலவிசாரத்தாலுண்டான பிர்மாத்மானுபவமான சூடாமணியையளிப்பதாயும், பிரசித்தமாயுமிருக்கிற சாதுசங்கதியானது, எந்த தன்னியர்களாலும் திணப்போதும் விடத்தகுந்ததல்ல.

விதீர்ணஹ்ருத்க்ரந்தயஸ்ஸுஜ்ஞாஸ்ஸர்வஸம்மதா: |
ஸதேவாராத்யா ஸந்தஸ்ஸம்ஸாராம்போதிதாரகா: ||(165)

(பொ) ஹிருதயக்ரந்தியகன்றவர்களாயும், அறிவுடையோர்களாயும், மகான்கள் எல்லாராலுங்கொண்டாடத்தகுந்தவர்களாயும், சம்சாரசமுத்திரத்தில் வீழ்ந்து துக்கித்துக்கொண்டிருக்கிற புருஷர்களை ஞானமாகிய ஓடத்திலேற்றி மோக்ஷமாகிற கரைக்கு ஏகும்படி செய்பவர்களாயுமிருக்கிற சாதுக்கள், முமுக்ஷுக்களால் எவ்வித உபாயத்தினாலாவது பூஜிக்கத்தகுந்தவர்கள்.

த ஏதே நரகாக்நீநாம் ஸம்ஸாரோக்ஷேக்ஷணதாம் கதா: |
யேऽத்ருஷ்டா ஹேலயா ஸத்பிர் நரகாநலவாரிதா: || (166)

(பொ) எந்த அஞ்ஞானிகள், சாதுக்களால் விளையாட்டாகவாவது ஒருதடவையாகிலும் பார்க்கப்படவில்லையோ அவர்கள் நரகமாகிய அக்கினிக்கு உலர்ந்த கட்டைகளாக இருக்கின்றனர். சாதுக்களால் உபேக்ஷயினாலாவது பார்க்கப்படுவார்களேயானால் சம்சாரநரகரூபமான அக்கினிகளைச்சமனஞ்செய்கிற மேலான மேகங்களாயிருக்கின்றனர்.

தாரித்ர்யம் மரணம் து:கம் இத்யாதிவிஷயோத்ப்ரம: |
ஸம்ப்ரசாம்யத்யசேஷேண ஸாதுஸங்கமபேஷஜை: || (167)

(பொ) சாதுசங்கமென்னும் ஔஷதத்தால், தரித்திரமும், மரணமும், சரீரத்திற்குவரும் ஜன்னிபாதாதிசங்கடங்களும் ஸ்திரீபுத்திராதிதுக்கங்களும் விஷயமயக்கமும், நன்றாய் நிவர்த்திக்கப்படுகிறது.

ஸந்தோஷஸ்ஸாதுஸங்கஶ்ச விசாரோ(அ)த ஶமஸ்ததா ।
ஏத ஏவ பவாம்போதேருபாயாஸ்தரணே ந்ருணாம் ॥ (168)

(பொ) சமம் விசாரணை சந்தோஷம் சாதுசங்கமென்னும் இந்நான்கும், பிறவிக்கடலில் மூழ்கியிருக்கிற புருஷர்களைக்கரையேற்றிவைக்கக்கூடிய ஓடங்களாயிருக்கின்றன.

ஸந்தோஷ: பரமோ லாபஸ்ஸத்ஸங்க: பரமா கதி: ।
விசார: பரமம் ஜ்ஞானம் ஶமோ ஹி பரமம் ஸுகம் ॥ (169)

(பொ) சந்தோஷமே மேலான இலாபமாயும், சாதுசங்கமே மேலான கதியாயும், விசாரமே மேலான ஞானமாயும், சமமே மேலான சுகமாயும் விளங்குகிறது.

ஸத்ஸங்கஶமஸந்தோஷவிசாரஸ்ஸுவிசாரிதம் ।
ப்ரவர்தந்தே ஶ்ரேயஸே ஸ்து வாஹநாநீவ ஸாகரே ॥ (170)

(பொ) எவர்கள், சத்சங்கம் சந்தோஷம் ஆத்மானாத்மவிசாரங்களாலும், ராகத்துவேஷாதிகளாகியமுதலைகளாற்கெடுக்கப்படாதவிசாரணையாலும், நன்றாய் பிர்மபிராப்தியடைந்திருக்கின்றனரோ அவர்கள், சம்சார சாகரத்தில் மூழ்கிக்கரையேற மார்க்கமற்று தன்னைச்சரணாகதியடைந்திருக்கும் உத்தமர்களான விவேகிகளை ஞானமாகிய ஓடத்திலேற்றி அலையற்றதான சமமாகிய நன்மார்க்கத்தால் மோக்ஷமாகியகரையையடையும்படி ஞானமென்னும் ஓடங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஏகைகம் வா ஏகைவஸர்வேஷாம் ப்ரஸவ ஹரிஹ ।
ஸர்வம் ஸம்பத்யதே தஸ்மாத்ஸ்வைகம் ஸமாஶ்ரயேத் ॥ (171)

(பொ) ஹே ராமா சமமுதலான இந்நான்கினுள் ஒன்றையாவது சுவாதீனம் செய்துகொள்வீரேயானால் அந்நான்கும் சுவாதீனமாகுமென்பதிலையமில்லை. அந்நான்கும் சகல நன்மைக்குமுற்பத்திபூதங்களாயிருப்பதால் பிர்மசாக்ஷாத்காரத்தையடையும் பொருட்டு அவைகளிலொன்றையாவது ஆசிரயிக்கக்கடவீராக.

அ—கை:— சாதன சதுஷ்டயமடைந்தவனையும், விவேகம் நிறைந்தவனையும், சரணாகதியடைந்தவனையுமிருக்கிற உத்தமசிஷ்யனுக்கு உபதேசக்கிரமங்கூறுகின்றனர்.

பிர்மானந்தயதீந்திரசிஷியரான கிருஷ்ணயதீந்திரரால் கைவல்லிய தீபிகை தத்துவப்பிரதீபப்பிரகரணத்தில் 19வது சு—24வது சு வரை கூறியவாறு.

வத்ஸாயாஹ்யிஶாஶகஶ்ரண்வஶஸ்ஶஹேக்ஷெஶாஷெயாஸிதா ஷெஶத்ஷ்ஹாவஷநெஶஜநவஸஶத்ஷ்ாஶஹஶஜ்ஷ்ாதஶாஃ। தெவகுா நிஶ்யஶதவாஸதஶீதாஸூத்காஶெவமாஷயஶ்ோஞ்ஷ்யாவஷஹம்வஶஶிவ ஜதிஜ்ஞாநஹவிஜஞ்ஷீ ॥ (172)

(பொ) ஹே குழந்தாய் சாவதானமாய்க்கேட்கக்கடவாய், பரப்பிர்மைக்கிய ஞானமற்றவர்களாயும், தேகாதிகளில் நானென்ற அபிமானமுள்ளவர்களாயுமிருக்கிற ஜீவர்கள், (ஜலமிரைக்கும் ஏற்றச்சால்போல்) அடிக்கடி ஜனன மரணமாகிய துக்கங்களையடைந்து மயங்கி இருக்கிறார்கள். எவர்கள் நான் பரமாத்மாவென்ற ஞானத்தை எவ்வளவுகாலம்வரை அடையவில்லையோ அவ்வளவுகாலம் நீங்காத சுழற்காற்றிலகப்பட்ட திருணம்போல் கீழ் மேலான இகபரலோகங்களிற்சுற்றி ஒழியாதகாலசக்கிரமான சுழியிற்சுழலாநிற்பர்.

ஷுஞ்ஷாயாஶீஶம்ஹவிவிஶயவஶாவெத்ஷெதஷ்ய்ஶஸ்ாக ஹஶக்ஷாஶஹெஷ்வதிஷநஜிஜநிஶதிஶதாஶ்ஶதசக்ஷெண்ந। வெஹஶக்ஷாஶஹெஷ்வதிஷநஜ்ஜநிஶதாஶ்ஶஷெதஸக்ஷெண்ந। ஷெதஹஶதவிஹதிஃக்ஷுகாஶெவிநஶநம்யஷ்ாஜ்ர ஸ்ஷெஷ்ணாஶஹஶதவிஹதிஃக்ஷகாவம் ஷாம் ஸஶவஶணஶநஹிதவவிஹதிஃக்ஷ ஷெஶத்ஷ்ஹஷ்ாக்ஷ்ஷதபஹஶவிநயஃவ்ஷஷவஷம்ஶெயாக்ஷம் ॥ (173)

(பொ) இம்மனுஷ்யலோகத்தில்உத்தமமுமுக்ஷுவான விவேகி தானை அகண்டாநந்தலக்ஷணராயும் சகலவிகற்பாகூடஸ்தரையும், சோதிததத்பதார்த்த சிரவணதிமகாவாக்கியவிசாரத்தால் திஷ்டானராயுமிருக்கிறபரமாத்மாவையும், சாக்ஷாத்காரமாய் உணர்ந்தானேயானால் அக்கூட (அந்த பிர்மமே நானென்று) அக்ஷணத்திலேயே ஜன்மாதிபந்தத்தினின்றும் விடுபடுஸ்தரேதானய் பிர்மமாய், திரிவிதபரிச்சேதரகிதராயுமிருக்கிற சர்வவியாபகமான ஆத்மாவாயும், ஆகையால் வான். உனக்கு ஜகத்துற்பத்தி நாசபகமான பிர்மத்தை நீ நன்றாய் அறிவையேயானால் நீயும் யாதொருபக்தியால் விநயத்துடனெகாலத்திலும் ஒருகெடுதியும்வராது. மோக்ஷசாதனமடையுமார்க்கத்தைக்காண்பிக்கவேண்டுமென்னை அடைந்து க்கேட்டநிமித்தம் என்றால் மேற்கூறியவாறு தத்துவம்கூறப்பட்டது.

(ப-ம்) (ஜ்ஞாக்ஷா) என்று எங்கெங்குகூறியிருக்கின்றதோ அதை இங்கு கூறுகின்றோம்.

## சுவேதாசுவதர உபநிஷத் 1-வது அத்தியாயம் 11-வது வாக்கியம்.

𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵𑌂𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌶𑌾𑌪𑌹𑌾𑌨𑌿𑌃
𑌕𑍍𑌷𑍀𑌣𑍈𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑍈𑌰𑍍𑌜𑌨𑍍𑌮𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌪𑍍𑌰𑌹𑌾𑌣𑌿𑌃 ॥ (1)

பரமாத்மசொரூபமானதேவனை அறிந்தவன் சகலபாசங்களினின்றும் விடுபடுவான், சர்வதுக்கங்களும், ஜன்மமிருத்தியுக்களும் நாசமாகும்.

## ஷை உபநிஷத் 2-வது அ—ம் 14-வது வாக்கியம்.

𑌅𑌜𑌂𑌧𑍍𑌰𑍁𑌵𑌂𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵𑌂𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇𑌸𑌰𑍍𑌵
𑌪𑌾𑌶𑍈𑌃 । (2)

உத்பத்தியற்றவராயும், நித்தியராயும், சர்வதத்துவங்களினின்றும் விடுபட்டவிசுத்தராயுமிருக்கிற சுவயம்பிரகாசரானதேவனை அறிந்து சகலபாசங்களினின்றும் விடுபடுகிறான்.

## ஷை உபநிஷத் 4-வது அ—ம் 14-வது வாக்கியம்.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌕𑌂𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌰𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌶𑌿𑌵𑌂𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌤𑌿 ॥ (3)

சகலஜகத்வியாபகராயும் ஸ்வகதபேதமற்றவராயுமிருக்கிறசிவனையறிந்து மிகவும் உபசாந்தியை அடைகிறான்.

## ஷை உபநிஷத் 5-வது அ—ம் 13-வது வாக்கியம்.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌕𑌂𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌰𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵𑌂𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇𑌸𑌰𑍍𑌵
𑌪𑌾𑌶𑍈𑌃 ॥ (4)

சகலநாமரூபஜகத்தில் வியாபகராயும், ஏகராயுமிருக்கிறதேவனை அறிந்து ஸ்திரீபுத்திராதிசமஸ்தபாசங்களிலிருந்தும் விடுபடுவான்.

## ஷை உபநிஷத் 6-வது அ—ம் 6-வது வாக்கியம்.

𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌹𑌂𑌪𑌾𑌪𑌨𑍁𑌦𑌂𑌭𑌗𑍇𑌶𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌮𑌮𑍃𑌤𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌧𑌾𑌮 । (5)

தர்மங்களை வகிக்கிறவராயும் பாபங்களைப்போக்கடிக்கிறவராயும் சகலதே

வாதிகளாலும் பூஜிக்கத்தகுந்தவராயுமிருக்கிற ஈசனை அறிந்து, ஜகத்திற்கு அதிஷ்டானராயும், அமிருதசொரூபராயுமிருக்கிற ஆத்மசொரூபரை அறியவேண்டும்

## கைவல்லியோபநிஷத்.

[illegible]
[illegible] ॥ (6)

ஞானேந்திரியபஞ்சகம் கர்மேந்திரியபஞ்சகம் பிராணபஞ்சகம் அந்தக்கரணபஞ்சகம் அஸ்தியாதிவிகாரஷட்கம் பூதபஞ்சகம் மாயை அவித்தை ஈச ஜீவர்கள் ஆக 35 தத்துவங்களுடன்கூடின ஜாக்கிரதாவஸ்தை, மேற்கூறிய சூக்ஷ்மசரீரசம்பந்தமான 20 தத்துவங்களுடன்சேர்ந்த சுவப்பனவஸ்தை, 4 தத்துவத்துடன்கூடின சுஷுப்தியவஸ்தை இவைமுதலியபிரபஞ்சமானது யாதொருபிர்மவஸ்துவால் பிரகாசிக்கின்றதோ அந்தபிர்மமே நாமென்றுணர்ந்து சகலபந்தங்களினின்றும் விடுபடுகிறான்.

## அமிருதபிந்தூபநிஷத்.

[illegible] ।
[illegible] ॥ (7)

தத்பதலக்ஷியார்த்தமாயும், களங்கமற்றதாயும், நிர்விகற்பமாயும் அஞ்ஞானமற்றதாயும் சர்வவியாபகமாயுமிருக்கிற அந்தபிர்மமே நானென்றுணர்ந்தவன் நிச்சயமாய் அந்தப்பிர்மத்தையடைகிறான்.

[illegible] ।
[illegible] ॥ (8)

விகற்பமற்றதாயும் தேசகாலவஸ்துக்களால் நாசமுறாததாயும் காரணம் திருஷ்டாந்தமற்றதாயும் விஷயமாகாததாயும் அனாதியாயுமிருக்கிற வஸ்துவை அறிந்த விவேகிசம்சாரபந்தத்திலிருந்து விடுபடுகிறான்.

## தேஜோபிந்தூபநிஷத் 1-வது அத்தியாயம்.

[illegible] ।
[illegible] ॥ (9)

எவர்கள் சுத்தவிருத்தியின் தர்மத்தையறிந்தவர்களாயும் பிர்மசொரூபத்தை உணர்ந்து ஞானவைபவத்துடன்கூடினவர்களாயுமிருக்கிறார்களோ அவர்களே இப்புவியில் சத்புருஷர்களென்றும் தன்யர்களெனவும் மூவுலகத்தும் நமஸ்கரிக்கப்படுவார்களென்றும் கூறப்படுகின்றனர்.

## நாரதபரிவ்ராஜகோபநிஷத் பஞ்சமோபதேசம்.

𑌤𑌦𑍇𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌂 𑌵𑌿𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌚𑌾𑌰𑌪𑌰𑍋 𑌨 𑌭𑌵𑍇𑌤𑍍 । (10)

ஸச்சிதானந்தலக்ஷணமான பிர்மத்தையறிந்து சொரூபானுசந்தானபரனுயிருக்கவேண்டுமேயொழிய வேறுவித வியாபாரபரனுயிருக்கக்கூடாது.

𑌤𑍁𑌰𑍀𑌯𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑌿𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌵 𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌯 𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌂 𑌯𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌿𑌵 𑌯𑍋 𑌵𑌸𑍇𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌤𑌾𑌦𑍃𑌗𑌵𑌸𑍍𑌥𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌸 𑌜𑍀𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 । (11)

நான்காவதாயும் அக்ஷரமாயுமிருக்கிற பரமாத்மசொரூபத்தையறிந்து, ஜாக்கிரதாவஸ்தையில் சுஷுப்தியவஸ்தையையடைந்தவன்போல் எதெது கேட்கப்பட்டாலும், எதெது பார்க்கப்பட்டாலும், சகலவஸ்துக்களையும் அறியாதவன் என எவன் வசித்துக்கொண்டிருக்கிறானோ அவன் சுவப்னவஸ்தையிலுங்கூட சுஷுப்தியடைந்தவனென்றும் அவனே ஜீவன்முக்தனென்றும் உபநிடதங்கள் கூறுகின்றன.

## மஹோபநிஷத் 4-வது அத்தியாயவாக்கியம்.

𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌦𑍇𑌶𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑍍𑌯𑌾 𑌚 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑌾 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑍋 𑌭𑌵𑍇𑌨𑍍𑌮𑍁𑌨𑌿𑌃 ॥ (12)

ஆசாரியோபதேசத்தாலும் வேதாந்தசாஸ்திரத்திற்கூறியமார்க்கத்தாலும் தன்சுவானுபூதியாலும் அறிவு ரூபனான தன்னிடத்தில் அந்த பிர்மமே நானென்றுணர்ந்த முனியானவன், துக்கமற்றவனுயிருக்கிறானென்றுங்கூறப்படுகிறது.

அவ்வாறு பகவத்கீதையாகியஸ்மிருதியிலுங்கூறப்படுகிறதாவது :—

## பகவத்கீதை 4-வது அத்தியாயம் 35-வது சுலோகம்.

𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑍋𑌹𑌮𑍇𑌵𑌂 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 ।
𑌯𑍇𑌨 𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌥𑍋 𑌮𑌯𑌿 ॥ (13)

ஹே பாண்டவ, எந்த ஞானமானது என்னால் உபதேசிக்கப்பட்டதோ அந்த ஞானத்தையடைந்தாயேயானால் மீளவும் நீ மோகத்தையடையமாட்டாய். நானுரைத்த ஞானத்தால் பிர்மாதிஸ்தம்பமீறாயுள்ள சகலப்பிராணிகளும் ஆத்மாவான என்னிடத்திலிருப்பதாய்ப்பார்க்கக்கடவாய்.

## 5-வது அத்தியாயம் 29-வது சுலோகம்.

𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌜𑍍𑌞𑌤𑌪𑌸𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌸𑍁𑌹𑍃𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ (14)

யக்ஞதபசுகளின் கர்த்திருதேவதாரூபமாயும் சகலலோகங்களுக்கும் ஈசனாயும் சகலப்பிராணிகளின் பிரத்தியுபகார நிரபேக்ஷனாசினேகிதனாயும் அல்லது சமஸ்தபிராணிகளின் ஹிருதயத்தில் வசிப்பவனாயும், அல்லதுகர்மபலத்திற்கெஜமானனாயும் (அல்லது சர்வவிஷயசாக்ஷியுமாயிருக்கிற)(நாராயணனான) என்னை யறிந்து சகல்சம்சாரத்தினின்றும் ஒழிவையடையக்கடவாய்.

## 7-வது அத்தியாயம் 2வது சுலோகம்.

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍇𑌹𑌂 𑌸𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌦𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌨𑍇𑌹 𑌭𑍂𑌯𑍋𑌨𑍍𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑌵𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ (15)

எந்த ஞானத்தை நீ அறிந்து, இவ்விடத்தில் திரும்பவும் அறியவேண்டுவதொன்றுமில்லையோ அந்த அபரோக்ஷஞானத்தையும், இனிக்குறைவின்றி யான் உனக்குபதேசிக்கப்போகின்றேன்.

## 9-வது அத்தியாயம் 1-வது சுலோகம்.

𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌤𑍇 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌨𑌸𑍂𑌯𑌵𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌹𑌿𑌤𑌂 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 ॥ (16)

இந்த ஆத்மக்ஞானம் மிகவும் அதிரகசியமாயுள்ளது அந்த ஞானம் சுவானுபூதியுடன்கூடினது. அந்தச்சுவானுபவஞானத்தை நீ அடைந்து எந்த சம்சாரபந்தத்தினின்றும் விடுபடுவாயோ அந்தபிர்மஞானத்தை அசூயையற்றவனான உன்பொருட்டு இனிக்கூறப்போகிறேன்.

வ௱ஂஹ-ஙூயஃவ௺வக்ஷ௵ாரிஜ்ஞா ௩ாஂஜ்ஞா ௩ஶ௱க்ஷஶஂ ।
யஜ்ஜ்ஞாக்வாஶ௱௩யஹ்ஸவெ௳வ௱ாஂஹிஙிஶிஉெதா௩தாஃ ॥ (17)

எந்தஞானத்தை மனனசீலர்களான மகரிஷிகளடைந்து தேகபந்தத்தினின்றும்விடுபட்டு மேலான மோக்ஷசித்தியையடைந்திருக்கின்றனரோ, எந்த ஞானமானது உலகத்தில் கூறப்படுகிற சகலஞானங்களுக்கும் உத்தமமாயும், பரவஸ்து விஷயமாயுமிருக்கிறதோ அந்த பிர்மஞானத்தை முந்தின அத்தியாயங்களில் வெகுவாய்க் கூறப்பட்டிருந்தாலும் இந்த அத்தியாயத்திலும் கூறுகின்றேன்.

## அத்தியாத்ம ராமாயனம் யுத்தகாண்டம் 6-வது சர்க்கம்.

க்ஷஶவெ௵வஂஸஉாத்தாநஂவிவாய௳நிஹஶெதஜ்யஃ ।
ஸ௺க்ஷ௺ெத௱௩௵ஶாத்தாநஂஜ்ஞாக்வாஶ௱க்ஷாஹவிஷ௵தி ॥ (18)

ராவணனை நோக்கி காலநேமியென்பான் கூறுகிறான் ஹேராவணாநீயும் எப்பொழுதும் இந்திரியங்களை ஜயித்தவனாயிருந்துகொண்டு, ஆத்மாவை விசாரித்து மூலபிரகிருதிக்கப்புறப்பட்ட பரமாத்மாவே தானென்றுணர்வையே யானல், சம்சார பந்தத்தினின்று விடுபடுவாய் என்று வெகுவாய் சுருதிஸ் மிருதிகளில் ஞானத்தையடைந்தவன் சகல பந்தங்களிலிருந்தும் விடுபடுவானெனக் கூறியிருந்தாலும்) இங்ஙனம் எளிதிலுணரும் வண்ணம் சுருக்கிக்கூறப்பட்டது.

ஶாஂவிஜ்ஞாயஜஃஂ௩௱ெ௱ாஹ௺ஜிஹவாஂெ௩தஉஃவெ௺ாக்ஷவா௩வெ௳
ஜ்ஞாதநிஜஹ்ஸ௱-ஙூவ௩தயொௌெகஹவஜ௵ாத௱ாஃ ।
உத்திக்ஷயஶாஷி௩ஃகயஶஹெஷாநிஷ்யிஸ௵தக்ஷஂஶஶபெ௺-ஙூஹிக்வ உஉ
வஂகஜஂ௩தவதாஂஹ-ஙூயொ௩உ௱ஃவஂக்ஷவிக ॥ (174)

(ஸெபா) எனது குருவே அடியேனைமூடனாகத்திருவுள்ளத்தெண்ணியோ இவ்வார்த்தைசொன்னீர்? தம்மைத்தாமறியாதமனுடர் தரணியில் யாரேனுமொருவருளரோ? பின்னை அவர்களெல்லாம் ஜனித்துமரித்து உழல்வதேன்? உம்முடையபாதகமலங்களை நம்பினவெனக்கு இனிதுக்கமுண்டாகாமலிருக்கும்படியாயன்னிச்சயத்தை உள்ளவாறு உபதேசிக்கக்கடவீர்.

க்ஷயஉெஉெஹாஉெஹ௵வ௵யஶிதியஉாய௳ாஷிஜிதவாஹ௱ெ௱யொவா
ௌெகஸத௱ஹவதிபெ௱ஜாத்தவிஹவஃ ।
௩௱௱ாவிஷ௰ஂவாவிஷ்யஶயஜ௩ாஉெஷவவ௱ஷொநிஜாத-ஙூௌ

ஜ்ஞாஸ்ரீத்யஉவிஜஹாஸொாஸவிஉநா: ॥ (175)

(பொ) (கடாதிகள்போல்) பிரத்தியக்ஷமாயறியப்படுவதாயும் அனாத்மா வாயுமிருக்கிற இது, தேகம். இதற்கு அன்னியனுயும் அறிபவனுயுமிருக்கிற இவன் இத்தேகத்திற்கு வேருயுள்ள ஆத்மாவானதேகி. இவ்வாறு ஜடசித்துக் க்களைப்பிரித்தறிபவன்யாவனே அவ்விவேகியே தன்னைபிர்மமென்றறிந்தவனுகுவ னென்றும், இதுவே (க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞக்ஞானமென்றும்) ஆசாரியரருளி ச்செய்தார். இவ்வார்த்தையையுணராதமாணக்கன் இத்தூல உடலைக்காட்டிலும் வேறுவிலக்ஷணமாயுள்ளவஸ்துவையான் காணேனென்றான். அதைத்திருச்செ விசாற்றியவாசான் பீழையும் நகையுங்கொண்டார்.

(ப-ம்) (ஜஹாஸொாஸவிஉநா:) பீழையுமென்பது முன்னிச்சீடன் வைராக்கியாதி சம்பத்தையும் விவேகத்தையும் அடைந்தும், நம்முன்புலப்பட்டும் அக்ஞானவலிமையால் தேகமின்னது தேகியின்னதென்றறியாமலிருக்கும்படிசெ ய்யப்பட்டிருக்கிருனேயென்று (அக்ஞானத்தைநோக்கித்துக்கித்ததாம்).

நகையுமென்பது அநேககோடிஜீவர்கள் அனாதியாயிருக்கிற அவித்தியா வாசனையிற்கட்டுண்டு புண்ணியபாபமிசிரகர்மத்தால் தேவதிரியக்மனுஷ்யாதிஜன் மங்களையடைந்து சுகலேசமின்றி விஷயத்தில்மூழ்கி உண்டதே உறுதிகண்டதே சாக்ஷியென்று நம்பித்துக்கிக்கிறவனேகம்பேர்களுக்குள், இவ்வொருவனுவது நம் மிடம்வந்து தேகம் தேகிகளை இன்னதென்றுதெரிந்துகொள்ளக்கருதிக்கேட்டன னேயென்றெண்ணி சந்தோஷித்தாரென்பதாம்.

ஜஹாஉஜத்ராநாஷுஜஹீதிஜத்வஂஷுஜகொவாஜத்திஸவஂ
விகாரஂ । ஸவுளகொவாஸஜத்ஜத்வாஜவொயஜ
ஹாத்ஜக்ஷஜஜஸ்ஜாதஂவஉஷு ॥ (176)

(பொ) தேகத்தைக்காட்டிலும் வேறுதேகியான ஆத்மாயார்? அவரை யான்காணேனென்றாய், மயக்கமான சொப்னவஸ்தையிலுண்டான சகலவிகாரத் தையும் சாக்ஷியாயறிந்திருப்பவன்யார் சொல்? தோற்றமற்றதான சுஷுப்தியவஸ் தையைக்கண்டவன் யார்? நனவில் சப்தாதிவிஷயங்களையறிவாகிற்கும் அறிவு தான் யாது? நீ சொல்வாயாக.

ஜாஜதாஜெஸகுவிஷயாநக்ஷஜாஜெதஹிஜாஜெநஷுஜெவஸ்ா
ஜாநாஜெவஂஜதிஜிநஉ । ஜாநாஜெவஂஜதிஜிநஉ
உஹஉவிதயாஸவுீகாஜெநகிஜிசு । ஜாநாஜெவஂஜதிஜிநஉ
யாவஜஹாஜஜாஜெநகிஜிஹாதஂகிஜஸவஜிஜெவஜஜஹித

ஸம்ஹாரத: ॥ (177)

(பொ) ஹே தேசிகேந்திரா, ஜாக்கிரதாவஸ்தையில் சுரோத்திராதி இந்திரியங்களால் கிரகிக்கப்பட்ட சப்தாதிவிஷயங்கள்யாவையுமறிந்ததும், யானறிந்த ஜாக்கிரத்திலுள்ள நினைவுகளொழிந்து சொப்பனாவஸ்தையின்கண் அஸ்திரமான சப்தாதிவிஷயங்களையறிந்ததும், சுஷுப்தியவஸ்தையில் மூலாக்ஞானவிருளையறிந்ததும், இத்தேகத்திற்கன்னியமான ஒருதேகியிருப்பதுபோலும் தினமனுபவிப்பதொக்கும், அஃதுள்ளவாறு சர்வகாலமும்தோற்றவில்லை, சற்றுமனதிலுதிக்கும் பின்மறைக்கும் அதின்னதெனயதார்த்தமாய் அருளிச்செய்வீராக என கைவல்லியதீபிகை தத்துவபிரதீபப்பிரகரணம் 19-வது சுலோகம் முதல் 24 வரை.

## அ—கை. இவ்விதம் வினவிய சீடனுக்கு சிருஷ்டிகிரமம் கூறப்படுகிறது.

---

சிதானந்தமயப்ரஹ்மப்ரதிபிம்பஸமன்விதா ।
தமோரஜஸ்ஸத்வகுணா ப்ரக்ருதிர்த்விவிதா ச ஸா ॥ (178)

(பொ) ஸச்சிதானந்த பிர்மத்தின் பிரதிபிம்பத்துடன் கலந்து சத்துவ ரஜசதமோகுணங்களுடன் கூடியிருப்பதே மூலப்பிரகிருதியென்றறி, அம்மூலப் பிரகிருதியுமிரண்டுவிதமாயிருக்கிறது.

ஸத்வஶுத்த்யவிஶுத்திப்யாம் மாயாவித்யே ச தே மதே । (178½)

(பொ) சுத்தத்தோடும் அசுத்தத்தோடும் கலந்திருப்பதால், மாயையென்றும், அவித்தையென்றும் அவைகள் முறையேசொல்லப்படுகின்றன.

மாயாபிம்போ வஶீக்ருத்ய தாம் ஸ்யாத்ஸர்வஜ்ஞ ஈஶ்வர: ।
அவித்யாவஶகஸ்த்வன்யஸ்தத்வைசித்ர்யாதநேகதா ॥ (179½)

(பொ) மாயையில் பிரதிபலித்தசைதன்னியம், அம்மாயையைசுவாதீனஞ்செய்துகொண்டு ஸர்வக்ஞனை ஈசனாகவிருக்கிறார். அவருக்கன்னியமாய் அவித்தையில் பிரதிபலித்தசைதன்னியமான ஜீவனோவெனில் அவித்தைக்குவசமாய் அவைகளின் விசித்திரத்தால் வெகுவிதமானான்.

ஸா காரணஶரீரம் ஸ்யாத்ப்ராஜ்ஞஸ்தத்ராபிமானவான் ॥ (180)

(பொ) அந்த அவித்தையே காரணதேகமாயாகிறது. அக்காரணதேக

த்தையபிமானிப்பவன் பிராக்ஞனாகவாகிறான்.

தம:ப்ரதா⁴நப்ரக்ருதேஸ்தத்³போ⁴கா³யேஶ்வராஜ்ஞயா ।
வியத்பவநதேஜோம்பு³பு⁴வோ பூ⁴தாநி ஜஜ்ஞிரே ॥ (181)

(பொ) அப்பிராக்ஞர்களின் போகத்தின்பொருட்டு ஜகத்காரணமான தமோகுணமாயையினின்று ஈசனாக்ஞையால் வான், காற்று, தீ, நீர், மண்முதலிய ஐம்பூதங்களுண்டாயின.

ஸத்த்வாம்ஶை: பஞ்சபி⁴ஸ்தேஷாம் க்ரமாத்³தீ⁴ந்த்³ரியபஞ்சகம் ।
ஶ்ரோத்ரத்வக³க்ஷிரஸநக்⁴ராணாக்²யமுபஜாயதே ॥ (182)

(பொ) அப்பூதங்களின் சத்வகுணவியஷ்டிபாகங்களான ஐந்தால் ஞானேந்திரியபஞ்சகம் கிரமமாக செவி, துவக்கு, கண், நாவு, நாசிகையென்றநாமங்களோடுண்டாயின.

தைரந்த:கரணம் ஸர்வைர்வ்ருத்திபே⁴தே³ந தத்³த்³விதா⁴ ।
மநோ விமர்ஶரூபம் ஸ்யாத்³பு³த்³தி⁴: ஸ்யாந்நிஶ்சயாத்மிகா ॥ (183)

(பொ) சமஸ்தங்களாயிருக்கிற அந்த சத்துவசமஷ்டியால் அந்தக்கரணமுண்டாயின. விருத்திபேதத்தால் அந்த அந்தக்கரணமே இருவிதமாயிற்று. ஆலோசனரூபமாயிருப்பதுபற்றிமனமென்றும், நிச்சயரூபமாயிருப்பதுகொண்டு புத்தியென்றும், பெயருடையதாயிருக்கிறது.

ரஜோம்ஶை: பஞ்சபி⁴ஸ்தேஷாம் க்ரமாத்கர்மேந்த்³ரியாணி து ।
வாக்பாணிபாத³பாயூபஸ்தா²பி⁴தா⁴நாநி ஜஜ்ஞிரே ॥ (184)

(பொ) அப்பூதங்களுடைய ஐந்தாயிருக்கிற ரஜோகுணவியஷ்டிபாகங்களால் முறையாய் கர்மேந்திரியங்களான வாக்கு, கை, கால், பாயு, குகியமெனநாமங்களுடனுண்டாயின.

தை: ஸர்வை: ஸஹிதை: ப்ராணோ வ்ருத்திபே⁴தா³த்ஸ பஞ்சதா⁴ ।
ப்ராணோ(அ)பாந: ஸமாநஶ்சோதா³நவ்யாநௌ ச தே புந: ॥ (185)

(பொ) சமஸ்தங்களாயிருக்கிற ரஜோகுணசமஷ்டியால் பிராணவாயுவுண்டாயிற்று. தொழிற்பேதத்தால் அப்பிராணவாயுவே பிராணனென்றும், அபானனென்றும், சமானனென்றும், உதானனென்றும், வியானனென்றும் ஐவிதங்களாயிருக்கின்றன.

बुद्धिकर्मेन्द्रियप्राणपञ्चकैर्मनसा धिया ।
शरीरं सप्तदशभिः सूक्ष्मं तल्लिङ्गमुच्यते ॥ (186)

(பொ) ஞானேந்திரியம் ஐந்து. கர்மேந்திரியம் ஐந்து. பிராணாதிகள் ஐந்து. இவைகளோடும் மனம் புந்தி 2-ம்இப்பதினேழும் கூடியவையாதோ, அதுலிங்கதேகமென்றும், சூக்குமசரீரமென்றும் சொல்லப்படுகிறது.

प्राज्ञस्तत्राभिमानेन तैजसत्वं प्रपद्यते ।
हिरण्यगर्भतामीशस्तयोर्व्यष्टिसमष्टिता ॥ (187)

(பொ) சுஷுப்தியபிமானியான பிராக்ஞன் அந்த சூக்குமதேகத்தில் தாதாத்மியாபிமானத்தால் தைஜஸனென்றநாமமடைகிறான். மாயையில் பிரதிபலித்த ஈசன் அதிலபிமானித்து ஹிரண்யகர்ப்பராகிறார். அவ்விருவர்களுக்குள் பேதமேதெனில் வியஷ்டி சமஷ்டிகளே பேதமாம்.

समष्टिरीशः सर्वेषां स्वात्मतादात्म्यवेदनात् ।
तदभावात्ततोऽन्ये तु कथ्यन्ते व्यष्टिसंज्ञया ॥ (188)

(பொ) சர்வத்தையும் தானாய்ப்பார்க்கிறஏகத்துவஞானத்தால்ஈசுவரன் சமஷ்டியபிமானி ஆகினர். அவரைக்காட்டிலும் அன்னியமாயிருக்கிற ஜீவர்கள் அச்சர்வாபிமானமற்றதால் வியஷ்டியபிமானிகளாய்ச்சொல்லப்படுகின்றார்கள்.

(யுக்தி) (1) பட்டணம்போல் சமஷ்டி. கிராமம்போல் வியஷ்டி.
(2) வனம்போல் சமஷ்டி. விருக்ஷம்போல் வியஷ்டி.
(3) அரசன்போல் சமஷ்டி. பிரஜைகள்போல் வியஷ்டி.
(4) கங்கைபோல் சமஷ்டி. கடஜலம்போல் வியஷ்டி.
(5) மண்போல் சமஷ்டி. கடங்கள்போல் வியஷ்டி.
(6) சூத்திரம்போல் சமஷ்டி. மணிகள்போல் வியஷ்டி.
(7) கிரகஸ்தன்போல் சமஷ்டி. பிரமசாரிபோல் வியஷ்டி.

இவைகள்போல் ஜீவேசுவரர்கள் மகதுபாதியால் சமஷ்டியும், அற்போபாதியால் வியஷ்டியும் பொருந்தியிருக்கின்றனர்.

[illegible] ।
[illegible] ॥ (189)

(பொ) பின்னும் அச்சீவர்களின் போகத்தின்பொருட்டும், போக்கியவஸ்துக்கள் ஜராயுஜாதிசரீரங்களுற்பத்தியின்பொருட்டும், சமஸ்தசெல்வமும், சர்வ வல்லமையும், சகலகீர்த்தியும், சர்வசக்தியும், வைராக்கியமும், அபரோக்ஷஞானமும் நிறைந்தபகவானுன ஈசன் ஆகாசாதிபஞ்சபூதங்களொன்ருென்றையும் பஞ்சீகரணம் செய்தார்.

## அ—கை. அப்பஞ்சீகரணமாவதேதெனில்.

---

[illegible]
[illegible] ॥ (190)

(பொ) ஒவ்வொருபூதத்தையுமிரண்டாகச்செய்து பின்னும் முதலாவது பாகத்தை நான்கு நான்காய்ச்செய்து தன் தன்பாகத்திற்கன்னியங்களானவிரண்டுபாகங்களோடுசேர்த்ததால் அப்பஞ்சபூதங்கள் ஐந்தைந்தாகவாயின.

[illegible] । (190½)

(பொ) அப்பஞ்சீகரணம் செய்தபூதங்களால் அண்டமுண்டாயிற்று. அப்பிர்மாண்டத்தில் அதலாதி பதினுங்குலோகங்களும், அவைகளில் பிராணிகள் புஜிக்கயோக்கியமான அன்னுதிகளும், அந்தந்தலோகங்களுக்குசிதமான சரீரங்களும், ஈசுவராக்ஞையால் உண்டாயின.

[illegible] ।
[illegible] ॥ (191½)

(பொ) அவ்விரண்யகர்ப்பர் இத்தூலதேகத்தினபிமானத்தால் வைசுவானரராகினர். தைஜஸர்கள் இத்தூலசரீரரபிமானத்தால் விசுவனென்று நாமம் பூண்டனர். அதற்குள் அவாந்திரநாமங்கள் யாதெனில் கர்மவிசித்திரத்தால் சரீரவிசித்திரமடைந்து தேவதிரியக்நராதிகளென்றபெயரை அடைகிருர்கள்.

[illegible] ।
[illegible] ॥ (192½)

(பொ) (பகிர்முகாளாக) வெளிநாட்டத்தையுடையவர்களாயிருக்கிற அஜ்ஜீவர்கள் பஞ்சகோசசாக்ஷித்து[illegible] இல்லாதவர் களாய், போகத்தின்பொருட்டு உழவாதிதொழில்களைச்செ[illegible] தொழிற்செய்வதற்கே புஜிக்கிருர்கள்.

𑌨𑌦𑍍𑌯𑌾𑌂 𑌕𑍀𑌟𑌾 𑌇𑌵𑌾𑌵𑌰𑍍𑌤𑌾𑌦𑌾𑌵𑌰𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌾𑌶𑍁 𑌤𑍇 ।
𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮𑌨𑍋 𑌜𑌨𑍍𑌮 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌨𑍈𑌵 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌂 ॥ (193½)

(பொ) நதியில் புழுக்கள் ஒரு சுழியினின்று மறுசுழியைவேகமாயடைவனபோல் அச்சீவர்கள் ஒருஜன்மத்தைவிட்டு மறுஜன்மத்தையடைந்து மோக்ஷசுகத்தையடைகிறார்களேயில்லை.

𑌸𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌪𑌾𑌕𑌾𑌤𑍍𑌤𑍇 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑌿𑌨𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑍀𑌰𑌤𑌰𑍁𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌥𑌾𑌸𑍁𑌖𑌂 ॥ (194½)

𑌉𑌪𑌦𑍇𑌶𑌮𑌵𑌾𑌪𑍍𑌯𑍈𑌵𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ।
𑌪𑌞𑍍𑌚𑌕𑍋𑌶𑌵𑌿𑌵𑍇𑌕𑍇𑌨 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌂 𑌪𑌰𑌾𑌂 ॥ (195½)

(பொ) அப்புழுக்கள் முற்பிறப்பிற்செய்த புண்ணியப்பேற்றால் தயாளுவானபுருஷனால் அத்தண்ணீரிலிருந்து உயரஎடுக்கப்பட்டு கரையிலிருக்கிறமரத்தினிழலையடைந்து எங்ஙனம் சுகமாயிருக்கவேண்டுமோ அங்ஙனம் சிரமப்பரிகாரம் எய்துகின்றன. (அதுபோல் ஜீவர்கள்) சத்கர்மபரிபாகம்வந்தவுடன், கூடஸ்தபிர்மைக்கிய ஞானத்தையடைய சத்குருவினிடத்தினின்று தத்வமஸியாதி மகாவாக்கியோபதேசமாகிறசிரவணத்தைப்பெற்று, அன்னமயாதி பஞ்சகோசவிவேகத்தால் மேலானமோக்ஷத்தையடைகிறார்கள். இவ்வாறு பஞ்சதசியில் 1-வது பிரகரணத்தில் 19வது சுலோகமுதல் 32½ வரை சுலோகங்களில் கூறப்பட்டிருக்கிறது.

(அ—கை.) இங்ஙனம் சிஷியன் சம்சாரபந்தம் வந்தவிதத்தையும், அதுநீங்குமார்க்கத்தையும் குருவாலுபதேசிக்கப்பட்டும், மாயாசக்தியின் அம்சரூபமான ஆவரணவிக்ஷேபசக்திகளால், தேகாபிமானமும் ஜகத்தோற்றமும், சத்தியமாயெண்ணி மயங்குகிறதர்மங்களும், அக்ஞானத்தால் ஆத்மாவான தனக்கு அத்தியாசரூபமாய் வந்திருக்கிறசப்தாவஸ்தைகளின் தர்மங்களையும் இங்கு சுருக்கிகூறுகின்றார்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌰𑌣𑌂 [illegible] 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀 [illegible] 𑌸𑌾 ।
𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌪 𑌨𑌾𑌮 [illegible]
[illegible]𑌰𑍋𑌕𑍍𑌷𑌃 ॥ (196½)

(பொ) பிர்மசொரூபமானதன்னைமறந்ததே முதலாவதவஸ்தையான அக்ஞானம் பிர்மவஸ்துமுற்றிலுமில்லையென்றும், அவ்வஸ்துவிருந்தால் விளங்கமாட்டாதாவென்றும் தோற்றுவதே இரண்டாவதவஸ்தையான ஆவரணமாம். சரீரமுதலியசகலதோற்றங்களும் மூன்றாவதவஸ்தையாகியவிக்ஷேபமாம். ஆசாரியனு

பதேசத்தால் (சுவர்க்காதிலோகம்போல்) எவ்விடத்தோ பிர்மமிருக்கிறதென்றநிச்சயமே நான்காவதவஸ்தையாகியபரோக்ஷஞானமாம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ (197½)

(பொ) குருமுகமாய் உபக்கிரமாதிஷட்விதலிங்கதாத்பரியவிசாரத்தால் தோன்றப்பட்டநாமரூபாத்மகமானசகலஜகத்தும், சொப்பனத்திற்கண்ட (யானைமுதலியவைகள்போல்) சுத்தப்பொய்யென்றும், சத்சொரூபத்தின்விளக்கத்தால் நிஜம்போல் பார்க்கப்பட்டாலும், வாஸ்தவத்திலில்லையென்றும்தள்ளி, பரோக்ஷமாய்க்கண்டபிர்மமே நானென்றறிந்து துணிந்திருப்பதே ஐந்தாவதவஸ்தையாகிய அபரோக்ஷஞானமாம். கர்த்திருத்துவபோக்திருத்துவரூபமானவிக்ஷேபநிவர்த்தியே ஆறுவதவஸ்தையாகியதுக்கநிவர்த்தியாம். (மேற்கூறியவைகளின் அப்பியாசபலத்தால்) அடையவேண்டுவதெல்லாமடைந்து செய்யவேண்டுவதெல்லாம் செய்துமுடிந்திருப்பதே ஏழாவதவஸ்தையான ஆனந்தாவாப்தியாம்.

(அ—கை). மந்தபுத்தியுடன்கூடினசிஷ்டனுக்கு மேற்கூறிய அனுபவம் நன்றாய் வெளியாகும்பொருட்டு திருஷ்டாந்தமூலமாய் அறிவிக்கிறார்.

[illegible] ।
[illegible] ॥ (198½)

(பொ) இவ்விஷயத்தில் நீ அறிந்துகொள்ள ஒரு திருஷ்டாந்தம் கேழ். பத்துப்புருஷர்கள் ஓராற்றை நீந்திக்கரையேறியவர்களுக்குள் ஒருவன் தன்னை மறந்து ஒன்பது பேர்களையெண்ணி, பத்தாவதான தசமன் நதியில் மறித்துவிட்டானென்றும் இனியென்னசெய்வோமென்றும் துக்கித்திருந்தவனை வழிப்போக்கனொருவன் ஒன்பது பேர்களையெண்ணிக்காண்பிவித்து நீயே பத்தாவானென்று சொன்னவுடன் தானே தசமனென்று சந்தோஷித்தான்.

(அ—கை). திருஷ்டாந்தத்தை விஸ்தரித்துக்காண்பித்தல்.

---

[illegible] ।
[illegible] ॥ (199½)

(பொ) பத்தாவானுன தன்னைமறந்ததே அக்ஞானம், தசமனில்லை விளங்கவில்லையென்று பகர்வதே ஆவரணம். தசமன் மரித்தானென்று தலையிலிடித்துக்கொண்டழுவதே விக்ஷேபம். வழிப்போக்கனுல் தசமன் ஒருவனிருக்கிறுன் நீ அழுகாதேயென்றுசொன்னவார்த்தையை நம்பினதே பரோக்ஷஞானம்.

கஸ்யாவ்யாக்யவஶாஙவாவிவ-ப-ஷாஜ்ஞஂவ்யாயவஶாக்ஷகஂஸாக்ஷாத்ரத்யஹிஉஶஉநாஸஉஷிகஃவ்ஸக்ஷபொயொஙவபெயஃ। உஃவிகாதிநிவ்ருத்திரக்கயிகாஸாநயஉஹாநிஃவ்ஙாஸஂவ்யாகாஹிஸஉஷஸஂஶயவயாஉாநநஷி॥ (200½)

(பொ) ஒன்பது பேர்களை அவனுலெண்ணும்படிசெய்து பிறகு பத்தாவானுன தான்தானே தசமனென்று நன்றுயறிந்ததே அபரோக்ஷஞானம், தசமுன் நதியிலிறந்தானென்றழுத அழுகை நீங்கினதே துக்கநிவர்த்தி, தனது சித்தத்தில் சந்தேகம் நீங்கி தான் தசமனுய்க்களிப்புற்றிருந்ததே ஆனந்தவாப்தியென மகான்களால் கூறப்படுகிறது.

உஉஶஉஶஜொயாநிஜஉந-ஂவ்-ஙாஜொாக்ஷிதஷ ஜெயவகயாஉ ஷஂகயஉஜ்ஞ-வஹிஜஂ। ஐதீஙடவிவெஜ்வெதவஹிகவஉயஉஂ வ-நவிஉஶொஜவஙஉாயஂஹவிவஜெநயஜொவ்ஜெ॥ (201½)

(பொ) ஹேகுருநாதா, தசமபுருடன் தன்னை தசமனுகக்கண்டதைப் போல் எனது நிஜசொரூபமானகூடஸ்தரை பிர்மமாக யானறியும்படி தேவரீர் தரிசிப்பித்தல்வேண்டுமென்று சீடன் வினவ அம்மொழியை செவியுற்றஆசான் சாமவேதமானசாந்தோக்கியோபநிஷத்து ஆருவதத்தியாயத்திலகூறிய (தத்துவமஸி மகாவாக்கியார்த்தம்.) தத்வம்பதலக்ஷியரான கூடஸ்தபிர்மத்திற்கு (அஸி) பதவைக்கியம்செய்யும் அதினுண்மையைக்கேட்கக்கடவாய் என்று திருவாய்மலர்ந்தருளகின்றுர்.

வெஉாஜெஉகஜெஉவஜஉவஉாஂஙஙஷிக்யாந்க்ஷ-ஂஹாஂஙஙஂவட ஜஷஷந ஹஷதபஉா। ஜவ்ஜொஹகஜெஉவஙிவ-ணஉஉவீஷஙாஷஸாக்ஷீ வஜீவஜதிநாஉவஶாஷதபஉா॥ (202½)

(பொ) விண்ணென்றேமகாகாசமென்றும், மேகாகாசமென்றும், கடாகாசமென்றும், ஜலாகாசமென்றும், நான்குவிதமாய்க்கற்பிக்கப்படுவனபோல் சர்வபரிபூரணமானவஸ்துவொன்றே பிர்மமென்றும், மாயோபாதிகனுன ஈசனென்றும், சகலவிகாரங்களுக்கும் சாக்ஷியானவரேகூடஸ்தரென்றும் அந்தக்கரண

விருத்தியில் அவித்தியாவசத்தால் பிரதிபலித்தசைதன்னியமேஜீவனென்றும், நான்கு சைதன்னியங்களாய்க்கூறப்பட்டிருக்கிறது.

வாச்யார்த்தௌ ஜீவேசாவுபாதிஸஹிதௌ தத்த்வம்பதாப்யாமுக்தௌ லக்ஷ்யௌ து
ப்ரஹ்மகூடஸ்தௌ தஸ்மாதேவ விசாரயேத் । ஸத்யஜ்ஞான
வாக்யஸாரீ ஹிதவத்ஸு விஜானாதி வேதாம் வாதாத்வ விதித்யவேத
வத்யேயநாத்ருவிகேஸ்மாஹவேத் ॥ (203½)

(பொ) மாயாகாரியோபாதியால் சர்வக்ஞத்துவாதிகுணங்கள்நிறைந்த பூஜ்யனானஈசன் தத்பதத்திற்கு வாச்சியார்த்தனென்றும், அவித்தியாகாரியோபாதியால் கிஞ்சிக்ஞத்துவாதி தர்மம்நிறைந்தஅற்பமானஜீவன் துவம்பதவாச்சியார்த்தனென்றும், மாயாரகிதமானபிர்மம், தத்பதலக்ஷியார்த்தரென்றும், அவித்தியாகாரியமற்றகூடஸ்தர் துவம்பதலக்ஷியார்த்தரென்றும் கூறப்பட்டிருக்கிறது. உலகில் அறிஞர்களால் பாலினின்று நெய் கிரகிக்கப்படுவதுபோல், நீயும் வேதவசனங்களாலும், குருவாலுபதேசிக்கப்பட்டயுக்தியாலும், வாச்சியலக்ஷியங்களை நன்றாய்ப்பிறித்தறிந்து வாச்சியார்த்தத்தைத்தள்ளி லக்ஷியார்த்தமானபிர்மகூடஸ்தர்களை அறிவையேயானால் சகலசம்சாரபந்தத்தினின்றும் மோக்ஷத்தையடைவாய்.

(அ—கை) அவித்தையால் கற்பிக்கப்பட்ட பஞ்சகோசாதிகள் துவம்பதலக்ஷியார்த்தரானகூடஸ்தரை அறியவொட்டாமல் மறைத்திருப்பதால், அப்பஞ்சகோசவிவேகத்தால் கூடஸ்ததர்மத்தை நன்றாயறியும்பொருட்டு அவ்விலக்கணம் கூறப்படுகிறது.

விவேசனம் வக்ஷ்யே கோசானாம் ஶரீராத்மா ந ஸம்பவாத் ।
ப்ராணோ வாத்மா ந ஸம்பவாத் நாஸாக்ரே தஸ்ய விநி
ர்கதாயம் ॥ (204½)

(பொ) சவத்திற்குச்சமமாயும் ஐம்பூதவிகாரமாயுமிருக்கிற அன்னமயகோசம் துவம்பதலக்ஷியார்த்தரான (ஆத்மா) வன்று (தருத்திபோல்) மூக்கால் சுவாசத்தைவிட்டுக்கொண்டிருக்கிறவனையும், ரஜோகுணவிகாரனையும், ஜடனுமாயும், உச்சுவாசநிச்சுவாசாதிகளுடன் கூடியவனையுமிருக்கிற இப்பிராணமயகோசமும் மேற்கூறிய ஆத்மாவாகான்,

ஜ்ஞானேந்த்ரியோபேதைஃ கர்மேந்த்ரியவிகாரமனோபேதைஃ ।
மனோமயோ நஹ்யயம்வா ஆத்மா ஜ்ஞானவத்த்வப்ரதிபிம்பிதத்வாத் 205½

(பொ) சத்துவகுணவிகாரனும், சஞ்சலனும், சங்கற்பவிகற்பரூபனு-யும், கரணரூபனுமிருக்கிறமனோமயகோசன் முன்னுரைத்த ஆத்மாவாகான். சத்வகுணவிகாரனும், நிச்சயரூபனும், கர்த்தாவாயுமிருக்கிறவிக்ஞானமயகோசன் ஆத்மாவாகான். தன்னைக்ஞானவிருத்தியிற்பிரதிபலித்து ஆனந்தாகாரனுயிருக்கிற ஆனந்தமயகோசனுனவேதோக்த ஈசுவரன் ஆத்மாவாகான்.

பஞ்சகோசவிவேகம்.

(ப—ம்) கோசமென்றால் ஜலத்திலுண்டானபாசமானது ஜலத்தைமறைப்பதுபோலும், அக்கினியிலுண்டாகியபுகை அக்கினியைமறைப்பதுபோலும், பூமியிலுற்பத்தியாகியவிருக்ஷங்கள் பூமியைமறைப்பதுபோலும், முஞ்சிக்கதிருடன் கூடினமுஞ்சிப்புல் அக்கதிரைமறைப்பதுபோலும், சூரியகிரணத்தாலுண்டான மேகம் சூரியனைமறைப்பதுபோலும், கத்தியை உறைமறைப்பதுபோலும், புளியந்தோடு புளியம்பழத்தைமறைத்திருப்பதுபோலும், சரீரத்திலுண்டானரோமங்கள் சரீரத்தைமறைப்பதுபோலும், தன்னக்ஞானத்தால் தன்னிடத்தில் பொய்யாய்க்கற்பிக்கப்பட்டஅன்னமயாதி பஞ்சகோசங்கள் தானென ஆத்மசொரூபத்தை மறைத்து பருத்தேன் இளைத்தேனென்ற அன்னமயகோசாத்தியாசத்தையும், பசிதாகத்துடன் கூடினேனென்ற பிராணமயகோசாத்தியாசத்தையும், சரீரம்நானென்றும், பதார்த்தங்களென்னதென்றும் சத்தியபுத்தியாய்நம்பி, நானாவித கற்பனைகளுடன் கூடித்திரிகிறதான மனோமய கோசாத்தியாசத்தையும், நான் கர்த்தாவென்றும் சகலகிரியைகளும் நம்மாலேயேசெய்யப்படுகிறதெனவும், நமக்குச் சமமாய்ஒருவரும் இவ்வுலகிலில்லையென்றும், நாம் கற்பகோடிகாலமிருக்கப்போகிறோமென்றும், நாம்புஜிக்கும்நிமித்தம் சகலவிஷயங்களும் எப்பொழுதும் குறைவன்றி விருத்தியடையவேண்டுமெனவும், எண்ணிக்கொண்டு அகம்பாவத்தை ஆசரியித்திருக்கிற விக்ஞானமய கோசாத்தியாசத்தையும், ஜாக்கிர சொப்பனங்களில் பிரியமோத பிரமோதாதிவிருத்திகளுடன்கலந்து, தனக்கிஷ்டமானவஸ்து தன்திருஷ்டிகோசரமானவுடன் அவ்வஸ்துவிற்பிரியமும், அவ்வஸ்து தனக்குக் கிடைத்தவுடனுண்டாகிய மோதமும், அவ்வஸ்துவினனுபவமாகிய பிரமோதமும் இம்மூன்றுவிதவிகாரத்துடன் கூடினஜீவன் (வல்லூருப்பக்ஷிபோலும், சகுணிப்பக்ஷிபோலும்) சாக்கிரசொப்பனவஸ்தைகளிலுமுன்று சுகலேசமில்லாமல், பிரானந்தமாகிறபோஜனத்தை புஜிக்குநிமித்தம் அதிவேகமாய் சுஷுப்தியவஸ்தையடைந்து அக்ஞானவிருத்தியுடன்கலந்து ஒன்றுமறியாமல் சுகித்தேனென்ற அனுபவரூபமான ஆனந்தமயகோசாத்தியாசத்தையுமடைந்து வெகுகாலமாய்த் தூக்கித்தூக்கொண்டிருக்கிற தூக்கம் நிவாரணமாகும்பொருட்டும், இனி ஒருக்காலும் இவ்வைங்கோசாத்தியாச முண்டாகாமலிருக்கும்நிமித்தமும், இப்பஞ்சகோசவிவேகத்தை இவ்விடத்திற் சுருக்கிக்கூறப்பட்டது.

ஸச்சித்ஸுகம் ஸகலமேகமநாதிமாத்மரூபம் [illegible]
வம் । [illegible] பஞ்சகோசகு-
ஹாயா நிர்க்கச்சேஹி ॥ (206½)

(பொ) மூன்றுகாலத்திலும் கெடாமலிருப்பதால் சத்தாயும், சுவயம் பிரகாசமாயிருப்பதால் சித்தாயும், துக்கமற்றிருப்பதைக்கொண்டு ஆனந்தமாயும், எங்கும் சர்வவியாபகமாயிருப்பதுபற்றி சகலமாயும், விஜாதீயபேதமில்லாததால் ஏகமாயும், உற்பத்தியற்றதால் ஆதியாயும், அனாத்மதர்மமற்றிருப்பதால் ஆத்மாவாயும், கூடஸ்தஸ்வரூபத்திலிருந்தும் நழுவாமலிருப்பதால் அச்சுதமாயும், சிதாகாசசொரூபமாகையால் அகண்டாகாசசொரூபமாயுமிருக்கிற அந்தபிர்மமே நீயாயறிந்து, அனார்தமாயும், ஜடமாயும், துக்கரூபமாயும், விகாரமாயும், துவிதமாயும், அனேகமாயும், உற்பத்திநாசவத்தாயும், அனாத்மாவாயும், சதாநாசத்துடன் கூடினதாயும், கண்டமாயுமிருக்கிற ஐங்கோசமாகிய குகையினின்றும் வெளியேறக்கடவாய்.

(ப—ம்) ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம சதா இருப்புடன்கூடினதாயும், சுவயம் பிரகாசமாயும், (சர்வவியாபகமாயிருப்பதால்) தேசத்தால் கண்டிக்கப்படாததாயும், (நித்தியமாயிருப்பதால்) காலத்தால் நாசமுறாததாயும் (சர்வாத்மசொரூபமாயிருப்பதால்) வஸ்துவால் நாசமடையாததாயுமிருக்கிற அனந்தசொருபமாயுமுள்ளது, பிர்மமென்றும், யோவேத நிஹிதம்குஹாயாம்பரமே வ்யோமந் மேலானவிக்ஞானங்கமான ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந் ஸஹ பரமாகாசகுகையிலிருக்கிற பிர்மத்தை யாதொரு புருஷனறிகிறானோ, அவனே சமஸ்தகாமங்களையும் ஏககாலத்தில் அடைகிறானென்றும், ப்ரஹ்மவிதாப்நோதி பரம் (இவ்வாறறிந்த) அந்த பிர்மவித்தேபரத்தை யடைகிறானென்றும், தைத்திரீயஉபநிஷத்து ஆனந்தவல்லிபிரதமான்வாகத்தில் கூறப்பட்டிருக்கிறது. பின்னும் ஸ்மிருதியானபிர்மகீதையிலும் இவ்வாறே கூறப்பட்டிருக்கிறது. அதாவது,

ஸம்ஸாரிதே குஹாவாச்யே மாயாஜ்ஞாநாதிஸம்ஜ்ஞகே ।
நிஹிதம்ப்ரஹ்ம யோ வேத பரமே வ்யோமஸம்ஜ்ஞகே ॥ ௧

ஸோஶ்நுதே ஸகலாந்காமாந் க்ரமேணைவ த்விஜோத்தமா: ।
வித்யாப்ரஹ்ம [illegible] ஜீவந்முக்தோ [illegible] ॥ ௨

சம்சாரமயமாயும், குகையெனச்சொல்லத்தகுந்ததாயும், மாயை அக்ஞானமுதலியகுறிகளால் கூறப்படுவதாயும், மேலான ஆகாசமென்றதுடையாளத்து

டன்கூடி ஹிருதயகுகையில் விளங்குகிறபிர்மத்தை யாவனறிகிருனோ, அவனே மனுஷியானந்த முதல் சூத்திராத்மானந்தம்வரையுள்ள 11 விதானந்தங்களை கிரமமன்றியடைகிருனென்றும், பிர்மசொரூபத்தையறிந்ததினுலேயே ஜீவன் முக்தனுகிருனென்றும் கூறியிருக்கிறது (இவ்வுலகில் குகை இன்னதென்றும் அதில் விளங்கும்சைதன்னியமின்னதெனவும், அநேககோடி ஜன்மங்களிலுமுணராதஜீவர்கள் நன்ருயறியவேண்டுமென்றவபிப்பிராயத்துடன் சுருக்கிக்கூறப்பட்டது.

கோமேஷவஞ்ஸயசேஷ ஹஸ்த்யஸ்தாஹ்ந்யம்விதேநவந்ய ஹிக்ஞிசவெஷிநாய । காஞாந தோவஸஸஹஜஸணவவாஸாம் ஸாயோவதசிவமிவந்ஹதிஸொவ்யவாவ ॥ (207½)

(பெர) எனதாசானே, பஞ்சகோசமுங்கடந்து யான் உள்ளில் பார்க்கின்றபொழுது பிரளயகாலவிருளையொத்த சூன்னியத்தைத்தவிர வேறொன்றையும் அறிகிலேன். ஹே சாதோ, அவ்விருளேயோ நான் அகமென அனிபவிப்பேன். வஞ்சகமற்றதேவரீர் அதினுண்மையையானறியும்படி அருள்வீராக.

ஸம்வ்யாயஸோஹநநவெவவவவுஹ்ராதாஷுஜ்ஞாயவிரம்வரோக்தா । ஶந்யஜதாவாசஶஸோஹ்யஜாநநஸெவஸவும்வரிவெதிவிஷு ॥

(பொ) தசமன் புத்திமயக்கத்தாலொன்பதுபேரையெண்ணியறிந்ததானுன பத்தாவானை தான் காணுதபெரியபாழ் அவனே பாராய். அன்பு நிறைந்தமகனே சகலத்யையுமறிந்தஅறிவை நீ காணப்போகிருய்.

ஜாக்ரத்ஸ்வப்நஸஷுப்தியோபஹதாஃகாரஸ்யோஹயமஃகோவாஸஞ்மதாஹவாம்வநியெகமோூரவமராஜவ । ஸவராஜாநவிஸவுசக்ஹவாநு சயெஷவநாஸம்ஶயோகமேகாஞவசாம்பஜஃயஹம்ஸ்யஷாவசாஸ்யதெகஃ ॥ (209½)

(பொ) சமுத்திரத்திலுண்டாகிற அலைகளடிக்கடி நாசமுறுவனபோல், தூலசூக்கும காரணங்களானசரீரத்திரயங்களும், ஜாக்கிரசொப்பனசுஷுப்திகளாகிய அவஸ்தாத்திரயங்களும், பூதபவுஷியவர்த்தமானுதிகாலத்திரயங்களுமான அலைகள், ஜன்மமாகிறகடலில் அடிக்கடியுண்டாய் நாசமடைவதை யான் எவ்விதமென்றுரைப்பேன். சகல கற்பனைகளுக்கும் நீ சாக்ஷியாய் அறிந்துகொண்டிருக்கிருய். இதிற்கிஞ்சிற்றேனுமையமில்லை. தக்ஷிணுமூர்த்தியாய் விளங்கும் ஆதிகுருவின் பாதத்திலாணைவைத்து அந்தபிர்மவஸ்துவைத்தவிர வேறுவஸ்துவில்லையென்று யானுரைக்கின்றேன் என <u>கைவல்லிய தீபிகை</u> <u>தத்துவபிரதீப்பிரகரணம்</u> 59 முதல் 72 வரை சுலோகங்களில் கூறியிருக்கிறது.

(அ—கை) அன்வயவியதிரேகங்களினால் பஞ்சகோசத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஆத்மாவிற்கு பிரமத்துவம் சித்திக்கும்பொருட்டு அதற்குப்பிரமாணமாகக்கூறிய கடவல்லியுபநிஷத்தின் வாக்கியததைக்காண்பிவிக்கிறார்.

𑌯𑌥𑌾 𑌮𑍁𑌞𑍍𑌜𑌾𑌦𑌿𑌷𑍀𑌕𑍈𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌃 ।
𑌶𑌰𑍀𑌰𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌾𑌦𑍍𑌧𑍀𑌰𑍈𑌃 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ (210½)

(பொ) முஞ்சிப்புல்லில் நடுவிலிருக்கிறகதிராகிய ஆணி எப்படி மேல்தோட்டிலிருந்து பிரித்தெடுக்கப்படுமோ, அப்படி ஸ்தூலசூக்ஷ்மகாரணதேகங்களாகிறமேல்தோடுகளினின்றும் ஆத்மாவாகியகதிரானது (சாதனம் நிறைந்த அதிகாரிகளால்) அன்வயவியதிரேகயுக்தியினால் பிரிக்கப்பட்டு பரப்பிரம்மமாகவே ஆகிறது.

[கு—பு.] 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌦𑌾 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 । 𑌤𑌂 𑌸𑍍𑌵𑌾𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌹𑍇𑌨𑍍𑌮𑍁𑌞𑍍𑌜𑌾𑌦𑌿𑌵𑍇𑌷𑍀𑌕𑌾𑌂 𑌧𑍈𑌰𑍍𑌯𑍇𑌣 ॥

முஞ்சிப்புல்லினின்றும் நடுக்கதிரை உபாயசாலிகள் வேறுபடுத்தியெடுப்பதுபோல் அங்குஷ்டமாத்திரராயும், (சகல சரீரத்திற்குள்ளும் வளைபட்டிருப்பதால்) புருஷராயும், (பூர்ணராயிருப்பதால்) புருஷராயும், சகலபிராணிகளுடைய ஹிருதயத்திலெப்பொழுதும் அந்தராத்மாவாயுமிருக்கிற ஆத்மாவைத்தைரியசாலியானபுருஷன் தன் சரீரத்திரயங்களினின்றும் பிறித்தறியவேண்டுமென்று வைசிரவணமகரிஷியின்புத்திரனான நசிகேதுக்கு எமனால் கடவல்லியுபநிஷத் 6-ம் வல்லி 17ம் வாக்கியமாய்க்கூறப்பட்டிருக்கிறது

𑌪𑌰𑌾𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌰𑍇𑌵𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑍈𑌕𑌤𑌾 ।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌃 𑌸𑌾 𑌭𑌾𑌗𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ (211½)

(பொ) கூடஸ்தப்பிரமங்களுக்கு அன்வயவியதிரேகயுக்தியால் எந்தயேகத்துவமானது சம்பவிக்கப்படுகிறதோ அந்தஏகத்துவம் தத்துவமஸியாதிவாக்கியங்களினாலும் விட்டுவிடாதஇலக்கணையாலும் காண்பிவிக்கப்படுகிறது.

(அ—கை) (𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿) என்கிறவாக்கியத்தில் (𑌤𑌤𑍍-𑌤𑍍𑌵𑌂-𑌅𑌸𑌿) என்ற மூன்று பதங்களிருப்பதால் அதில் தத்பதவாச்சியார்த்தத்துடன்கூடினபிரமத்தைக்கூறுகின்றார்.

[illegible] ।
[illegible] ॥ (212½)

(பொ) எந்தப்பிர்மசைதன்னியம் தமோகுணப்பிரதானமாயிருக்கிறமாயாசக்தியைக்கிரகித்து உபாதானகாரணமாகவும், சுத்தசத்துவப்பிரதானமாகஅந்தசக்தியைக்கிரகித்து ஜகத்திற்கு நிமித்தகாரணமாயுமிருக்கிறதோ அந்தப்பிர்மசைதன்னியமே 'தத்' யென்றசொல்லாற்சொல்லப்படுகிறது.

அ—கை. 'த்வம்' பதவாச்சியார்த்தத்துடன் கலந்த பிர்மசைதன்னியத்தைக்கூறுகிறார்.

𑌯𑌦𑌾 𑌮𑌲𑌿𑌨𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌕𑌾𑌮𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑍂𑌷𑌿𑌤𑌾𑌂 ।
𑌆𑌦𑌤𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂𑌪𑌦𑍇𑌨 𑌤𑌦𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ($213\frac{1}{2}$)

(பொ) பரப்பிர்மமானது எப்போது ஆசையென்றதமோகுணத்தாலும், கர்மமென்றரஜோகுணத்தாலும் தூஷிக்கப்பட்டு, மலினசததுவமான அவித்தியாசக்தியைக்கிரகிக்கிறதோ அப்பொழுது அந்தபிர்மம் துவம்பதவாச்சியமாகச்சொல்லப்படுகிறது.

அ—கை. இவ்விதம் தத்வம்பதங்களினர்த்தத்தைக்கூறி வாக்கியார்த்தத்தைச்சொல்லுகிறார்.

𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑍀𑌮𑌪𑌿 𑌤𑌾𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑍀𑌂 ।
𑌅𑌖𑌣𑍍𑌡𑌂 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌮𑌹𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ($214\frac{1}{2}$)

(பொ) ஒன்றுக்கொன்று விரோதமாயும், முக்குணங்களாயுமிருக்கிற அந்தமூலப்பிரகிருதியைவிட்டு (அகண்டம்) யென்றமகாவாக்கியத்தால் தேசகாலவஸ்துக்களால் கண்டிக்கப்படாததாயும், ஸச்சிதானந்தமாயுமிருக்கிறபிர்மமானது, போதிக்கப்படுகிறது.

𑌸𑍋𑌽𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌷𑍁 𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍𑌤𑌦𑌿𑌦𑌂𑌤𑌯𑍋𑌃 ।
𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨𑌾𑌂𑌶𑌯𑍋𑌰𑍈𑌕𑍍𑌯𑌂 𑌯𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌯𑌥𑌾 ॥ ($215\frac{1}{2}$)

𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑍇 𑌵𑌿𑌹𑌾𑌯𑍈𑌵 𑌉𑌪𑌾𑌧𑍀 𑌪𑌰𑌜𑍀𑌵𑌯𑍋𑌃 ।
𑌅𑌖𑌣𑍍𑌡𑌂 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ($216\frac{1}{2}$)

(பொ) அவனே இந்ததேவதத்தனென்றயிவைமுதலியவாக்கியங்களில் அந்த இந்ததேசகாலாதிகளுக்கு விரோதமாயிருக்கிற அம்சங்களின் பரித்தியாக

த்தால், விருத்த மன்றியிவிரண்டுக்குமாதாரமானவொருவனெப்படி காணப்படுகின்ருனே அப்படி ஈசஜீவர்களுக்குபாதிகளாயிருக்கிறமாயை அவித்தைகளைத் தள்ளி, அகண்டமாயும் ஸச்சிதானந்தமாயும் சிரேஷ்டமாயுமிருக்கிறபிர்மமே இலக்கணையால் போதிக்கப்படுகின்றதென பஞ்சதசிதத்துவவிவேகத்தில் 42½ முதல் 48½வரை சுலோகங்களில் கூறப்பட்டிருக்கிறது.

(கு—றி). 212½ முதல் 216½ வரை ஒன்ருய்ச்சேர்த்தெழுதப்படுகிறசாந்தோக்கியோபநிஷத்து 8-வது கண்டம் 7-வது வாக்கியம்.

---

[ஸ ய ஏஷோऽணிமைதடாத்ம்யமிதꣳ ஸர்வம் தத்ஸத்யꣳ ஸ ஆத்மா தத்த்வமஸி ஶ்வேதகேதோ இதி] ஹே சுவேதகேது, இந்த சகலஜகத்தும் ஆத்மசொரூபம் அந்த ஆத்மாவே தத்பதலக்ஷியார்த்தர் அதுவேசத்தியம். அந்த பிர்மமே நீயாயிருக்கிருயென்று உத்தாலகமகரிஷி தன்மைந்தனுன சுவேதகேதுவுக்கு கூறியிருக்கிருர்.

### வாக்கிய விருத்தியில் 39-வது சுலோகத்தில் சங்கரகுருவால் கூறியதாவது.!

---

ஸம்ஸர்காவாவிஶிஷ்டோவாவாக்யார்தோநாத்ரஸம்மத:।
அகண்டைகரஸத்வேநவாக்யார்தோவிதுஷாம்மத: ॥

(தத்—த்வம்) என்ற பதங்கள் வாச்சியலக்ஷியத்துடன் கூடியவைகள், தத்பதத்திற்கு மாயையும் ஈசனும் வாச்சியார்த்தம், லக்ஷியார்த்தம் பிர்மம். துவம்பதத்திற்கு அவித்தையும் ஜீவனும் வாச்சியார்த்தம், கூடஸ்தர் லக்ஷியார்த்தம். இவர்களை எந்த வாக்கியத்தால் பிறித்தறிகிறதெனில், சம்சர்க்கவாக்கியத்தால் பிறிக்கலாமோவென்ருல் (காம் நய) யென்றவாக்கியமானது, பசுவையும் புருஷனையும்சேர்த்துப்பேதமாய்கூறுகிறது. அதுபோலிந்த தத்துவமஸி விசாரஸ்தலத்தில் தத்பததுவம்பதங்கள் வாச்சியலக்ஷியங்களுடன் கூடியிருக்கிறபடியால் (ஸம்ஸர்க) வாக்கியத்தாலுமைக்கியம் சித்தியாது. (விஶிஷ்ட) வாக்கியமான (நீலோத்பலம்) என்றவாக்கியத்தில் நீலநிறமுள்ள புஷ்பமென்றும், வெள்ளைநிறமுள்ளபுஷ்பமென்றும், விசேஷணமாய்க்கூறப்படுவதுபோல், தத்பததுவம்பதங்களுக்கு மகதுபாதியும், அற்போபாதியும், சர்வக்ஞத்துவ கிஞ்சிக்ஞத்துவமுதலான விசேஷணங்களுமிருப்பதால் மேற்கூறிய விசிஷ்டவாக்கியத்தாலுமைக்கியம்கூடாது.

அகண்டைகரசமானவாக்கியார்த்தமே, வித்துவான்களின் சம்மதம். (ஸாமாநாதிகரண்யஸம்பந்த) (விசேஷணவிசேஷ்யஸம்பந்த) (லக்ஷ்ய லக்ஷணஸம்பந்த) இவைகளில் சாமாநாதிகரணத்தால் ஐக்கியம் கூறலாமோவென்றால், கூடஸ்தரும் பிர்மமும் வாச்சியலக்ஷியங்களுடனும், சத்துவரஜஸ்தமோகுணங்களுடனும் கூடியிருப்பதுபற்றி மேற்கூறிய சாமாநாதிகரணசம்பந்தத்தால் பிர்மகூடஸ்தர்களுக்கு ஐக்கியம் சித்தியாது. விசேஷண விசேஷியசம்பந்தத்தால் ஐக்கியம் சித்திக்குமோவென்று யோசித்தால் ஈசன் சர்வக்ஞனும், ஜீவன் கிஞ்சிக்ஞனும், மகத்தான மாயோபாதியுடன் கூடினவனும், நிகிருஷ்டமான அவித்தியோபாதிகனும், பூஜ்யனும், பூஜிக்கிறவனும், கர்மபலதாதாவாயும், கர்மபலாபேக்ஷையால் கர்மத்தைச்செய்பவனும், பரோக்ஷனும், பிரத்தியக்ஷனும், சுகியாயும், துக்கியாயும், சமஷ்டியபிமானியாயும், வியஷ்டியபிமானியாயும், சுவதந்திரனும், அசுவதந்திரனும், சர்வவியாபகராயும், கண்டனும், முறையே இவ்விதவிசேஷணங்களுடன்கூடின ஈசஜீவர்கள் வெகுபேதங்களுடன் கூடியவர்களாயிருக்கும்போது இவர்களுக்கதிஷ்டானமான பிர்மகூடஸ்தர்களுக்கு விசேஷணவிசேஷிய சம்பந்தத்தால் மேற்கூறியவைக்கியம் எவ்விடத்தில் சித்தியாம்?

(இ—தி) அரசனும் படைகளும்போலும், பாதாளம் விசும்பும்போலும் மேருவும் கடுகும்போலும், இரத்தினமும் பளிங்குக்கல்லும்போலும், சுவர்ணமும் ஓட்டாங்கச்சியும்போலும், ஈசஜீவர்கள் பேதமாயிருக்கின்றனர்.

(லக்ஷ்யலக்ஷணஸம்பந்த)மே அங்கீகாரமாம். அது மூவகையாம். (ஜஹல்லக்ஷ)ணையென்றும் (அஜஹல்லக்ஷ)ணையென்றும் (ஜஹதஜஹல்லக்ஷ)ணையென்று மூவிதலக்ஷணங்களாம். (ஸமாயாம்கோஷ:ப்ரதிவஸதி) என்றவிடடலக்ஷணையால் தத்துவம்பதங்களுக்கு ஐக்கியம் கிட்டாவாம். யாதுபற்றியெனில், கங்கையிலிடச்சேரியிருக்கமாட்டாதென்றெண்ணி, கங்கையைவிட்டு கங்கைக்கரையைப்பிடிப்பதுபோல், இங்கு தாஷ்டாந்திகத்தில் கூடஸ்தபிர்மங்களைத்தள்ளியபின் எவர்களுக்கு ஐக்கியங்கூறுகிறது? ஆகையாலிந்தவிடத்தில் விட்டலக்ஷணையுமங்கீகரிக்கக்கூடவில்லை.

விடாதலக்ஷணையால் தத்துவம்பதங்களுக்கைக்கியம் சித்திக்குமோவெனில் சித்தியாது. யாதுகொண்டெனில் (சோணோதாவதி। ஸ்யாமோ க்ஷேத்ராஸதி) என்றவாக்கியங்களில் சிகப்புநிறத்துடன் கூடியகுதிரையும், சிகப்புநிறமானபசுவும் ஓடுகிறதாய் அர்த்தம்பண்ணவேண்டியிருப்பதுபோலும், ஊஞ்சலானது வேறொரு புருஷனாலாட்டப்பட்டு சப்திக்கிறதெனவங்கீகரிக்கப்படுவதுபோலும், இந்த மகாவாக்கியத்திலும் வாச்சியலக்ஷியத்துடன் கலந்திருக்கிற தத்துவம்பதங்களுக்குவிடாதலக்ஷணையாலுமைக்கியங்கிட்டாவாம். ஆகையால்வேதாந்தசாஸ்திர

த்தில் (ஸாமாநாதிகரண்ய) மென்றும் (ஜஹதஜஹல்லக்ஷண) மென்றும் நாமங்களைவகித்த விட்டுவிடாதலக்ஷணையே இவ்விடத்திற்கூறவேண்டியிருக்கிறது அதற்கு திருஷ்டாந்தமேதெனில் (ஸோயம் தேவதத்த:) என்கிற நியாயத்தால் காசியில் மந்திரி உத்தியோகத்தால் தண்டிகை முதலானவிசேஷணங்களுடன் நிறைந்தவொருதேவதத்தனை நாம் கண்டு, பிறகு அந்தராஜாவின் விரோதத்தாலுத்தியோ. கமிழந்தவுடன் அவனே பரிசாரகத்திற்கமர்ந்து வேலைசெய்துகொண்டிருக்குந்தருணத்தில் அவனே இவனென்று சொல்லும்போது அந்தப்பிரபுவே இந்தப்பரிசாரகனுவானென்று கேட்டவனுக்கு அந்த இந்த தேசத்தையும் காலத்தையும் பிரபுத்துவத்தையும் பரிசாரகத்துவத்தையும் தண்டிகை முதலான விசேஷணங்களையும் கரிச்சட்டுவமுதலான விசேஷணங்களையுந்தள்ளி தேவதத்தன் சரீரத்திலிருந்த அம்மைத்தழும்பு முதலான லக்ஷணங்களால் அவனே இவனென்றுணர்வதுபோல் தத்பதத்தில் தோற்றப்படுகிற வாச்சியங்களான மாயை ஈசன் சர்வக்ஞத்துவோபாதிகளையும், துவம்பதத்தில் தோற்றப்படுகிற அவித்தைஜீவன் கிஞ்சிக்ஞத்துவோபாதிகளான விசேஷணங்களையுந்தள்ளி, தத்பதத்தில் விளங்குகிற ஸச்சிதானந்த லக்ஷணத்தாலும் துவம்பதத்தில் விளங்குகிற ஸச்சிதானந்த லக்ஷணத்தாலும் விசேஷியமான பிர்மகூடஸ்தர்களுக்கு (அஸி) பதமானது பாகத்தியாகலக்ஷணையாலைக்கியம் கூறுகிறது.

அனேக வேதாந்த சாஸ்திரங்களிலுபதேசவாக்கியமான தத்துவமஸி மஹாவாக்கியமானது குருவால் விரிவாயுரைக்கப்பட்டிருந்தாலும் இங்கு அந்த அர்த்தத்தைச்சுருக்கிக்கூறினேம், இவ்வர்த்தத்தின் மகிமையை விவேகிகள் சதா சிந்திக்கக்கடவர்கள்.

(அ—கை) மேற்கூறிய தத்வமஸி மஹாவாக்கியார்த்தத்தைக்கேட்ட சீடன் குருவை வணங்கி எனதாசானே தங்களாலுபதேசிக்கப்பட்ட அர்த்தமானதென்மனதில் திருடப்படவில்லையென்று வினவியவச்சீடனுக்கு திருடப்படும்பொருட்டு மனதின் லக்ஷணத்தையும் அதின் நிவர்த்தியினுபாயத்தையும் தெரிவிக்கின்றார்.

மநோ ஹி த்விவிதம் ப்ரோக்தம் ஸுத்தம் சாஸுத்தமேவ ச ।
அஸுத்தம் காமஸங்கல்பம் ஸுத்தம் காமவிவர்ஜிதம் ॥ (217½)

(பொ) ஆசையுடன்கூடிய மனது அசுத்தமென்றும், ஆசையற்றமனது சுத்தமெனவுமிரண்டு விதமாய்க்கூறப்படுகின்றன.

மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: ।
பந்தாய விஷயாஸக்தம் முக்த்யை நிர்விஷயம் ஸ்ம்ருதம் ॥ (218½)

(பொ) மனமே மனிதர்களுக்கு பந்தமோக்ஷகாரணமாயிருக்கின்றது. விஷயத்திலாசக்தியுடன் கூடியமனமே பந்தஹேதுவாம், விஷயமற்றமனமே மோக்ஷஹேதுவாம்.

யதோ நிர்விஷயஸ்யாஸ்ய மநஸோ முக்திரிஷ்யதே ।
அதோ நிர்விஷயம் நித்யம் மந: கார்யம் முமுக்ஷுணா ॥ (219½)

(பொ) விஷயமற்றமனதிற்கு யாதொரு காரணத்தால் முக்தி கூறப்படுகின்றதோ அக்காரணத்தால் விவேகியான முமுக்ஷுவானவன் இடைவிடாமல் மனதை நிர்விஷயமாய்ச்செய்யவேண்டுவதே முக்கியகாரியமாம்.

நிரஸ்தவிஷயாஸங்கம் ஸந்நிருத்தம் மநோ ஹ்ருதி ।
யதாயாத்யாத்மநோ பாவம் ததா தத்பரமம் பதம் ॥ (220½)

(பொ) விஷயசங்கத்தையிழந்த மனமானது பிர்மாப்பியாசபலத்தால் ஹிருதயத்தில் நன்றாய் நிறுத்தப்பட்டு எப்பொழுது ஆத்மபாவத்தையடைகிறதோ அப்பொழுதே தத்பத லக்ஷியார்த்தமான பரப்பிர்மத்தையடையும்.

நைவ சிந்த்யம் ந சாசிந்த்யம் ந சிந்த்யம் சிந்த்யமேவ ச ।
பக்ஷபாதவிநிர்முக்தம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா ॥ (221½)

(பொ) ரஜோகுண தமோகுணவிருத்தியால் சிந்திக்கத்தகாததாயும், சுத்தசத்துவகுணவிருத்தியால் சிந்திக்கத்தக்கதாயும், சிந்திக்கப்பட்டது சிந்திக்கப்படவில்லையென்றதர்மமிழந்ததாயும், எல்லாவஸ்துக்களிலும் பக்ஷபாதமன்றிச் சமமாயுமிருக்கிற ஆத்மவஸ்துவை இம்மனமானதெப்பொழுதடைகிறதோ அப்பொழுதே அந்த லக்ஷியார்த்தமான பிர்மத்தையடைகிறது.

ந நிரோதோ ந சோத்பத்திர் ந பத்தோ ந ச ஸாதக: ।
ந முமுக்ஷுர் ந வை முக்த இத்யேஷா பரமார்த்ததா ॥ (222½)

(பொ) இவ்வாத்மாவிற்கு நாசமுமில்லை. இவ்வாத்மாவில் யாதொரு ஜகத்துத்பத்தியாகவுமில்லை. கட்டுப்பட்டவனொருவனுமில்லை. கர்மங்களைச்செய்கிற சாதகனுமில்லை. முமுக்ஷுவுமில்லை. முக்தனுமில்லை. இதுவே பரமார்த்தமாயுளது.

ஸகலநிகமசூடாஸ்வாந்தஸித்தாந்தவேத்யம் [illegible] ।
ஶ்ராந்தஸ்ய [illegible] பவிஷ்யதே ॥ (223½)

(பொ) ஜாக்கிர சொப்பன சுஷுப்திகளில் விளங்குகிறவர் ஓரே ஆத்மா வென்றெண்ணக்கடவாய். அவஸ்தாத்திரயபாவனையிழந்த ஞானிக்கு மறுபடியும் ஜன்மம் கிடையாது.

ஏக ஏவ ஹி பூதாத்மா பூதே பூதே வ்யவஸ்தித꞉ ।
ஏகதா பஹுதா சைவ த்ருஶ்யதே ஜலசந்த்ரவத் ॥ (224½)

(பொ) ஒன்றாயிருக்கிற சந்திரன் ஜலவுபாதிபேதத்தால் நானாவாய்ப்பார்க்கப்படுவனபோல் ஓரே ஆத்மாதானே அந்தக்கரணவுபாதிகளால் நானாவிதமான பிராணிகளிடத்தில் வெகுவாய்ப்பார்க்கப்படுகிறார்.

கடஸம்வ்ருதமாகாஶம் நீயமானே கடே யதா ।
கடோ நீயேத நாகாஶஸ்தத்வஜ்ஜீவோ நபோபம꞉ ॥ (225½)

(பொ) கடத்தில் வளைபட்ட ஆகாசமானது, கடம்போகும்போது ஆகாசம் போவதாய்ச்சொன்னாலும், ஆகாசத்திற்கு போக்குவரத்தெவ்வாறில்லையோ, அவ்வாறு, சரீரத்தில் வளைபட்ட சுத்த ஜீவனானவன், சரீரம் சேஷ்டிக்கும்போது தான் சேஷ்டிப்பதாய்ச்சொல்லப்பட்டாலும், தானான ஜீவன் சிதாகாசனாகவேயிருக்கிறான்.

கடவத்விவிதாகாரம் பித்யமானம் புன꞉ புன꞉ ।
தத்பக்னம் ந ச ஜானாதி ஸ ஜானாதி ச நித்யஶ꞉ ॥ (226½)

(பொ) கடத்தில் வளைபட்ட ஆகாசமானது அறியாதவனால் இரண்டாய்ப்பார்க்கப்படுவதுபோல் சரீரத்தில் வளைபட்ட சைதன்னியமானது மூடர்களால் நானாவிதமாய்ப்பார்க்கப்பட்டாலும், வாஸ்தவத்தில் அறியப்பட்டதாயும் அறியப்படாததாயுமாகமாட்டாது.

க்ரந்தமப்யஸ்ய மேதாவீ ஜ்ஞானவிஜ்ஞானதத்பர꞉ ।
பலாலமிவ தான்யார்த்தீ த்யஜேத்க்ரந்தமஶேஷத꞉ ॥ (227½)

(பொ) பரோக்ஷாபரோக்ஷக்ஞானம் நிறைந்தவனும் வேதாந்தசாஸ்திரங்களை அப்பியாசம் செய்து மேதாவியாயுமிருக்கிற விவேகியானவன், நெல்லில் விருப்பமுள்ள புருஷன் வைக்கோல்களைத்தள்ளி நெல்லைமட்டும் கிரகிப்பதுபோல் சகலமான கிரந்தாப்பியாசங்களையும் குறைவன்றி விட்டுவிடுகிறான்.

கவாமநேகவர்ணானாம் க்ஷீரஸ்யாப்யேகவர்ணதா ।
க்ஷீரவத்பஶ்யதே ஜ்ஞானம் லிங்கினஸ்து கவாம் யதா ॥ (228½)

(பொ) பசுக்கள் நானாவர்ணமுள்ளதாயிருந்தாலும் பாலானது ஒரே நிறமாயிருப்பதுபோல் சாஸ்திரங்கள் நானாவாயிருந்தாலும் ஞானம் ஒன்றாயப்பார்க்கப்படுகிறது.

ஞூ தமிவவயவஷி நிம ஒுவஸஹ ஒுெதஹ ஒுெதவவஸ திவிஜ்ஞாநம் ।

ஸதம்௦உநவஷி௨யயிதவா௦௨ெநா௨௦யாநஹ ஒுெகுந ॥ (229½)

(பொ) பாலில் நெய்யானது ரகசியமாய்க்காணப்படுவதுபோல் சகலப்பிராணிகளிடத்திலும் ஞானம்ரகசியமாய்ப்பார்க்கப்படுகிறது. நெய்யில் விருப்பமுள்ளவன் பாலைக்கடைந்தெடுப்பதுபோல் பிர்மக்ஞானத்தில் விருப்பமுள்ள முமுக்ஷுக்கள் சுத்தமனசாகிறமத்தால் ஞானமாகியபாலைக்கடைந்து சுவானுபூதியாகிற நெய்யையடையக்கடவர்கள்.

ஜ்ஞாநநேத்ரம்ஸமாதாய ஹொஉெரஷஹ்நி வஸ்ரம் ॥ (230)

(பொ) ஞானமாகிற நேத்திரத்தையடைந்து அக்கினிபோல் சுயம்பிரகாசமாயிருக்கிற ஆத்மாவை சம்சாரசமுத்திரத்தினின்றும் கரையேற்றிவைக்க வேண்டுமென அமிருதபிந்தூபநிடதம் கூறுகிறது.

ஶாஸ்த்ராண்யதீத்ய மேதாவீ அப்யஸ்ய ச புந:புந: ।

பரமம் ப்ரஹ்ம விஜ்ஞாய உல்காவத்தாந்யதோத்ஸ்ருஜேத் ॥ (231)

(பொ) தன்கையிலிருந்த ரத்நமோதிரத்தைத்தவிரவிட்டபுருஷன் சமீபத்திலிருந்த குடிசையிற்சென்று வாங்கிவந்த கொள்ளிக்கட்டையின் வெளிச்சத்தால் மோதிரத்தையடைந்தபின்னக்கொள்ளிக்கட்டையையெறிந்துவிடுவதுபோல், பிர்மத்தையறியும்பொருட்டு அடிக்கடி வேதாந்தசாஸ்திரங்களையப்பியாசித்த மேதாவியாகிய புருஷன் சுவானுபூதியடைந்தபின்னர் சகலசாஸ்திராப்பியாசங்களையும் விடக்கடவன்.

அந்தவத்பஶ்யதி ரூபாணி ஶ்ருணோதி பதிரவத்ஸ்வநாந் ।

காஷ்டவத்பஶ்யதே தேஹம் ப்ரஶாந்தஸ்யேதி லக்ஷணம் ॥ (232)

(பொ) குருடனைப்போல் ரூபாதிகளைப்பார்ப்பவனையும், செவிடனைப்போல் சப்தாதிகளைக்கேட்பவனையும், கட்டையைப்போல் தன் தேகத்தைப்பார்ப்பவனையும் யாவன் இருக்கிறானோ அந்த பிர்மக்ஞானியே உபசாந்தலக்ஷணமுடையவனென்று சொல்லப்படுவான். இவ்வாறு அமிருதநாதோபநிடதமறைகின்றது.

யயா நிரிம்ய நொவஹிஸ்ரயொ நாஉவஶாஉ்ருதி ।
தயாவ்ருத்திக்ஷயா ஹீத்த ஸ்ரயொ நாஉவஶாஉ்ருதி ॥ (233)

(பொ) கட்டையற்ற அக்கினியானதெவ்வாறு சுவபாவமாய் நாசமாகின்றதோ அவ்வாறு விருத்தியின் க்ஷயத்தாற்சித்தமானது சுவபாவத்தில் நாசமாகின்றது.

ஹீத்தமெவஹிஸம்ஸாரஸ்தத்ப்ரயத்நெந ஶொயயெத் ।
யஶ்ஹித்தஸ்தந்மொஹவதி ரஹஸ்யமெதத் ஸநாதநம் ॥ (234)

(பொ) சித்தமே சம்சாரமாம், அதனை நன்றாய் பிரயத்தனத்துடன் சோதனை செய்யவேண்டும். அச்சித்தத்தை பிர்மமயமாய்ச்செய்வதே மேலான ரகசியமாம்.

ஸமாயிநிர்யூ தமலஸ்யசெதஸொ நிவெஶிதஸ்யாத்மநியத்ஸுவம் ஹவெத் । நஶக்யதெவண்யிதும் கிராதடாஸ்வயஷ்தடஷ்கரணெந க்ருஹ்யதெ ॥ (235)

(பொ) நிர்விகற்பசமாதியினால் போக்கடிக்கப்பட்டமனதுடையவனுயும் ஆத்ம சொரூபத்தில் மனதை நன்றாய் வைத்தவனுயுமிருக்கிற யாதொரு ஞானியினுடைய சுகத்தை (ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனாலும்) நாவால் புகலவொண்ணு. அந்த சுகமானது சுத்தாந்தக்கரணத்தால்மாத்திரம் கிரகிக்கப்படுமேயொழிய அன்னியர்களாலறியவொண்ணு. இவ்வாறு மைத்திராயணியுபநிடதமுரைக்கின்றது.

(அ—கை) ஒரு யுகத்தில் சகல குணங்களும் நிறைந்த மைத்திரேயமகரிஷியானவர் கைலாசத்தையடைந்து ஈசுவரனை வந்தனம் புரிந்து ஹே பகவன் பரமார்த்த ரகசியத்தை எனக்குக்கூறவேண்டுமென்று கேட்ட அம்மகரிஷிக்கு கைலாசாதிபதியானமகாதேவர் மேலானபிர்மவிக்ஞானத்தை மைத்ரேயவுபநிஷத்து 2-வது அத்தியாயத்தில் கூறியிருக்கிறதையிங்கு யாமுரைக்கின்றோம்.

தெஹொ தெவாலயஃ ப்ரொக்தஸ்ஸஜீவஃகெவலஶ்ஶிவஃ ।
த்யஜெதஜ்ஞாநநிர்மால்யம்ஸொஹம்ஹாவெநபூஜயெத் ॥ (236)

தேகமே தேவாலயமென்றும் அதிலிருக்கிறஜீவனே தனிமையான சிவனென்றும் கூறப்படுகிறது. அக்ஞானமாகிற நிர்மால்லியத்தைத்தள்ளி நானே அந்த பிர்மமென்கிறபாவனையாலவ்வீசனை பூஜிக்கக்கடவாய்.

அபேததர்சநம் ஜ்ஞாநம் த்யாநம் நிர்விஷயம் மந꞉ ।
ஸ்நாநம் மநோமலத்யாக꞉ சௌசமிந்த்ரியநிக்ரஹ꞉ ॥ (237)

(பொ) பேதமற்றபார்வையே ஞானமென்றும், நிர்விஷயமானமனமே தியானமென்றும், மனோமலத்தியாகமே ஸ்நானமென்றும், இந்திரியநிக்கிரகம்செய்வதே சௌசமென்றும் சொல்லப்படுகிறது.

ப்ரஹ்மாம்ருதம் பிபேத்பைக்ஷமாசரேத்தேஹரக்ஷணே ।
வஸேதேகாந்திகோ பூத்வா சைகாந்தே த்வைதவர்ஜிதே ॥ 238

(பொ) பிர்மாமிருதத்தையே பானஞ்செய்யவேண்டும் தேகத்தை ரக்ஷிக்கும் நிமித்தம் பிக்ஷாசரணஞ்செய்யவேண்டும். துவைதமற்றதான ஏகாந்தத்தையடைந்தவனாகி, சொரூபானுசந்தானமாகிற ஏகாந்தத்தில் வசிக்கக்கடவாய்.

இத்யேவமாசரேத்தீமாந் ஸ ஏவ முக்திமவாப்நுயாத் । (238½)

(பொ) மேற்கூறிய தர்மங்களை எந்தஞானி செய்துகொண்டு வருகிறானோ அவனே முக்தியையடைகிறான்.

ஜாதம் ம்ருதமிதம் தேஹம் ஸ்ப்ருஷ்ட்வா ஸ்நாநம் விதீயதே ॥ (239)

(பொ) தாய் தகப்பனுடைய சுக்கிலசோணிதத்தாலுண்டானதாயும், உத்பத்திநாசத்துடன்கூடினதாயும் தீண்டலாலுண்டானதாயுமிருக்கிற இத்தேகத்தைஸ்பரிசிப்பவன் ஸ்நானஞ்செய்யவேண்டும்.

அஹந்தாமலவிச்சித்தி꞉ ஶுத்திரேஷா பரா மதா ।
ஶுத்தஶௌசமிதி ப்ரோக்தம் ம்ருஜ்ஜலாப்யாம் து லௌகிகம் ॥ (240)

(பொ) நான் எனதென்ற மலஜலத்தைப்போக்குவதே சுத்த சௌசமென்றும், மண் ஜலங்களினால் சரீரத்திற்குச் செய்யும் சௌசமானது லௌகிக சௌசகமென்றும் சொல்லப்படும்.

சித்தஶுத்திகரம் ஶௌசம் வாஸநாத்ரயநாஶநம் ।
ஜ்ஞாநவைராக்யம்ருத்தோயை꞉ க்ஷாலநாச்சௌசமுச்யதே ॥ (241)

(பொ) சித்தசுத்திகரமான சௌசமானது தேக லோகசாஸ்திரவாசனாத்திரயங்களை நாசம் பண்ணும், ஞானவைராக்கியங்களான மண் ஜலங்களினால் அலம்புகிறதே சுத்த சௌசமென்றுங் கூறப்படுகிறது.

[illegible]
[illegible] ॥ (242)

(பொ) அத்துவைதபாவனையே பிக்ஷாகாரமாம், துவைதபாவனையே புஜிக்கத்தகாததாம், வேதாந்த சாஸ்திரங்களால் கூறப்பட்ட சுத்த பாவனையாகிற அத்துவைத பிக்ஷயான்னது பிக்ஷுவான விவேகிக்கு விதிக்கப்பட்டிருக்கிறது.

[illegible]
[illegible] ॥ (243)

(பொ) ஜயில் கொட்டடியினின்றும் விடுபட்ட திருடனைப்போல் சந்நியாசஞ்செய்துகொண்ட வித்துவான் தன்னுடையதேசத்தை விட்டுவிட்டு தூரதேசத்தில் வஸிக்கவேண்டும்.

[illegible]
[illegible] ॥ (244)

(பொ) அகங்காரமாகிற மைந்தனையும் பணமாகிற சகோதரனையும் மோகமாகியவீட்டையும் ஆசையாகியமனைவியையும் யாவன் தள்ளியிருக்கிறானோ அவனே ஜீவன்முக்தனென்பதிலையமில்லை.

[illegible]
[illegible] ॥ (245)

(பொ) மோகமயமான தாயானவள் மரித்தும், ஞானமயமான புத்திரன் பிறந்தும், மேற்கூறியவிருவரைத் தீண்டலுடன் கூடியிருக்கும்பொழுது யானெவ்விதம் சந்தியா வந்தனம் செய்யப்போகிறேன்.

[illegible]
[illegible] ॥ (246)

(பொ) ஹிருதயமாகிறவாகாசத்தில் சைதன்னியமாகிய சூரியனெப்பொழுதும் உதயாஸ்தமனமின்றி விளங்கிக்கொண்டிருக்கும்பொழுது சந்தியாவந்தனத்தையெவ்விதஞ்செய்யப்போகிறேன்.

[illegible]
[illegible] ॥ (247)

(பொ) சுவகதசஜாதீய விஜாதீய பேதமற்றதான ஏகமேவாத்விதீயமான யாதொரு சத்வஸ்துவானது, குருவின்வாக்கியத்தால் நிச்சயம்பண்ணப்பட்டிருக்கிறதோ, அவ்வஸ்துவே ஏகாந்தமென்று கூறப்படுகிறது. மடமும் வனாந்தரங்களும் ஏகாந்தமல்ல.

അസംശയവതാം മുക്തിസ്സംശയാവിഷ്ടചേതസാം ।
ന മുക്തിർജന്മജന്മാന്തേ തസ്മാദ്വിശ്വാസമാപ്നുയാത് ॥ (248)

(பொ) சம்சயமற்றவர்களுக்கே முக்திசித்திக்கும், சம்சயத்துடன்கூடிய புருடர்களுக்கு ஜன்மஜன்மாந்திரங்களிலும் முக்திசித்தியாது. ஆகையால் பிர்மக்ஞானத்தில் விசுவாசத்தைவைக்கவேண்டும்.

കർമത്യാഗാന്ന സന്ന്യാസോ ന പ്രൈഷോച്ചാരണേന തു ।
സന്ധൌ ജീവാത്മനോരൈക്യം സന്ന്യാസഃ പരികീർത്തിതഃ ॥ (249)

(பொ) கர்மத்தைவிட்டதினாலும் பிரேஷோச்சாரணம் செய்ததினாலும் சந்நியாசமானது சித்திக்கமாட்டாது. ஜீவபரமாத்மாக்களுடைய சந்தியானவைக்கியமே சந்நியாசமென்று சொல்லப்படுகிறது.

വമനാഹാരവദ്യസ്യ ഭാതി സർവേഷണാദിഷു ।
തസ്യാധികാരസ്സന്ന്യാസേ ത്യക്തദേഹാഭിമാനിനഃ ॥ (250)

(பொ) தாரேஷணை வித்தேஷணை புத்திரேஷணை முதலானதுகளில் எவனுக்கு வாந்திசெய்த ஆகாரம்போல் தோன்றியிருக்கிறதோ, தேகாபிமானமற்றவனை அந்தப்புருடனுக்கே சந்நியாசத்திலதிகாரமிருக்கிறது.

യദാ മനസി വൈരാഗ്യം ജാതം സർവേഷു വസ്തുഷു ।
തദൈവ സന്ന്യസേദ്വിദ്വാനന്യഥാ പതിതോ ഭവേത് ॥ (251)

(பொ) சகலவஸ்துக்களினும் எப்பொழுது, எவன் மனதில்வைராக்கியமுண்டாயிருக்கிறதோ அப்பொழுதே, அந்தவித்துவானவன் சந்நியாசம்செய்துகொள்ளவேண்டும். அஃதற்றபுருஷன் சந்நியாசம் செய்துகொள்வானேயானால் பதிதனாகவே ஆகிவிடுவன்.

ദ്രവ്യാർഥമന്നവസ്ത്രാർഥം യഃ പ്രതിഷ്ഠാർഥമേവ വാ ।
സന്ന്യസേദുഭയഭ്രഷ്ടഃ സ മുക്തിം നാപ്തുമർഹതി ॥ (252)

(பொ) யாதொருபுருஷன் திரவியங்களைச்சம்பாதிக்கும் நிமித்தமாயாவது அன்னவஸ்திராதிகளைத்தேடுநிமித்தமாயாவது கீர்த்தியின்பொருட்டாவது சந்

நிபாசம் செய்துகொள்வானேயானால் கர்மமார்க்கத்திலும் ஞானமார்க்கத்திலும் நின்று நழுவிய உபயப்பிரஷ்டனாய் முக்தியையுமடையாமற்போகிறான்.

[illegible] ।
[illegible] ॥ (253)

(பொ) பிர்மதத்துவத்தையிடைவிடாமல்பார்ப்பதேஉத்தமசிந்தையென்றும், பிர்மசாஸ்திரங்களைச்சிந்திப்பது மத்தியமமென்றும், இதரமந்திரோபாசனைகளையதமசிந்தையெனவும், மயக்கத்தினால் தீர்த்தாடனம் முதலியவைகள்செய்வதே அதமாதமமென்றும், ஈசனால் கூறப்பட்டிருக்கிறது.

[illegible] ।
[illegible] ॥ (254)

(பொ) எந்தமூடன் அநுபவமின்றிவீணாய் பிர்மத்தினிடத்தில் சந்தோஷிக்கிறானோ அவன் ஜலத்தில் தோன்றுகிறபலத்தைச்சாப்பிட்டு சந்தோஷித்தவனுக்கொப்பாவான்.

[illegible] ।
[illegible] ॥ (255)

(பொ) எந்த சந்நியாசியானவன் உள்ளேயிருப்பதான பிர்மாநுசந்தானமாகிறமாதுகரத்தைவிடவில்லையோ அவனேவைராக்கியமாகிய பிதாவுடனும், சிரத்தையென்னும் மனைவியுடனும், ஞானமாகியமைந்தனுடனும் கூடினவனாய் முக்தனாயிருப்பன்.

[illegible] ।
[illegible] ॥ (256)

(பொ) தனவிருத்தர்களும் வித்தியாவிருத்தர்களும் முதிர்ந்தவயோவிருத்தர்களும், அந்த ஞானவிருத்தனுடைய சேவகர்களுக்குச்சேவகராவார்கள்.

[illegible] ।
[illegible] ॥ (257)

(பொ) என்னுடையமாயையினால் மோகிக்கப்பட்டமனதுடையவர்களாயும், சர்வவியாபகனாயும் ஆத்மாவாயுமிருக்கிறவென்னையடையாதவர்களாயுமிருக்கிற வித்துவான்களுங்கூட காக்கைகளுக்கொப்பாக உதரபோஷணையினிமித்தமாகவேகாலங்கழித்துக்கொண்டு திரிகிறார்கள்.

पाषाणलोहमणिमृण्मयविग्रहेषु पूजा पुनर्जननभोगकरी मुमुक्षोः । तस्माद्यतिः स्वहृदयार्चनमेव कुर्याद्बाह्यार्चनं परिहरेदपुनर्भवाय ॥ (258)

(பொ) சிலை, இரும்பு, ரத்தினம், மண்முதலியவைகளாற்செய்யப்பட்டிருக்கிற விக்கிரகாதிகளின் பூஜையானது முமுக்ஷுவுக்கு மறுபிறப்புக்குயோக்கியமாயும், போகத்தையளிப்பதாயுமிருக்கிறது. ஆகையால் பிர்மஞானம் நிறைந்த யதியானவன் தன் ஹிருதயத்தில் விளங்குகிற சுவயம்பிரகாசமான அறிவாகிற சிவனையே அர்ச்சனைசெய்யவேண்டும். மறுபடி மாதாவின் கர்ப்பத்தில் வந்து பிறவாமலிருப்பதற்காகவே வெளிபூஜையைத்தள்ளவேண்டும்.

अन्तःपूर्णो बहिःपूर्णः पूर्णकुम्भ इवार्णवे ।
अन्तःशून्यो बहिःशून्यः शून्यकुम्भ इवाम्बरे ॥ (259)

(பொ) சமுத்திரத்தில் மூழ்கியிருக்கிறகடமானது உள்ளிலும் வெளியிலும் பூர்ணமாயிருப்பதுபோல் சைதன்னியமான ஆத்மவஸ்துவானது சரீரத்துள்ளும் சரீரத்திற்குவெளியிலும் பூர்ணமாயிருக்கின்றது. ஆகாசத்திற்குள்ளிருக்கிற கடமானது உள்ளும் வெளியும் சூன்னியமாயிருப்பதுபோல் சைதன்னியத்திற்குள்ளிருக்கிற ஜகத்தானது உள்ளிலும் வெளியிலும் சூன்னியமாகவேயிருக்கின்றது.

मा भव ग्राह्यभावस्त्वं ग्राहकात्मा च मा भव ।
भावनामखिलां त्यक्त्वा यच्छिष्टं तन्मयो भव ॥ (260)

(பொ) கிரகிக்கப்பட்டபதார்த்தமாயும் நீ ஆகவேண்டாம். கிரஹிக்கிறவனுயுமாகவேண்டாம். சகலவாசனைகளுமிழந்தபின்னர், எந்த சைதன்னியவஸ்துவானது சேஷித்திருக்கிறதோ அந்தசொரூபமாகவேயிருக்கக்கடவீர்.

द्रष्टृदर्शनदृश्यानि त्यक्त्वा वासनया सह ।
दर्शनप्रथमाभासमात्मानं केवलं भज ॥ (261)

(பொ) காண்பான் காக்ஷி பொருளிவைகளை வாசனையுடன்விட்டு, அந்தக்கரணவிருத்திக்குமுன்விளங்குவதாயும் தனிமையாயுமிருக்கிற ஆத்மவஸ்துவைபஜிக்கக்கடவீர்.

संशान्तसर्वसङ्कल्पा या शिलावदवस्थितिः ।
जाग्रन्निद्राविनिर्मुक्ता सा स्वरूपस्थितिः परा ॥ (262)

(பொ) சகலசங்கற்பங்களும் சாந்தமாய் கற்போல் யாதொருஸ்திரமான விருப்பிருக்கிறதோ அந்த இருப்பே ஜாக்கிரம் நித்திரை இவைகளற்றமேலான சுவரூபஸ்திதியாம்.

(அ—கை) ஒருக்கால்பிர்மதேவரை சகலதேவரிஷிகளும் பூஜித்து தத்துவமஸியாதி மஹாவாக்கியார்த்தரகசியத்தை எங்களுக்குபதேசிக்கவேண்டுமென்று கேழ்க்க பிர்மாவானவர், வேதவியாசரின் மைந்தனை சுகப்பிர்மரிஷிக்கு செய்தி நான்கு மஹாவாக்கியபிர்மோபதேசத்தை, சுகோபநிஷத்தில் ஈசனுறைத்தவாறு யானிங்கு கூறுகின்றேன் கேழ்பீராக.

ருக்குவேதோபநிடதமான ஐதரேயோபநிஷத்தில் அப்பியாசவாக்கியமான (ப்ரஜ்ஞாநம்ப்ரஹ்ம) என்ற இரண்டுபதத்தில் முதற்பதமான பிரக்ஞான சப்தத்திற்கர்த்தம் கூறுகிறார்.

யெநெக்ஷதெயஶ்ருணோதீஜிக்ஷதிவ்யாகரோதிச।
ஸ்வாத்வஸ்வாதுவிஜாநாதிதத்ப்ரஜ்ஞாநமுதீரிதம் (263)

(பொ) எந்த அறிவால் கண்ணானது உருவத்தைப்பார்க்கிறதோ, எவ்வறிவால் செவியானது சப்தத்தைக்கேழ்க்கிறதோ, எவ்வறிவால் நாசிகையானது கந்தத்தை நுகருகிறதோ, எவ்வறிவால் நாவானது சுருசி அருசிகளையறிகிறதோ எவ்வறிவால் வாக்கு வசனிக்கிறதோ அந்த அறிவே (ப்ரஜ்ஞாநம்) பிரக்ஞானமென்று கூறப்படுகிறது.

(அ—கை) (ப்ரஹ்ம) பிர்மமென்றபதத்திற்கர்த்தமாவது.

சதுர்முகெந்த்ரதேவேஷுமநுஷ்யாஶ்வகவாதிஷு।
சைதந்யமேகம்ப்ரஹ்மாதஃப்ரஜ்ஞாநம்ப்ரஹ்மமய்யபி ॥ (264)

(பொ) பிரமன் முதல் கவாதிவரையுள்ள சகலவஸ்துக்களிலும் யாதொருசைதன்னியமானது ஒன்றாய்விளங்கிக்கொண்டிருக்கிறதோ அதுவேபிர்மமாம். ஆகையால் நம்மிடத்திலும் விளங்கிக்கொண்டிருக்கிற பிரக்ஞானமே பிர்மமென்றறி.

(கு—பு) ஐதரேயவுபநிஷத்தில் 3-வது அத்தியாயத்தில் (யெநவாரூபம் பஶ்யதி) என்றது முதல் (ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டா ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம) என்ற வாக்கியம்வரை மேற்கூறிய அர்த்தத்தை விரிவாய்க்கூறப்பட்டிருக்கிறது.

(அ—கை) அநுபவவாக்கியமான (அஹம்ப்ரஹ்மாஸ்மி) என்றமூன்று பதங்களில் (அஹம்) அஹமென்ற சப்தத்திற்கு அர்த்தமாவது.

ஶரீரே ஜ்ஞாநயோக்யே ஸ்மிந்நஹமித்யவபாஸதே ।
பூர்ணோ யோ புத்திஸாக்ஷீ ஸ அஹமித்யுச்யதே ॥ (265)

(பொ) ஞானத்திற்கு யோக்கியமான இந்த மானிடசரீரத்தில் பரிபூர்ணமாயும் பரமாத்மாவாயும் புத்திக்கு சாக்ஷியாயுமிருந்து நானென்று விளங்கிக்கொண்டிருக்கிறவரே அஹம் சப்தார்த்தரென்று சொல்லப்படுகிறார்.

(அ—கை) பிர்மசப்தத்திற்கு அர்த்தம் சொல்லுகிறார்.

ஸ்வபாவேந பூர்ணாத்மா ப்ரஹ்மஶப்தேந வர்ண்யதே ॥ (265½)

(பொ) சுவபாவத்தினாலேயே பூர்ணரான பரமாத்மாவே பிர்மசப்தத்தால் வர்ணிக்கப்படுகிறார்.

(அ—கை) (அஹம்ப்ரஹ்ம) அஹம் பிர்மமென்றவிரண்டு பதங்களுக்கும் ஐக்கியம் செய்கிற (அஸ்மி) என்ற பதத்தினர்த்தஞ்சொல்லுகிறார்.

அஸ்மீத்யைக்யபராமர்ஶஸ்தேந ப்ரஹ்ம பவாம்யஹம் ॥ (266)

(பொ) நானென்றவஸ்துவும் பிர்மமென்றவஸ்துவும் ஒன்றென்றைக்கியஞ்செய்து தானே பிர்மமென்றனுபவிப்பதே (அஸ்மி) அஸ்மி என்ற பதார்த்தமாம்

(கு—பு) சுக்கிலயஜுர்வேதகாண்வசாகை பிரகதாரண்யம் 3-வது அத்தியாயம் 4-வது பிராமணம் 10-வது வாக்கியம் (அஹம்ப்ரஹ்மாஸ்மீதி தஸ்மாத்தத்ஸர்வமபவத்) என்று கூறுகிறது.

(அ—கை) சாமவேதோபநிஷத்தான சாந்தோக்கியத்திற்சாற்றப்பட்டிருக்கிற உபதேசமஹாவாக்கியமென்ற (தத்த்வமஸி) தத்வமஸியென்ற மூன்று பதங்களில் (தத்) தத்யென்றபதத்திற்கர்த்தம் பகருகின்றார்.

ஏகமேவாத்விதீயம் ஸந்நாமரூபவிவர்ஜிதம் ।
ஸ்ருஷ்டே: புரா(அ)துநாப்யஸ்ய தாத்ருக்த்வம் ததிதீர்யதே ॥ (267)

(பொ) ஸ்வகத ஸஜாதீய விஜாதீயபேதமற்றதான ஏகமேவாத்விதீயமாயும் நாமரூபமற்றதாயுமிருக்கிற யாதொரு சத்வஸ்துவானது சிருஷ்டிக்குமுன்னிருந்தனவோ அவ்வஸ்துவே சிருஷ்டிக்குப்பின்னும் சன்மாத்திரமாயிருப்பதே (தத்) தத்தென்றபதத்தினர்த்தமாம்.

(அ—கை) (த்வம்) த்வம் யென்றபதத்தினர்த்தமாவது.

ஶ்ரோதுர்தேஹேந்த்ரியாதீதம் வஸ்த்வத்ர த்வம்பதோதிதம் (267½)

(பொ) சிரவணம்பண்ணுகிறவனுடைய தேகேந்திரியாதிகளுக்கதீதமான யாதொருவஸ்துவிருக்கிறதோ அதுவே இந்த மஹாவாக்கியத்தில் (நீ) யென்றபதத்தாற்சொல்லப்படுகிறது.

(அ—கை) (அஸி) அசியென்றபதத்தினர்த்தமாவது.

ஏகதா க்ராஹ்யதே(அ)ஸீதி ததைக்யமநுபூயதாம் ॥ (268)

(பொ) தத்பதவாச்சியார்த்தமான (மாயேசர்களை)த்தள்ளியும் துவம்பதவாச்சியார்த்தமான (அவித்தியா ஜீவர்களை)த்தள்ளியும் லக்ஷியார்த்தர்களான பிர்மகூடஸ்தர்களுக்கு ஏகமாய் விட்டுவிடாதயிலக்கணையாலைக்கியஞ்செய்வதே (அஸி) அசியென்றபதத்தினர்த்தமாம்.

(அ—கை) அதர்வணவேத சம்மந்தமான உத்ரதாபநீயவுபநிடதத்திலுரைக்கப்பட்டிருக்கிற சாக்ஷாத்காரவாக்கியமான (அயமாத்மா ப்ரஹ்ம) என்ற முப்பதங்களில் (அயம்) யென்றபதத்தினர்த்தமாவது.

ஸ்வப்ரகாஶாபரோக்ஷத்வமயமித்யுக்திதோ மதம் । (268½)

(பொ) சுவயம்பிரகாசமாயும் பிரத்தியக்ஷமாயுமிருக்கிற யாதொரு அறிவுண்டோ, அந்த அறிவே இவரென்ற சொல்லாற்சொல்லப்படுகிறார்.

(அ—கை) தேகாதிகளிலும் ஆத்மசப்தம் காணப்படுவதால் யாரை ஆத்மாவென்று சொல்லுகிறதென்றசங்கையினிவர்த்திக்காக எதார்த்த ஆத்மாவைக் கூறுகின்றார்.

அஹங்காராதிதேஹாந்தாத் ப்ரத்யகாத்மேதி கீயதே ॥ (269)

(பொ) அஹங்காரமுதல் தேகமீருயுள்ள தத்துவங்களுக்குவேருய்விளங்குகிறவர் யாரோ அவரே ஆத்மாவென்று சொல்லப்படுகிருர்.

(அ—கை) பிராமணுதிகளையும் வேதத்தையும் யக்ஞத்தையும் பிர்மமென்றுசொல்லியிருப்பதாலவைகளைத்தள்ளுகிறநிமித்தம் இம்மஹாவாக்கியத்திலிருக்கிற பிர்மசப்தத்திற்கர்த்தம் சொல்லுகிருர்.

த்ருஶ்யமாநஸ்ய ஸர்வஸ்ய ஜகதஸ்தத்த்வமீர்யதே ।
ப்ரஹ்மஶப்தேந தத்ப்ரஹ்ம ஸ்வப்ரகாஶாத்மரூபகம் ॥ (270)

(பொ) தோற்றப்பட்ட சகல ஜகத்திற்கும் எந்தவஸ்துவானது ஆதாரமாயிருந்துகொண்டிருக்கிறதோ அதுவே சுவயம்பிரகாசமான பிர்மவஸ்துவாம் (மற்றவைகள் பிர்மவஸ்துக்களல்ல).

(கு—பு) நரசிம்மோத்தரதாபநீயவுபநிடதம் பிரதமகண்டம் [ஸர்வம் ஹ்யேதத் ப்ரஹ்ம அயமாத்மா ப்ரஹ்ம] என்று கூறுகிறது.

அஜ்ஞாநதுர்த்ருஷ்டிவிவேகநித்ராஸமேதோஹம் ஸ்வப்நமதிம் கதோஹம் ।
ஸ்வப்ரபோதஸமுத்திதே தஸ்மின் ப்ரபோதிதோஸ்மி குருணா மஹாவாக்யபதை꞉
ப்ரபுத்த꞉ ॥ (271)

(பொ) அஞ்ஞத்மதிருஷ்டியாலவிவேகமாகிற நித்திரையையடைந்து நான் எனதென்னும் சுவப்பனத்தையடைந்து புலம்பினவென்னை சொரூபமாகிற சூரியனுதித்தபின்னர் குருவாகிய சினேகிதர் மஹாவாக்கியபதங்களால் ஞானஜாக்கிரத்தில் விழித்திருக்கும்படிசெய்த குருவையெந்நாளும் மறக்கவொண்ணு.

கார்யோபாதிரயம்ஜீவ꞉ காரணோபாதிரீஶ்வர꞉ ।
கார்யகாரணதாம்ஹித்வா பூர்ணபோதோவஶிஷ்யதே ॥(272)

(பொ) காரியவுபாதிகனே ஜீவனென்றும் காரணவுபாதிகனே ஈசனென்றும், காரியகாரணர்களான ஜீவேசுவரர்களைத்தள்ளி பூர்ணபோதமாய் சேஷித்திருக்கக்கடவாய்.

ஶ்ரவணம் து குரோ꞉ பூர்வம் மநநம் தத³நந்தரம் ।
நிதித்யாஸநமித்யேதத் பூர்ணபோதஸ்ய காரணம் ॥ (273)

(பொ) முதலில் குருவினிடத்தில் சிரவணமும், பிற்பாடு மனனமும், அதன்பின்னர் நிதித்தியாசனமும் செய்வதானது பூர்ணமான ஞானத்திற்கு முக்கிய காரணமாயிருக்கிறது. (ஆகையாலிவ்வித நான்குமஹாவாக்கியவிசாரங்களினுண்மை குருபக்தியுள்ளவனுக்கே நன்றாய் வெளியாகும்). இவ்வாறு சுகரகசியோபநிஷத்திலும் ஸ்ரீவித்தியாரண்யசுவாமிகளாலியற்றப்பட்ட பஞ்சதசியின் மஹாவாக்கியவிவேகத்திலும் கூறப்படுகின்றன.

(அ—கை) இவ்வாறு ஆத்மஞானமடைந்தமகான்களின்பெருமைகூறல்.

ஸந்த்யஜ்ய ஸ்வபுத்ரதாராம்ஶ்ச ஸர்வவிவர்ஜித꞉ ।
ஸம்ப்ரஜ்ஞாவஸ்தாவிஶேஷ꞉ கவஸ்துஷீஞ்ஜுஷேஸ ॥ (274)

(பொ) ஸமஸ்தபிராணிகளிடத்திலும் சமபுத்தியுடையவனும் வர்ணுசிரமமற்றவனுமிருக்கிற ஞானியானவன் குருடன்போலும் ஜடன்போலும் ஊமைபோலுமிம்மேதினியில் சஞ்சாரஞ்செய்துகொண்டிருக்கிறுன்.

தம் த்ருஷ்ட்வா ஶாந்தமநஸம் ஸ்ப்ருஹயந்தி திவௌகஸ꞉ ।
ஜ்ஞாநதண்டோ த்ருதோ யேந ஏகதண்டீ ஸ உச்யதே ॥ (275)

(பொ) இப்படி சஞ்சாரஞ்செய்துகொண்டிருக்கிற சாந்தமனதுடைய ஞானியைக்கண்டு தேவர்கள் புகழுகிறுர்கள். எந்த ஞானியினுல் ஞானமாகிய தண்டங்கிரகிக்கப்பட்டிருக்கிறதோ அவனே ஏகதண்டியென்று சொல்லப்படுகிறுன்.

அப்திவத் த்ருதமர்யாதா பவந்தி விஶதாஶயா꞉ ।
நியதிம் ந விமுஞ்சந்தி மஹாந்தோ பாஸ்கரா இவ ॥ (276)

(பொ) மரியாதையிற்கட்டுப்பட்டிருக்கிறசமுத்திரம்போல் நின்மலஞானிகள் லோகவிவகாரத்திற் கட்டுப்பட்டிருக்கிறுர்கள். சூரியனைப்போல் மஹான்கள் கர்மகதியைவிடவில்லையென்று நாரதபரிவிராஜகோபநிஷத்து 4-வதுபதேசித்திற்கூறப்படுகிறது.

(அ—கை) ஈசசிருஷ்டியின் லக்ஷணத்தையும் ஜீவசிருஷ்டியின் லக்ஷணத்தையும் ஜீவேசவாதங்களிலுண்டாகிற மயக்கத்தையும் அதின் நிவர்த்தியையும் சொல்லவேண்டுமென்று வினவிய ரிபுமகரிஷிக்கு வராகரூபியான மகாவிஷ்ணுவானவருபதேசித்தவாறு இங்கு சுருக்கியுரைக்கின்ருேம்.

ஈக்ஷணாதிப்ரவேஶாந்தா ஸ்ருஷ்டிரீஶேந கல்பிதா ।
ஜாக்ரதாதிவிமோக்ஷாந்த꞉ ஸம்ஸாரோ ஜீவகல்பித꞉ ॥ (277)

(பொ) பார்வைமுதல் பிரவேசமீருயுள்ள சிருஷ்டியானது ஈசனுற்கற்பிக்கப்பட்டது. ஜாக்கிரமுதல் மோக்ஷபரியந்தமுள்ள சம்சாரக்கற்பனையானது ஜீவனுலுண்டுபண்ணப்பட்டது.

த்ரிணாசிகேதாதியோகாந்தா ஈஶ்வரப்ராந்திமாஶ்ரிதா꞉ ।
லோகாயதாதிஸாங்க்யாந்தா꞉ ஜீவவிப்ராந்திமாஶ்ரிதா꞉ ॥ (278)

(பொ) திரணமுதல்காரண சரீராபிமானியான அந்தரியாமிவரையிலொவ்வொன்றுக்ளையுமீசுவரனென்று அததற்கேற்ற சுருதிஸ்மிருதிபுராணுதிகளுடன் ஒன்றுக்கொன்று மேலென்றுபாசிக்கிற ஜீவர்களீசுவரப்பிராந்தர்களென்று சொல்லப்

படுகிறார்கள். லோகாயதன்முதல் சாங்கியமீறாயுள்ளவாதிகள் ஒன்றுக்கொன்று மேலென்று அவரவர்களுக்குத்தகுந்த சுருதியுக்திகளாலும் அந்த மதாபிமானத்தாலும் அவைகளையே ஆத்மாவென்றாரோபிக்கிறவர்களெவர்களோ அவர்களேஜீவப்பிராந்தர்களென்று கூறப்படுகிறார்கள்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌰𑍍𑌨𑍈𑌵 𑌮𑌤𑌿𑌰𑍍𑌜𑍀𑌵𑍇𑌶𑌵𑌾𑌦𑌯𑍋𑌃 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑍇𑌨 𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ॥ (279)

(பொ) ஆகையால் முமுக்ஷுக்களினால் ஜீவேசவாதங்களிலொருக்காலும் புத்தியைச்செலுத்தவொண்ணா. பின்னையோவென்றால் நிச்சலமாயுள்ள பிர்மதத்துவத்தை விசாரிப்பதே அவர்களின் கடமை.

𑌅𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌯𑌦𑌾 𑌤𑌦𑌾 ।
𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌏𑌵𑌾𑌖𑌿𑌲𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍍𑌵 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑍍𑌵𑍇𑌹 𑌵𑌾 𑌸𑍁𑌖𑌮𑍍 ॥ (280)

(பொ) இரண்டற்றதாயிருக்கிற பிர்மதத்துவத்தை எவ்வளவுகாலம் எவர்களறியவில்லையோ அவ்வளவுகாலம்வரையிலவர்கள் பைத்தியங்கொண்டவர்களே தவிற வேறல்ல. அவர்களுக்குமுக்தியும் சுகமுமெவ்விடத்துண்டாகும்.

𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌧𑌮𑌭𑌾𑌵𑌶𑍍𑌚𑍇𑌤𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇𑌨 𑌕𑌿𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌸𑍍𑌥𑌰𑌾𑌜𑍍𑌯𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌃 𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌖𑌲𑍁 ॥ (281)

(பொ) ஜீவேசுவரர்களுக்குள் மேலென்றும் கீழென்றும் பார்ப்பதானது சொப்பனத்திலிராச்சியபரிபாலனஞ்செய்வதிலும் பிக்ஷையெடுப்பதிலும் சமானமாம். சொப்பனத்திலிருந்து விழித்தவனுக்கு அவ்விரண்டும் சம்மந்தப்படாததுபோல், ஞானஜாக்கிரத்தில் விழித்தவனுக்கு மேல் கீழென்றதோற்றமில்லை.

𑌅𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌚𑌿𑌦𑍍𑌰𑍂𑌪𑌤𑌃 ।
𑌸 𑌏𑌵 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌸 𑌶𑌿𑌵𑌃 𑌸 𑌹𑌰𑌿𑌰𑍍𑌵𑌿𑌧𑌿𑌃 ॥ (282)

(பொ) நாமே அறிவென்றதிருடக்ஞானத்தால் சகலஜகத்தையும் பிர்மமாய் யாவன் ஒருவிசேஷணமுமின்றி பார்த்திருக்கின்றானோ அவனே சாக்ஷாத்பிர்மக்ஞானி, அவனே சிவன், அவனே மால், அவனே அயன்.

𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌮𑌿𑌦𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌵𑌾 𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌮𑌨𑍋𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌂 𑌦𑍁𑌃𑌖𑌸𑌾𑌗𑌰𑌮𑍍 ॥ (283]

(பொ) இஜ்ஜகத்வாசனையே தீர்க்கசொப்பனமென்றும், இதுவே தீர்க்கமான சித்தமயக்கமெனவும், இதுவே தீர்க்கமாயுள்ள மனோராஜ்யமென்றும், இதுவே துக்கசமுத்திரமான சம்சாரமென்றும் கூறப்படுகிறது.

(அ—கை) வேதாந்தசாஸ்திரார்த்தத்தினுண்மையையறிவதற்கு நன்முயற்சியும் சாதுசங்கமும் மேலென்று வாசிஷ்டமுத்பத்திப்பிரகரணத்திற்கூறியிருப்பதைக்காண்பிக்கிறார்.

ஆபால்யாதலமப்யஸ்தைஶ்ஶாஸ்த்ரஸத்ஸங்கமாதிபி: ।
பௌருஷேண ப்ரயத்நேந யோஜநீயா ஶுபாவஹா ॥ (284)

(பொ) ஹே ராமா! பால்யமுதல் வேதாந்தசாஸ்திராப்பியாசத்தோடும் சாதுசங்கத்தோடுங்கூடிக்கொண்டிருக்கிற புருஷமுயற்சியால் சுபமானவழியைச் சேரக்கடவாய்.

ஸாதுஸங்கமஸச்சாஸ்த்ரபரோ பவஸி ராம சேத் ।
தத்திநைரேவ நோ மாஸை: ப்ராப்நோஷி பரமம் பதம் ॥ (285)

ஹே ராமா! சாதுசங்கசத்சாஸ்திரபரனாயிருப்பாயேல் அத்தினத்திலேயே இம்மேலான மோக்ஷத்தையடைவாயென்பதிலையமில்லை. இதற்கு மாதங்கள் வேண்டுவதில்லை.

(அ—கை) ராமன் வினவுதல்.

தீர்கஸம்ஸாரரோகஸ்ய நிவ்ருத்தி: கேந ஹேதுநா ।
ப்ராயஶ்சித்தம் விநா ஹந்த கதம் பகவந் பவேத் ॥ (286)

(பொ) ஹே முனே! வெகுகாலமாயிருக்கிற சம்சாரவியாதியானது எந்தக்காரணத்தால் நிவர்த்தியடையும்? அதெவ்விதம் வந்தது? அதற்குப்பிராயச்சித்தம் யாது? அதையுரைக்கக்கடவீர்.

(அ—கை) வசிஷ்டருத்தரமளிக்கின்றார்.

மஹதாம் ஸங்கமோ ராம ஸம்ஸாராமயபேஷஜம் ।
தைவாத்தமபி தம் த்யக்த்வா ப்ராயஶ்சித்தம் ந வித்யதே ॥ (287)

(பொ) மஹான்களின் சங்கமே சம்சாரவியாதிக்கு மருந்தாயிருக்கிறது அஃதன்றிவேறொன்றினாலும் நீங்காது. தெய்வகிருபையினாற்சாதுசங்கம் கிடைத்துமதையெவன்விட்டிருக்கின்றானோ அவனுக்குப் பிராயச்சித்தமொன்றுமில்லை.

த்யஜ மத்யவிஸம்ஸாரஸாமராத்ராரணேக்ஷண: ।
ஸத்ஸங்கமஸ்ய மோஹ்யக்ஷயத்யாஜ்யம் க்ஷணாக்ஷணா ॥ (288)

(பொ) இம்மூவுலகிலும் சம்சாரசமுத்திரத்தைக்கடப்பதற்கு சாதுசங்கமாகிறவோடமே முக்கியஹேதுவாம். அதனை முமுக்ஷுக்களாலொருக்காலுந்தவறத்தகா.

[illegible] ।
[illegible] ॥ (289)

(பொ) பிர்மஹத்தியாதிமஹாபாபங்களுக்கு பிர்மக்ஞானமே பிராயச்சித்தமாயிருக்கிறது. அந்தக்ஞானம் சாதுசங்கத்தாலுண்டாகிறது. அச்சாதுசங்கத்தையிப்புவியிலொருவராலும் விடத்தகுந்ததன்று.

(அ—கை) கற்கடியானவள் கிராதராஜமந்திரிகளைக்கண்டு தனதபிப்பிராயத்தையுரைக்கின்றனள்.

[illegible] ।
[illegible] ॥ (290)

(பொ) ஒன்றினால் பண்ணப்படாததான பிர்மசுகத்தையும் கீர்த்தியையும் ஆயுசையும் விரும்பியபுருஷர்களால் குணசாலிகளான மஹான்களுக்குவேண்டுவதைக்கொடுத்துப்பூஜிக்கக்கடவர்கள்.

[illegible] ।
[illegible] ॥ (291)

(பொ) சாந்தியாதிகுணங்கள் நிறைந்த மஹான்களின் சரீரத்தை யான் புஜிக்கவிரும்பேன். அவர்களையானெப்பொழுதும் பூஜைசெய்வேன். சாதுக்கள் ஜீவத்துக்கொண்டிருப்பார்களேயானால் அவிவேகிகளின் மனதைக்குளிரபண்ணுவார்களன்றோ.

[illegible] ।
[illegible] ॥ (292)

(பொ) யான் சாதுக்களைஜீவிக்கும்படி செய்வேனேயானால் அவர்கள்குணசாலிகளை ரெக்ஷிப்பார்கள். குணவான்களாகிய சாதுசங்கமென்னும் ஔஷதத்தால் யமனும் மித்திரனாகிறானன்றோ.

[illegible] ।
[illegible] ॥ (293)

(பொ) குரூரசுவபாவமுடைய ராக்ஷஸியாகிய நான் குணசாலிகளை ரக்ஷிப்பேனேயானுல், மற்றவர்கள் ஹிருதயத்திற்கு ஹாரம்போல் விளங்குகிற நிர்மலர்களான மஹான்களை ஏன் பூஜிக்கமாட்டார்கள்.

உதாரகுணயுக்தாயேவிஹரந்தீஹமேதிநீ: ।
ப்ராப்தாவதாரா: ஸஜ்ஜநா லோகரக்ஷாயவாரிணஃ ॥ (294)

(பொ) உதாரமுதலான சத்குணங்கள் நிறைந்தவர்களாயும், சகலமுமுக்ஷுக்களுமுய்யுவண்ணம் புவியிற்ரோன்றின சந்திரர்களாயும் லோகரக்ஷார்த்தமாயவதரித்தவர்களாயுமிருக்கிற இம்மஹான்கள் இம்மேதினியிற்சரீரத்துடன் சஞ்சரித்துக்கொண்டிருக்கிருர்கள்.

உத்திதஸ்மாத்ஸமாதேஸ்து நிர்விகல்பஸமாதித: ।
அஜ்ஞாநாவா ததஜ்ஞாநாவா பரீக்ஷேஹம் க்ஷணாதிஹ ॥ (295)

(பொ) மஹான்களைத்தரிசிக்கும் நிமித்தமாகவே நிர்விகல்பசமாதியினின்றெழுந்து யான் வந்திருக்கின்றேன். ஆகையால் நம்மெதிரில் வரும்புருடர்கள் அக்ஞானிகளா அல்லது ஞானிகளாவென்று க்ஷணத்திலிப்பொழுதேபரிக்ஷித்தறிகின்றேன்.

க்ஷந்த்வாயேநாஸநஜ்ஞாஸ்தேநாவ்யாயேஸ்துநாஸநம் ।
அநேகஜந்மஸம்ஸிஜாதபுண்யஸாதஸம்பதி: ॥ (296)

(பொ) நம்மெதிரில் வந்திருக்கிறபுருடர்கள் அக்ஞானிகளேயாயின் என் க்ஷுத்வியாதிக்கிரையாவார்கள். ஞானிகளேயாயின் என் மனோவியாதியை நாசஞ்செய்யயோக்கியராவார்கள். வெகுதுர்லபமாயிருக்கிற இச்சாதுசங்கதியானது அனேககோடி ஜன்மங்களிற்செய்த புண்ணியவிசேஷத்தாற்சித்திக்குமன்றோ.

ம்ருதிமத்பரிஸ்லாநோஜீவிதம்ஸம்ஸ்ரய: ।
ஸம்ஸ்மராவமாதிஜீவிதாத்பணிஸம்ஸ்ரயாத் ॥ (297)

(பொ) ஞானவான்களாற்றள்ளப்படுகிறவனே மரணத்தோடுகூடினவனும் ஞானவான்களாற் கிரகிக்கப்படுகிறவனே ஜீவனோடுகூடியவனும். மஹான்களுடன் சகவாசஞ்செய்துகொண்டிருப்பவனுக்கு சுவர்க்கமும் மோக்ஷமும் வேண்டுவதில்லையென்று வாசிஷ்டமுத்பத்தி பிரகரணம் கற்கடியுபாக்கியானத்திற்கூறுகிறது.

(அ—கை) கிரித்திரிமேந்திரோபாக்கியானத்தில் மகததேசாதிபதியான இந்திரத்யும்னனுடைய பத்தினியாகியவகலியானவள் கிரித்திரிமேந்திரனுடைய

வாசையால்ராஜபோகத்தையிழந்து அவனுடன் திரிந்துகொண்டிருந்தசங்கதிதெரிந்து அவனையும் மனைவியையும் சிக்ஷித்துக்கொண்டிருக்கும்போது அவன் மனைவியானவள் சொல்வதாவது.

ஜெஹெஹக்ஷெதவிவியஜெஹமணஂகரொதிஸ்வாவநாவிவநவஂநவ ஶாஶ—வெதஃ। விதெக்ஷெதத—நகரொதிஹிகிஷிஜெஷஜெஹஸ்ஸுதஸு உந—வாஜயஹித்ரூதஂ ॥ (298)

(பொ) ஹே ராஜன்! இத்தூலவுடல் சொப்பனவஸ்தையில் கீழ்விழுந்தவுடன் மனமானது தான் தானே நானாவிதமானவுடல்களை புதிதுபுதிதாய்த்தரித்து சுகதுக்கங்களையடையப்படுவதாய்ப்பார்க்கப்படுவனபோல், இச்சகத்திற்சகல சம்சாரங்களுமிச்சித்தத்தினுலுண்டாயிருக்கிறதென்றுணர்ந்து இத்தேகத்திலபிமானத்தைவிட்டு சித்தமாகிய ரத்நத்தை பரிபாலனம் செய்யக்கடவீர்.

(அ—கை) ஷை வாசிஷ்டத்தில் பாலகோபாக்கியானத்தில் வளர்ப்புத்தாயானவள் இராஜமைந்தனுக்குக்கூறியிருப்பதை இங்கு உதகரிக்கப்படுகிறது.

ஶூஉளஶநஸுஉந—வஂயவிஶொக்ஷஉ்ரஷிஃவஸ்ாத்ர வஷுர வ ந ா ஹ— வநாஹியாநா। ஜத்ர்ாஷிகாஷ்ஹிதிரியஂஹிமதாவ்ரதிஷ்டாஶாவ்ராயிகாஸ—ஹமவாஜஜெநாஷிதெவ ॥ (299)

(பொ) முதலில் மனதுண்டாயிற்று, அதன்பின்னர் பந்ததிருஷ்டியும் மோக்ஷதிருஷ்டியுமுண்டாயின. பிறகு ஜகத்தோற்றமுண்டாயிற்று. அத்தோற்றமுதலானவிருப்பானது பாலன் கதைக்கொப்பாம்.

மேற்கோள். சுஸதெதாயிஶமநாஸ்ருஜ்ஜத। ஶநஃவ்ரஜாவதிஶஸ்ருஜத। வ்ரஜாவதிஃவ்ரஜாசுஸ்ருஜத।

(பொ) அசத்தானமாயையினிடத்தினின்று மனதுண்டாச்சுதென்றும் அம்மனது பிர்மதேவரையுற்பத்திசெய்ததென்றும், அப்பிர்மதேவர்பிரஜைகளை உண்டுபண்ணினரென்றும், எஜுர்வேதம் 2-வதஷ்டகம் 2-வது பிரசனம் 1-வது வாக்கியத்திற்கூறியிருக்கின்றது.

ஜயஂஸஂஸாரரவநாவிவாரொஸிதவெதஸாஂ।
வாஜகாவ்ராயிகெவெஷஶவஷிதிஶ—வாமதா ॥ (300)

(பொ) இச்சம்சாரத்தோற்றமானது அவிசாரத்துடன்கூடின மனதுடையவர்களுக்கு பாலன்கதையினிருப்பையடைந்ததாயிருக்கிறது.

(அ—கை) வசிஷ்டர் ராமச்சந்திரனுக்கு சங்கற்பலக்ஷணத்தையும் அதி னிவர்த்தியுனுபாயத்தையும் கூறுகிறார்.

𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌜𑌾𑌲𑌕𑌲𑌨𑍈𑌵𑌜𑌗𑌤𑍍𑌸𑌮𑌗𑍍𑌰𑌂𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌜𑌾𑌲𑌕𑌲𑌨𑌾𑌖𑌲𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌲𑌾𑌸𑌃 ।
𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌲𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌹𑌿𑌰𑌾𑌮𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍍

(பொ) சகல ஜகத்தும் சங்கற்பக்கூட்டங்களாகிற கற்பனையினாலேயே தோற்றப்படுகின்றன. அச்சங்கற்பநிறைந்தகற்பனையும் மனோவிலாசத்தாற் பார்க்கப்படுகின்றன. சங்கற்பமாகிற மலத்தைத்தள்ளி நிர்விகற்பத்தையடைந்து ஹே ராமா நிச்சயமான உபசாந்தியையடையக்கடவீர்.

𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑌂𑌮𑌨𑌸𑌾𑌰𑌾𑌮𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑌂𑌵𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌾𑌘𑌵 ।
𑌯𑌤𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌂𑌮𑌨𑌸𑌾𑌰𑌾𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌂𑌵𑌿𑌦𑍍𑌧𑌿𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 ॥ (302)

(பொ) ஹே ராமா! மனதினாலெது செய்யப்பட்டிருக்கிறதோ அதுதான் செய்யப்பட்டதாயிருக்கிறதென்றறியக்கடவீர். எது மனதினால் விடப்பட்டிருக்கிறதோ அதுதானெப்பொழுதும் விடப்பட்டதெனவுணரக்கடவீர்.

𑌅𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑌹𑌾𑌵𑍍𑌯𑌾𑌧𑍇𑌶𑍍𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌾𑌯𑌾𑌂𑌵𑌰𑍌𑌷𑌧𑌂 ।
𑌸𑍍𑌵𑌾𑌯𑌤𑍍𑌤𑌂𑌶𑍃𑌣𑍁𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌸𑍁𑌸𑌾𑌧𑍍𑌯𑌂𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌂 ॥ (303)

(பொ) இந்த மனதாகிற மஹாவியாதிக்கு சாதுக்களால் நிச்சயம்பண்ணப்பட்டதாயும், தன்ஸ்வாதீனமாயும், தன்னால் நன்றாய்ச்சாதிக்கத்தகுந்ததாயுமிருக்கிற மேலானவௌடதத்தை யான் கூறுகின்றேன் நீர் கேழ்க்கக்கடவீராக.

𑌤𑍍𑌯𑌜𑌨𑍍𑌹𑌿𑌤𑌂𑌵𑌸𑍍𑌤𑍁𑌯𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿𑌨𑌿𑌰𑌾𑌶𑌯𑌃 ।
𑌜𑌿𑌤𑌮𑍇𑌵𑌮𑌨𑌸𑍍𑌤𑍇𑌨𑌬𑌾𑌹𑍍𑌯𑌵𑍍𑌯𑌸𑌨𑌸𑌨𑍍𑌤𑌤𑌾 ॥ (304)

(பொ) யாதொரு புருஷன் தனக்குப்பிரியமான வஸ்துவைவிட்டு மனோவியாதியற்றவனாயிருக்கிறானோ அவனே மனதை ஜயித்தவனாயும் வெளிவிஷயவியாபாரத்தின் பரபரப்பை இழந்தவனாயுமிருக்கிறான்.

𑌸𑍍𑌵𑌾𑌯𑌤𑍍𑌤𑌮𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌹𑌿𑌤𑌂𑌸𑍍𑌵𑍇𑌪𑍍𑌸𑌿𑌤𑌤𑍍𑌯𑌾𑌗𑌵𑍇𑌦𑌨𑌂 ।
𑌯𑌸𑍍𑌯𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌤𑌾𑌂𑌯𑌾𑌤𑌂𑌧𑌿𑌕𑍍𑌤𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑍀𑌟𑌕𑌂 ॥ (305)

(பொ) சுவாதீனமாயும் ஏகாந்தத்திற்கிதமாயுமிருக்கிற தன்னிச்சாத்தியாகமான ஞானமானது எவனுக்குப்பிரயாசமாயிருக்கிறதோ அந்தப்புருஷப்புழு வைச்சுடவேண்டும்.

பரம் பௌருஷமாஶ்ரித்ய நீத்வா சித்தமசித்ததாம் ।
தாம் ஸமாபதவீம் [illegible] யத்ர நாஸ்தி பதாந்தரம் ॥ (306)

(பொ) மேலான புருஷப்பிரயத்தனத்தையாசிரயித்து சித்தத்தைச்சித்தமற்றதாய்ச்செய்து, எப்பதவியையடைந்தால் வேறுபதவிவேண்டாவோ அவ்வுன்னதபதவியையடையக்கடவாய்.

[illegible] ।
[illegible] த்ரைலோக்யவிஜயீ த்ருணம் ॥ (307)

(பொ) விஷயத்தில் பரபரப்பாயிருப்பதே பந்தஹேது, பரபரப்பற்றிருப்பதே மோக்ஷஹேது. எப்புருஷனுக்கு மனோஜயமுண்டாயிருக்கிறதோ அப்புருஷன் மூன்று லோகத்தையும் திருணமாய் ஜயித்தவனுயாவன்.

அயம் ஸோऽஹமிதம் தந்ம ஏதாவந்மாத்ரகம் மந: ।
கல்பாந்தபவனா வாந்து யாந்து சைகத்வமர்ணவா: ॥ (308)

(பொ) இத்தேகமே நான், பிரபஞ்சமே சத்தியமென்றெவனுக்குத்திருடமாய்த்தோன்றியிருக்கிறதோ அவனே மனதுடன் கூடியவன். ஊழிக்காற்றடித்தாலுமடிக்கட்டும், சப்தசமுத்திரமுமொன்றுனுலுமாகட்டும், அதினுல் மனோஜயமுள்ளபுருஷனுக்கொருகுறைவுமில்லை.

தபந்து த்வாதஶாதித்யா நாஸ்தி நிர்மனஸ: க்ஷதி: ।
அஸங்கல்பாதிஸாம்ராஜ்யே திஷ்டாவஷ்டப்ததத்பத: ॥ (309)

(பொ) துவாதசாதித்தியர்களேககாலத்திலுதித்துத்தாபத்தையுண்டுபண்ணினுலும் மனதற்றபுருஷனுக்கு யாதொருகெடுதியுமில்லை. அசங்கற்பரூபமான பதவியையடைந்தவனுகி ஆத்மசாம்பிராஜ்யத்திலெப்பொழுதுமிருக்கக்கடவீர்.

[illegible] ।
[illegible] ॥ (310)

(பொ) எந்த ஆத்மவித்துக்களுடைய மனதானது, மேலானபரிசுத்தமாயும், மகாகுளிர்ச்சியாயும் சமத்துவமாயும் அகங்காரமற்றதாயுமிருந்து எந்தவஸ்துவில் சேடித்திருக்கிறதோ அந்த உத்பத்தியற்றபதவியானது உமக்குண்டாகட்டும்.

[illegible] ।
[illegible] ॥ (311)

345 (பொ) சிட்டுக்குருவியானது தன் மனைவியுடன் கலந்து அனேககுஞ்சுகளைப்பொரித்து சமுத்திரக்கரையினோரத்தில் வைத்திருக்க அவைகளை சமுத்திரராஜன் தன்னலைகளாகிறகைகளினாலெடுத்துப்போய்விட அச்சிட்டுக்குருவிசமுத்திரராஜனுடன் கோபமாகி தன்மூக்கில் வைக்கப்பட்ட தர்ப்பைநுனியால் சமுத்திரஜலத்தைவற்றச்செய்துவிடலாமென்றெண்ணி தன்மனைவிபந்துக்கள் முதலானவர்களின் வார்த்தைக்கிணங்காமல் தான் தனியாய் தர்ப்பைநுனியால் சமுத்திர ஜலத்தை துளிதுளியாகயிறைக்கமுயன்ற சங்கதியறிந்து மற்றப்பக்ஷிகளும் அச்சிட்டுக்குருவியுடன்கூடி அதுபோலவேயிறைக்கவாரம்பித்தன. அச்சங்கதியையறிந்த பக்ஷிஜாதிகள்யாவுமவ்வாறே செய்யத்தொடங்கின.

இதைக்கண்ணுற்ற நாரதரானவர் சிட்டுக்குருவியினிடம் வந்து ஹேதிட்டிபமே! அற்பமாயிருக்கிற நீயும் உன்னுடன்சேர்ந்த பக்ஷிகளும் பிரளயகாலத்திலும் வற்றாததான ஆழியை எவ்வாறு வற்றச்செய்யப்போகின்றீர்கள். நீங்களெவ்வளவு முயற்சிசெய்யினுமொருக்காலுமிச்சமுத்திரம் வற்றமாட்டாது. ஏன் வீணில் வருத்தமுறுகிறீர்களென்று வெகுவாய்ச்சொல்லியும், எங்கள் விஷயத்தில் நீர் கவனிக்கவேண்டுவதில்லையெனநிராகரித்துக்கூறிமுன்போலவே எல்லாப்பக்ஷிகளும் மூக்குநுனியில்வைத்த தர்ப்பநுனியாலிறைக்கவாரம்பித்தன. இவைகளின் விடாமுயற்சியையறிந்த பிர்மகுமாரனும் வைகுண்டமேகி மஹாவிஷ்ணுவின் சமீபத்தில் நின்றுகொண்டு புன்னகை செய்தனர். சர்வக்ஞரும் சகலஜகத்கர்த்தாவாயுமிருக்கிற ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் ஹேநாரதா! யாதுகாரணம்பற்றி நகைக்கின்றீரெனவினவ, ஹே சுவாமின் பக்ஷிராஜனென்று பெயர்வகித்தகருடன் தன் ஜாதீயரான சிட்டுக்குருவிகளினவமானத்தை நினைத்துப்பாராமல் அரசனென்றுமாத்திரம் பெயர்வைத்துக்கொண்டிருக்கிறானென்றுசொல்ல, இவ்வார்த்தையைக்கேட்டகருடன் வெகுகோபத்துடன் சமுத்திரம்வந்தடைந்து தன்னிறக்கைகளாலொருக்ஷணத்திற்குள் பாதிஜலத்தைவற்றடித்ததைக்கண்ட சமுத்திரராஜன் வெகுவியசனத்துடன் பக்ஷிராஜனான கருடனைச்சரணாகதியடைந்து தன்னைமன்னிக்கவேண்டுமென வெகுவிதமாய்வேண்ட அச்சமுத்திரராஜனாற் கொண்டுபோகப்பட்ட முட்டைகளைமீட்டியச்சிட்டுக்குருவிக்கீய்ந்து சுகமாயிருக்கும்படி நியமனஞ்செய்து தான் ஸ்வஸ்தானமான வைகுண்டமேகினர்.

(அதுபோல்) மனோநிக்கிரகமானது வெகுப்பிரயாசமாயிருந்தாலும் தன் விடாமுயற்சியால் சமதமாதிசாதனம் நிறைந்த முமுக்ஷுவானவன் சம்சாரமாகிற சமுத்திரத்தை வற்றடிக்கக்கூடியதான பிர்மவிசாரத்தாலும், குருவனுக்கிரகத்தாலும் சத்சங்கச்சேர்க்கையாலும் தினந்தோறும் க்ஷணிககாலமாவது நன்முயற்சியுடன்கூடி வியசனமுறாமல் அகண்டாகாரவிருத்தியின் மிகுதியால் சொரூபத்தில் மனதை நிர்விகற்பாகாரமாய்ச்செய்து எங்கும் பூர்ணமாய் நிறைந்தபிர்ம

மாய்விடுவாயென்று வித்தியாரண்ணியரின் குருவான சங்கரானந்தராற்செய்யப்பட்ட ஆத்மபுராணத்திலும் யோகதத்துவோபநிஷத்திலும் விரிவாய்க்கூறியிருப்பதால் நீருமவ்விதஞ்செய்யக்கடவீர்.

(அ—கை) இங்ஙனமுரைத்தவாசானை வணங்கி சிரவணாதிலக்ஷணத்தையும், சமாதியினிலக்கணத்தையுமனுக்கிரஹிக்கவேண்டுமென வினவியசீடனுக்கு பதேசிக்கிறார்.

## சிரவணத்தினிலக்கணங்கூறல்.

ஸவ்வவெதாந்தவாக்யாநாம் ஷட்விலிங்கைஃ ஸதத்வயெ ।
வரெ ஃப்ரஹ்மணி தாத்பர்யநிஸ்சயஃ ஸ்ரவணம் விதுஃ ॥ (312)

(பொ) சகலவேதாந்தவாக்கியங்களும் ஷட்விதலிங்கதாத்பரியத்தால் சத்தானவத்துவைதமாயும் சிரேஷ்டமாயுமிருக்கிற பிர்மத்தினிடத்தில் முடிவான நிச்சயத்துடன்கூடியிருப்பதே சிரவணமென்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

உவக்ரமொவஸம்ஹாராவப்யாஸொவூர்வதாபலம் ।
அர்த்தவாதொவவத்தீச லிங்கம் தாத்பர்யநிர்ணயெ ॥ (313)

(பொ) சுருதிதாத்பரிய நிர்ணயத்தின்பொருட்டு உபக்கிரமோபசம்ஹாரம், அப்பியாசம், அபூர்பதை, பலம், அர்த்தவாதம், உபபத்தியென்று ஆறுவித லிங்கங்கள் கூறப்படுகின்றன.

(கு—பு) சாந்தோக்கியோபநிடதம், 6-வது பிரபாடகம் 2-வது காண்டம் 1-வது வாக்கியமான [ஸதெவஸொம்யெதமக்ர ஆஸீதெகமெவாத்விதீயம்] ஹே சுவேதகேதோ சுவகதசஜாதிய விஜாதியபேதமற்றதான ஏகமேவாத்துவிதீயமான சத்வஸ்துமாத்திரமிருந்ததெனவும் 6-வது பிரபாடகம் 8-வது காண்டம் 7-வது வாக்கியமான [ஐததாத்ம்யமிதம் ஸவ்வம் தத்ஸத்யம்] தோணப்படுகிற சகலஜகத்தும் பிர்மமென்று கூறியிருப்பதே முதலாவதுலிங்கமான உபக்கிரமோபசம்ஹாரமாம்.

(2) ஸஎஷொணிமைததாத்ம்யமிதம் ஸவ்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்வமஸி ஶ்வெதகெதொஇதி—அந்த இந்த ஆத்மாவே சகலநாமரூபஜகத்தாய்விளங்குகிறதோ அதுவேதத்பதமென்றும், சத்தியமென்றும், அதுவே ஆத்மாவென்றும், அதுவே நீயாயிருக்கிறாயென்றும், தன்மைந்தனான சுவேதகேதுவுக்கு உத்தாலகமஹரிஷி 6—பி—8—கண்டம் 7—வாக்கியத்திலும், 9—கண்டம் 4—வாக்கியத்திலும், 10—க—3—வாக்கியத்திலும் 11—க—3—வாக்கியத்திலும், 12—க

—3—வாக்கியத்திலும், 13—க—3 வாக்கியத்திலும், 14—க—3—வாக்கியத்திலும், 15—க—3—வாக்கியத்திலும், 16-க-3-வாக்கியத்திலும், நீயே [தத்வமஸி] யென்று 9 தடவை உபதேசித்திருப்பதே 2-வது லிங்கமான அப்பியாசவாக்கியமாம்.

(3) ஆசார்யவாந் புருஷோவேத—இந்த மனுஷ்ய சரீரத்தில் ஆசாரியருடன் கூடியிருக்கிற புருஷனே பிரத்தியக்ஷ முதலான வாக்குகளாலறியாமல் சப்தவாக்கியத்தால் பரமாத்மவஸ்துவையறிவானென்று 6—பி—14—க—2—வாக்கியமான அபூர்வதையென்ற 3-வதுலிங்கமாம்.

(4) தஸ்ய தாவதேவசிரம் யாவந்நவிமோக்ஷ்யேஸம்பத்ஸ்ய இதி—குருவினுபதேசத்தால் அகண்டைகரசானந்தத்தையடைந்த ஞானி பிராரப்தபோகம் புஜித்து தீர்ந்தவுடன் விதேக கைவல்லியத்தையடைவதே 6—பி—14—க—2—வாக்கியத்திற்சொல்லியபலமென்ற 4-வது லிங்கமாம்.

(5) யேநாச்ருதம் ச்ருதம்பவதி அமதம் மதமவிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி—எந்த ஞானத்தாற் கேட்கப்படாத வஸ்துவெல்லாம் கேட்கப்பட்டதாயாகுமோ, எந்தஞானத்தாலெண்ணப்படாத வஸ்துக்களெல்லாமெண்ணப்பட்டதாயாகுமோ, எந்த ஞானத்தாலறியப்படாததெல்லாமறியப்பட்டதாகுமோவென்று 6—பி—1—க—3—வாக்கியத்திற்கூறிய அர்த்தவாதமென்ற 5-வது லிங்கமாம்.

(6) யதாஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்—ஹேசுவேதகேதோ ஒரு மண்பாண்டத்தை மண்ணென்றுணர்ந்தாலெல்லாபாண்டமும் மண்ணென்றுணரலாமென்றும், கடமென்றசொல்லும் வயருபெருத்து வாய்குவிந்திருக்கிற விகாரமான ரூபம் யாவும் வாக்கினுற் சொல்லப்பட்ட சொல்மாத்திரமேதவிர வேறில்லையென்றும், மண்மாத்திரமே உண்மையென்றும் 6—பி—1—க—4—வாக்கியத்திற்கூறியிருப்பதே உபபத்தியென்ற 6-வது லிங்கமாம்.

மேற்கூறிய திருஷ்டாந்தம்போலிரும்பையும் தங்கத்தையும் திருஷ்டாந்தமாய்க்கூறியிருக்கிறர். இவ்வாறுவிதலிங்கங்களுடன் பிர்மத்தை குருமுகமாயறிவதே சிரவணமாம்.

(அ—கை) மனனமாவது.

ச்ருதஸ்யைவாத்வீயஸ்ய வஸ்துந: ப்ரத்யகாத்மந: ।
வேதாந்தவாக்யாநுகுணயுக்திபிஸ்த்வநுசிந்தநம் ॥ (314)

(பொ) குருமுகமாய்க்கேட்ட இரண்டற்றபிரத்தியகாத்மவஸ்துவினுடைய நிர்ணயமான வேதாந்தவாக்கியானுகுணயுக்தியாற் சிந்திப்பதே மனனமாம்.

(அ—கை) நிதித்தியாசனமாவது.

श्रवणज्ञातार्थस्य साक्षात्करणकारणम् ।
विपरीतात्मधीर्यावद्विनश्यति न चेतसि ॥
तावन्निरन्तरं ध्यानं कर्तव्यं मोक्षमिच्छता । (315½)

(பொ) சிரவணமனனங்களால் நிச்சயஞ்செய்யப்பட்ட அர்த்தத்தை சாக்ஷாத்காரம் பண்ணுநிமித்தம் மனதிலெவ்வளவுகாலபரியந்தம் விபரீதபாவனையானதேகாத்மபுத்தியானது நாசமடையவில்லையோ அவ்வளவுகாலபரியந்தம்மோக்ஷத்தையிச்சித்த முமுக்ஷுவாலிடைவிடாமல் நிதித்தியாசனஞ்செய்யக்கடவன்.

यावन्नैतन्निरस्येत दृश्यप्रपञ्चोऽपरोक्षबोधतः ।
विलीयते तावदहर्निशं भिक्षुणा श्रवणादि सम्यक्करणीयमेव ॥ (316½)

(பொ) திருசியப்பிரபஞ்சமானதெவ்வளவுகாலமபரோக்ஷஞானத்தால் நன்றாய்த்தள்ளப்படவில்லையோ அவ்வளவுகாலம் சன்னியாசியான முமுக்ஷு, சிரவண மனன நித்தியாசனாதிகளை நன்றாய்ச்செய்யக்கடன்.

(அ—கை) ஆறுவிதசமாதிகளின் லக்ஷணங்கூறல்.

सविकल्पो निर्विकल्प इति द्वेधा निगद्यते ।
ज्ञात्राद्यविलयेनैव ज्ञेये ब्रह्मणि केवले ॥ (317½)

(பொ) சவிகற்பமென்றும் நிர்விகற்பமென்றுமிரண்டுவிதமாம். ஞாதாவானஜீவனும் ஞானமானமனதும் ஞேயமானகேவலபிர்மத்தில்லீனத்தையடையாதே நிர்விகற்பசமாதியாம்.

तदाकाराकारितया चित्तवृत्तेरवस्थितिः ।
सैषैव विज्ञेयः समाधिः सविकल्पकः ॥ (318½)

(பொ) பிர்மாகாரமான சித்தவிருத்தியினிருப்பானது யாதொன்றுண்டோ அதுவே மஹான்களால் சவிகற்பசமாதியென்று கூறப்படுகிறது.

मृदेवावभातेव मृण्मयद्विपभानवत् । सन्मात्रवस्तुभा-
नेऽपि त्रिपुटी भाति सन्मयी ॥ समाधिरत एवायं सविकल्प इतीर्यते ॥

(பொ) மண்ணாற்செய்யப்பட்ட கரியானது யானைபோல் பார்க்கப்பட்டாலும் மண்ணைத்தவிரவேறில்லாததுபோல், சன்மாத்திரமானவஸ்துவின் விளக்க

த்தில் திருபுடிதோற்றினும் சத்தைத்தவிரவேறல்லவென்று பார்ப்பதே சவி கற்பசமாதியென்று கூறப்படும்.

(அ—கை) நிர்விகற்பசமாதியின் லக்ஷணங்கூறல்.

ஜ்ஞாத்ராதிபாவஉஷ்ஸ்ரஜ்ஞெயைகாத்ரவஸ்திதிஜா ।
உநஸொ நிர்விகல்ஸ்ஸாதஸமாயிெயாகஸம்ஜ்ஞிதஃ ॥ (321)

(பொ) காண்பான், காக்ஷி, பொருளிவைகளான திருபுடிபாவமிழந்து ஞேயமாத்திரமான பிர்மவஸ்துவில் மனது திருடமாயிருப்பதே நிர்விகற்பசமாதி யென்றும், யோகசமாதியென்றும் கூறுகின்றனர்.

ஜலெ நிக்ஷிப்தலவணஂஜலமாத்ரதயாஸ்திதம் ।
ப்ருயக்ஹாதிகிஂகஂஸவணகஎவாவஹாஸதெ ॥ (322)

யயாதயெவஸாவ்ருத்திர்ப்ருஹ்மாத்ரதயாஸ்திதா ।
ப்ருயக்ஹாதிப்ருஹ்மெவாவிதீயஉவஹாஸதெ ॥ (323)

ஜ்ஞாத்ராதிகல்நாஹாவாநெதாயஂநிர்விகல்கஃ ॥ (323½)

(பொ) ஜலத்திற்கலந்தவுப்பானது, ஜலமாத்திரமானவிருப்பையடைந்து ஜலத்திற்கன்னியமாய் விளங்காமல் ஜலமாகவேவிளங்குவதுபோல், பிர்மாகாரமானவிருத்தியானது பிர்மமாத்திரமானவிருப்பையடைந்து பிரமத்திற்கன்னியமாய் விளங்காமல் பிர்மமாகவே பிரகாசித்து திருபுடிமுதலான கற்பனைகளற்றிருப்பதே நிர்விகற்பசமாதியாம்.

வ்ருத்தெஸ்ஸஹாவவாயாஸ்யாஉஹயொவெநாயஜஷ்யதெ ॥ (324)

விருத்தியினிருப்பும் விருத்தியின் நாசமுமிவ்விரண்டுகாலங்களினும் ஞானமொன்றேயிருப்பதாயங்கீகரிக்கப்படுகிறது.

ஸமாயிஸுஷுப்த்யாஜ்ஞாநஞ்ஜ்ஞாநஂஸுஷுப்தாதநஷ்யதெ ॥ (324½)

(பொ) சமாதியிலும் சுஷுப்தியிலும் ஞானம் பார்க்கப்படுகிறது. ஜீவர்களால் அக்ஞானத்துடனனுபவிக்கப்பட்ட சுஷுப்தியவஸ்தையில் ஞானம் காணப்படவில்லை.

ஸவிகல்பொ நிர்விகல்பஸ்ஸமாயீஆவிமௌஹ்ருதி ।
உஉக்ஷாயத்நகஃகாயநளவிஷ்ரீ தநிவ்ருத்தயெ ॥ (325½)

(பொ) முமுக்ஷுக்கள் விபரீதபாவனா நிவர்த்தியின்பொருட்டு ஹிருதயத்திலெப்பொழுதும் சவிகற்பசமாதி நிர்விகற்பசமாதியிவ்விரண்டுகளையும் பழக்கக்கடவர்கள்.

ஏதைஸ்து விபரீதாயா பாவநாயா நிவர்த்தநம் ।
ஜ்ஞாநஸ்யாப்ரதிபந்தத்வம் ஸதாநந்தஶ்ச ஸித்யதி ॥ (326½)

(பொ) மேற்கூறியசமாதிகளின் திருடப்பழக்கத்தால் விபரீதபாவனையானது நன்றாய் நிவர்த்தியடையும். ஞானத்திற்கு பிரதிபந்தமின்மையும் சதானந்தமும் சித்திக்கும்.

(அ—கை) சவிகற்பசமாதியினுருவமான திருசிய சப்தானுவித்தசமாதிகளின் லக்ஷணங்கூறல்.

த்ருஶ்யாநுவித்த: ஶப்தாநுவித்தஶ்சேதி த்விதா புந: ।
ஸவிகல்பஸ்தயோர்யல்லக்ஷணம் வச்மி தச்ச்ருணு (327½)

(பொ) சவிகற்பசமாதியானது திருசியானுவித்தசமாதியென்றும் சப்தானுவித்தசமாதியென்றுமிருவிதமாய்க்கூறப்படுகிறதின் லக்ஷணங்களை யான் கூறுகின்றேன். நீ கேழ்க்கக்கடவாய்.

(அ—கை) அந்தர்திருசியானுவித்தசமாதியாவது.

காமாதிப்ரத்யயைர்த்ருஶ்யை: ஸம்ஸர்கோ யத்ர த்ருஶ்யதே ।
ஸோऽயம் த்ருஶ்யாநுவித்த: ஸ்யாத்ஸமாதி: ஸவிகல்பக: ॥ (328½)

(பொ) எந்த பிர்மவஸ்துவில் (அத்தியாசத்தால்) காமாதித்தோற்றங்களான திருசியங்கள் விளங்குகின்றனவோ அந்த இந்த வஸ்துவே திருசியானுவித்த சவிகற்பசமாதியாம்.

காமாதீநாமஹம் ஸாக்ஷீ த்ருஶ்யந்தே தே மயா தத: ।
இதி ஸாக்ஷிதயாத்மாநம் ஜாநந்நாத்மநி ஸாக்ஷிணம் ॥
த்ருஶ்யம் காமாதி ஸகலம் ஸ்வாத்மந்யேவ விலாபயேத் । (330)

(பொ) காமாதிகளுக்கு நான் சாக்ஷியென்றும், அவைகள் ஆத்மாவான தன்னிடத்தில் மாயையாற்கற்பிக்கப்பட்டதென்றும், அவைகளுக்கு சாக்ஷியான ஆத்மாவே தானென்றுமுணர்ந்து, காமாதிகளான சகலதிருசியத்தையும், தானான ஆத்மாவிடத்தில் லீனஞ்செய்வதே திருசியானுவித்தசவிகற்பசமாதியாம்.

𑌵𑍍𑌯𑍋𑌮𑌵𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑌦𑍈𑌕𑌰𑍂𑌪𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌚𑌿𑌦𑍇𑌵 𑌕𑍇𑌵𑌲𑌃 । 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑌵𑍇𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑌾𑌪𑌯𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌂 ॥ 𑌜𑌹𑌾𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌭𑌾𑌵𑌨𑌂 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌂 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌵𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌮𑍍 ॥

(பொ) விபரீதபாவனையான தேகாத்மவாசனையற்று, ஆத்மாவேதானென்று சதாபார்த்துக்கொண்டிருக்கிற விவேகியானபுருஷன் ஆகாசத்தைப்போல் நாமேபூர்ணனாயிருக்கிறோமென்றும்,நிர்மலனென்றும்,சத்தானயேகரூபனென்றும், கேவலனென்றுமுணர்ந்து, விபரீதபாவனையானது அக்ஞானமயக்கத்தால்தோற்றப்படுகிறதென்று தள்ளி, தோன்றுகிறதிருசியத்தை பிரவிலாபனஞ்செய்வதே திருசியானுவித்தசமாதியாம்.

(அ—கை) அந்தர்சப்தானுவித்தசமாதியாவது.

𑌶𑍁𑌦𑍍𑌧𑍋𑌽𑌹𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍋𑌽𑌹𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑍂𑌪𑍇𑌣 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌹𑌮𑍍 ।
𑌶𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌹𑌮𑌨𑌨𑍍𑌤𑍋𑌽𑌹𑌂 𑌸𑌤𑌤𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌰𑍇𑌵𑌾𑌹𑌮𑍍 ॥ (332½)

(பொ) நானே சுத்தன் நானே புத்தன் நானே பிரத்தியக்ரூபனான நித்தியசுத்தன், நானே சாந்தன், நானே அனந்தன் இடைவிடாதபரமானந்தசிந்துவே நானாயிருக்கிறேனென்றுஎண்ணுவதே சப்தானுவித்தசமாதியாம்.

𑌆𑌦𑌿𑌶𑍍𑌚𑌾𑌹𑌮𑌨𑌾𑌦𑌿𑌶𑍍𑌚𑌾𑌹𑌂 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌸𑌾𑌧𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌽𑌹𑌮𑍍 ।
𑌨𑌿𑌗𑌮𑌵𑌚𑍋𑌵𑍇𑌦𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌅𑌨𑌵𑌦𑍍𑌯𑌾𑌖𑌣𑍍𑌡𑌬𑍋𑌧𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑍍 ॥ (333½)

(பொ) நானே ஆதியென்றும், நானே அனாதியென்றும், வாக்குமனசினலறியப்படாதவஸ்துமாத்திரமே நானென்றும், நான் வேதவார்த்தையாலறியத்தக்கவனென்றும், குறைவற்றவகண்டபோதரூபனே நானென்றுமுணருவதே சப்தானுவித்தசமாதியாம்.

𑌏𑌵𑌂 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌗𑌾𑌹𑌿𑌨𑍍𑌯𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌗𑌾𑌹𑌕𑍈𑌃 ।
𑌶𑌬𑍍𑌦𑍈𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌭𑌾𑌵𑌯𑍇𑌨𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑍋 𑌯𑌤𑌿𑌃 ॥ (334½)

(பொ) இவ்விதமான சன்மாத்திரப்பிரவாகவிருத்தியாற் சலனமற்றயதியானவன், தன்மாத்திரசொரூபத்தையளிப்பதான மேற்கூறிய நான், சுத்தன் முதலிய சப்தங்களினல் வஸ்துவை பாவனைசெய்துகொண்டிருப்பவனே சப்தானுவித்தசமாதியுடன் கூடினவனும்.

𑌕𑌾𑌮𑌾𑌦𑌿𑌦𑍃𑌶𑍍𑌯𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑌾𑌪𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑍋𑌽𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌶𑌬𑍍𑌦𑌮𑌿𑌶𑍍𑌰𑌃 ।
𑌦𑍃𑌢𑍈𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌮𑌨𑌃𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌃 𑌕𑌥𑌿𑌤𑌸𑍍𑌸𑌮𑌾𑌧𑌿𑌃 ॥ (335½)

(பொ) முதலில் காமாதிதிருசியங்களை லீனஞ்செய்து நானே சுத்தனென்றயிவைமுதலான வாக்கியங்களுடன் நிறைந்து, திருக்வஸ்துவேதானென்ற நிஷ்டையுடன் யாவன் விளங்குகிறானோ அவனே சவிகற்பசப்தானுவித்த சாமாதியுடன் கூடினவனும்.

(அ—கை) அந்தர்நிர்விகற்பசமாதி லக்ஷணங்கூறல்.

ஊருஶூஸூாவிவஸாக்ஷிக்ஷா_த்தஊ_ஞெூவ_நஊா_தூநி ।
நிவ_த_ுகஊடுொாவஸூா_நிவி_ுகஶூஊ_தீய_ுடெ_த ॥ (336½)

(பொ) தோன்றுகிற சகலதிருசியப்பிரபஞ்சத்திற்கும் சாக்ஷியாயிருக்கிறேமென்ற சுத்தவிருத்தியானது தன் சொரூபத்தில் திருடமான விருப்பையடைந்திருப்பதே நிர்விகற்பசமாதியாம்.

ஸவிகஶூஸஊாயிம்யொதீவ_ுகாஞஹிரஜஊம் ।
ஸக்ஷாரவ_ிவ_ுகம்க_ய_ுஹிவி_ுகலெூாஸுவஹிஜூ_தி (337½)

(பொ) யாதொருபுருஷன் சவிகற்பசமாதியை வெகுகாலமிடைவிடாமற் பழகி, சத்சொரூபாகாரமாயிருக்கும்படி செய்கிறானோ அவனுக்கே நிர்விகற்பசமாதிசித்தியாம்.

விஊா_நஹஜிஊஜிதிவாகிஞிஊ_ாஹூாஹூஜஊவெஊ_நஶ_ு_ந்ூஃ ।
ஷூா_நஃாஉூ_தவஸிம்ய_நிஊஹூஸூ_ஞூஊாஸூகிஞிஊ_ந_ந்ூஃ ॥ (338½)

(பொ) விவேகியானவித்வான் நானெனதென்றபாவமும்உள்வெளியென்றதோற்றமும் கிஞ்சிற்றேனுமில்லாமல் தன்னுனந்தாமிருத சமுத்திரத்தில் மூழ்கிவேறொருதோற்றமுமின்றி மௌனமாயிருக்கின்றான்.

நிவி_ுகஶூம்வரூஸூஹூவண_சஹூிஹெவநிஷ்ி_தாஃ ।
தவஊவய_நூாஸூஊ_க்ஷாஜீவஹொாவிஸஹிஊ_ுூஶாம் ॥ (339½

(பொ) எவர்கள் இந்நிற்விகற்பமான பரப்பிர்மநிஷ்டையுடன்கூடியிருக்கிறார்களோ அவர்களே தன்னியர்கள், வெளிப்பார்வைக்கு ஜீவித்துக்கொண்டிருப்பவர்கள்போல் தோன்றினும் முக்தர்களேயொழியவேறல்லர்.

(அ—கை) சவிகற்பசமாதியில் அந்தர்திருசியானுவித்தமும் அந்தர்சப்தானுவித்தமும் அந்தர்நிர்விகற்பமும் சொல்லப்பட்டதுபோல் பகிர்திருசியானுவித்தமுதலான மூவகைசமாதியின் லக்ஷணமுரைத்தல்.

யதா ஸமாதித்ரயம் யத்நாத் க்ரியதே ஹ்ருதி |
ததைவ பாஹ்யதேஶே(அ)பி கார்யம் த்வைதநிவ்ருத்தயே ||
தத்ப்ரகாரம் ப்ரவக்ஷ்யாமி ஸமாதேர்பாஹ்யகஸ்ய து | (341)

(பொ) எவர்களால் முற்கூறிய மூவகை சமாதிகளை அந்தரங்கத்திற்பழ கப்பட்டதோ அதுபோல், வெளியிலும் துவைதநிவர்த்தியின்பொருட்டு மூவித சமாதிகளும் பழகவேண்டும். அவைகளின் தன்மைகளை நன்ருயறியும்படியுரைக்கிறேன்.

(அ—கை) பஹிர்திருசியானுவித்தசமாதியாவது.

அதிஷ்டானம் பரம் ப்ரஹ்ம ஸச்சிதானந்தலக்ஷணம் |
தத்ராரோபிதமேதத்தி நாமரூபாத்மகம் ஜகத் || (342)

(பொ) அதிஷ்டான பரபிர்மமானது ஸச்சிதானந்தலக்ஷணங்களுடன் கூடியிருக்கின்றன, அதிற்கற்பிதமாக இந்த நாமரூபஜகம் விளங்குகின்றன.

ஸத்த்வம் சித்த்வம் ததானந்தத்வம் ப்ரஹ்மணஸ்த்வயம் |
அஸ்ய ஜகதோ ரூபம் நாமரூபமிதம் த்வயம் || (343)

(பொ) சத்துவமும், சித்துவமும், ஆனந்தத்துவமும் இம்மூன்றுகளும் பிர்மத்தின் லக்ஷணங்களாம். பிர்மவஸ்துவில் கற்பனையான நாமரூபங்களிரண்டும் ஜகத்தின் லக்ஷணங்களாம்.

ஏதாநி ஸச்சிதானந்த நாமரூபாணி பஞ்ச து |
ஏகீக்ருத்யோச்யதே மூடைரிதம் விஶ்வமிதி ஹ்யதா: || (344)

(பொ) ஸச்சிதானந்தங்கள் மூன்றுநாமரூபமிரண்டு இவ்வைந்துகளையுமொன்ருய்ச்சேர்த்து அக்ஞானமயக்கத்துடன்கூடின மூடர்களாலிது ஜகத்தென்று கூறப்படுகிறது.

ஶ்வேதம் சித்ரம் ஸ்வர்ணம் ப்ராப்யம் தந்மயம் திநாஞ்ச |
ஏகீக்ருத்ய தந்மயேதி நிரூப்யதே யதா ||

உபேக்ஷ்ய நாமரூபே த்வே உபேக்ஷ்ய ப்ரஹ்மணஸ்தத: |
ஸ்வரூபமாத்ரம் ப்ரஹ்மணம் ஸமாதிர்பாஹ்யக்ருதி: || (346)

(பொ) ஹே முனீசுவரரே என்னால் வெகுகாலமாய்ச்செய்தபுண்ணியபலமானதின்று தங்களைத்தடையன்றி தரிசித்தவிசேஷத்தாலிப்போதுதான் யெனக்குப்பலிதமாயிற்று.

𑌰𑌸𑌾𑌯𑌨𑌮𑌯𑍀 𑌶𑍀𑌤𑌾 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌦𑌾𑌯𑌿𑌨𑍀 ।
𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌤𑌿 𑌕𑌂 𑌨𑌾𑌮 𑌸𑌾𑌧𑍁𑌸𑌙𑍍𑌗𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌕𑌾 ॥ (516)

(பொ) ரசாயனமயமாயும் குளிர்ச்சியாயும் பரமானந்தத்தைக்கொடுப்பதாயுமிருக்கிற சாதுசங்கமாகிற சந்திரிகையானது எப்புருடனுக்குத்தான் ஆனந்தத்தையளிக்கமாட்டாது!

[illegible] ।
[illegible] ॥ (517)

(பொ) சகல ஈடணாத்திரயங்களையுமிழந்தசத்துக்களின் வரவானது எனக்கு மேலானக்ஷேமமென்று யானெண்ணுகிறேன். அதைக்காட்டிலும் வேறுரைக்கவேண்டுவதிங்கில்லை.

[illegible] ।
[illegible] ॥

(பொ) பரமாத்மசொரூபத்தை தாங்களடைந்தவர்களென்று யானெண்ணுகிறேன். தங்கள் திருஷ்டியினால் நாசமற்றபாபத்தையுடையயென்ஜன்மமானது இப்பொழுதே சபலமாயிற்று, ஹே சாதோ சாதுசங்கமானது சகலபயத்தையும் போக்குமன்றோ.

[illegible] ।
[illegible] ॥ (519)

(பொ) இவ்விதமுரைத்து தானே அர்க்கியபாத்தியமளித்தபிறகு கற்பகவிருக்ஷதளத்தினுனியிலிருந்த புசுண்டரைப்பார்த்து யான் பிரச்னஞ்செய்தேன்.

[illegible] ।
[illegible] ॥ (520)

(பொ) ஹே பக்ஷிராஜேந்திரா ? தாம் சகலவிவகாரம் செய்தும், நும் சரீரம் யமனாலேன் பிடிக்கப்படவில்லை? அதையானறியும்படி கூறுவீராக.

(அ—கை) புசுண்டர் சமாதானம் கூறுகிறார்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ (522)

(பொ) ஹே பிர்மன் ? திரிகாலஞானத்தால் சகலமுமறிந்ததாம். அறியாதபோற்கேட்கிறவார்த்தையைக்கடப்பதற்கு யான் வல்லவனோ? உலகில் பிரபுவின் வார்த்தையைக்கடக்கமுடியாத வேலைக்காரன்போல் யானும் தாங்கள் கே

ட்டைத்தெரிவிக்கின்றேன். சத்துக்களினுத்திரவுப்படி நடப்பதே மேலானவாராதனமென்றுபெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

ஜொஷ உ‐க்தாஹ‌ஒவெ௱ாதாவாஸநாதஞ‐ஸஞதிஃ ।
ஹ௱ுஜிநஹ௱யிதாயஸ௱உ௱ஜ௱‐ஸூஞஜிவாஂஸதி ॥ (523)

(பொ) வாசனையாகிய கயற்றிற்கோர்க்கப்பட்ட தோஷங்களாகிற முக்தாஹாரங்களை எவர்கள் மனதாகிற மார்பில் தரிக்கவில்லையோ அவர்களை யமன் கொல்லவிச்சிக்கமாட்டான்.

௱ாமெஉஷவிஷாவ‐ஞணுஸூஉஜெநாஙிஉஜிரஂ ।
ஜொஹவ௱ாஜொநஹ‐ஜோயஂஉ௱ஜ௱‐ஸூஞஜிவாஂஸதி ॥ (524)

(பொ) ராகத்துவேஷங்களான விஷங்களால் நிறைந்த மனதாகிய வீட்டில் வாசஞ்செய்துகொண்டிருக்கிற லோபமாகிற சர்ப்பத்தாலெவர்கள் கடிபடவில்லையோ அவர்கள் காலனால் விழுங்கப்படமாட்டார்கள்.

வீதாஶெஷவிவெகாஂப‐ஶரீ௱ாஂஜொயிபாஙபஃ ।
நிஜஹதியஂகொவொஉ௱ஜ௱‐ஸூஞஜிவாஂஸதி ॥ (525)

(பொ) விவேகமாகிற ஜலத்தை சோஷிக்கச்செய்து சரீரமாகிற சமுத்திரத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்கிற கோபமாகிற வடவாமுகாக்கினியானது எவர்களை தகிக்கவில்லையோ அவர்களை யமன் புஜியான்.

வஜதஸூஜிஉஜெயெநவஜெவ௱உவாவநெ ।
ஸஂஸூதாவிஜவிஶ௱ாஜிஸூஉ௱ஜ௱‐நஜிவாஂஸதி ॥ (526)

(பொ) பரிசுத்தமாயும் நிர்மலமாயுமிருக்கிற பிர்மத்தில் எவர்கள்மனது விசிராந்தியையடைந்திருக்கிறதோ அவர்கள் காலனாலபகரிக்கப்படமாட்டார்கள்.

கூஜெநகெவநவிஶாவெநதஹுஂகா௱யெஜநஃ ।
ய‐ஸூஉாஜிஷ‐ஸ‐வ௱ாவாஉ‐ஷாவெவாஸூஉாஜிஷ‐ ॥ (527)

(பொ) நானாவிதத்தோற்றமான பிசாசாற்பீடிக்கப்பட்டமனதை பிர்மாகாரமாய்ச்செய்யவேண்டுவதே விவேகிகளின் கடமை. இந்தக்ஞானமானது தங்களைப்போலொத்த மஹான்களாலெளிதாயடையப்படும். எம்போன்றவர்களுக்கு இவ்விதக்ஞானம் கிடைப்பது வெகு அரிது.

அஹஂஜகதஹஂவெ்யாமஹஂதெசகாலகஂமஹஂ ।
அஹஂத்வமிதிநாஸ்திமெ்யெ நஜீவாம்யநாமய: ॥ (528)

(பொ) நானே ஜகத்தென்றும் நானே வானென்றும் நானே தேசகாலக்கிரமமென்றும் நான்நீயென்றபுத்தியுமிழந்த ஞானத்தினுல் வியாதியற்றவனுய் யான் ஜீவிக்கின்றேன்.

வடஃஸ்ரீத்ஸ்ரீடஃஸ்ரீதஂவஸ்வஂமஂஸ்ரீக்ஷயஸ்ஸவிக ।
ஸ்ரீத்வஂமிதிஸஹாவஷெ்ய நஜீவாம்யநாமய: ॥ (529)

(பொ) சித்தே கடமென்றும், சித்தே படமென்றும், சித்தே ஆகாசமென்றும், சித்தே சின்மயமென்றும், சித்தே சகலவுலகமென்றும், எனக்குண்டாயிருக்கிற ஞானத்தால் யான் துன்பமற்று விளங்குகின்றேன்.

உதஹஂதிஷுஸிஸாநுஸ்மஹஂ திரலொககமலாகாஸ: ।
ஸ்வநாஜ்ஞாவஸிஸிமாத்ரெணயாவஷெ்ய நஜ்ஞாநவாநஹ: ॥ (530)

(பொ) ஹேமுனிவரியா மூன்றுலோகங்களாகிற தாமரைத்தடாகங்களிற் சந்தோஷமாய் வசித்துக்கொண்டிருக்கிற யான் தங்களாக்ஞாசித்திமாத்திரத்தால் திருடக்ஞானம் பெற்றவனுயிருக்கின்றேன்.

ஸஹொநஸ்வஸ்ரீதஸ்வதாகயிதஂஸஂஷணஂமஹஸெத: ।
ஸ்ரூதிநுதஃவகயிதஃவாரஂவிஸ்மயகாரணஂ ॥ (531)

(பொ) புசுண்டருரைத்தவார்த்தையைச்செவியுற்ற வசிஷ்டரானவர், ஹே புசுண்டரே சுருதியின் பூஷணமாயும், ஆச்சரியகரமாயும், ஆத்மவிருத்தாந்தமாயும் மேலானவாச்சரியத்தைக்கொடுப்பதாயுமிருக்கிற தங்கள் வசனமானது வியப்பன்றோ.

தநஸ்து தவகஸ்யாணஂவஹவிஸாதுமஹாஂஸஹாஂ ।
மஸ்யாஹ்ஸமயொயஂஸெவஜாமிஸஂராமஜிரஂ ॥ (532)

(யொ) உமக்கு மங்களமுண்டாகட்டும். மனேக்கியமான ஆத்மகுகையிற் பிரவேசியும், மத்தியாஹ்நசமயமாய்விட்டது, யான் தேவலோகம் செல்லுகிறேன்.

விஷராநுயமஹாயமதவமவநாஸ்த: ।
வெ்யாரிமயொஜநமாதெஸளமநஸவஜயாமத: ॥

[illegible] | (533½)

(பொ) இவ்விதங்கூறின வசிஷ்டரின் வார்த்தையைக்கேட்டு தன்ஸ்தானத்தினின்று பக்ஷிபோலாகாசத்திற்கிளம்பி ஒருயோசனை தூரம்வரை என்னுடன் பின்றுயர்ந்துவந்த புசுண்டரை யான் (வெகுதூரம்) வரவேண்டாமென்று சொன்னவுடன் சத்சங்கதியானது ஒருக்காலும் விடத்தகாதென்று வெகுவர்த்தத்துடனிருப்பிடமேகினர்.

[illegible] |

[illegible] ॥ (534½)

(பொ) தாங்களே புத்திசாலிகளென்ற கர்வம் நிறைந்தவர்களாயும் சாஸ்திரங்களையறிந்தோமென்ற எண்ணத்துடன்கூடியிருப்பவர்களாயும். ராகத்துவேஷரூபர்களாயுமெவர்களிருக்கின்றனரோ அவர்களே பூஜ்யர்களான கர்த்தபங்களென்றும் அவர்களைச்சுடவேண்டும் (என்று பெரியோர்கள்) கூறுகின்றனர்.

(அ—கை) ஒருக்கால் வசிஷ்டமஹரிஷியானவர் தேவபூஜையினுபாக்கியானத்தில் பரமசிவனைநோக்கி ஹே பகவன் ? தங்கள் பிரசாதத்தாற் பூர்ணதிருஷ்டியையடைந்த வெனக்கு தங்களிடத்திற்கேட்கவேண்டிய சந்தேகமொன்றிருக்கிறது. அதை நன்றாய் நிவர்த்தித்து அதினுண்மையையுரைக்கவேண்டும். சர்வபாபங்களையும் நிவர்த்திசெய்வதாயும், சமஸ்தமங்களங்களையும் விருத்திபண்ணுவதாயுமிருக்கிற தேவார்ச்சனவிதானமெவ்விதமென்பதைக்கூறவேண்டுமென்றுவினவ ஈசனருளுகின்றார்.

[illegible] |

[illegible] ॥ (535½)

(பொ) பிர்மவித்துக்களில் சிரேஷ்டரான வசிஷ்டரே உத்தமமான தேவார்ச்சனையின் விதியையும் தெய்வமின்னதென்பதையும் யான் கூறுகின்றேன். நீர் வினவீராக.

[illegible] |

[illegible] ॥

[illegible] ॥ (537)

(பொ) மானுந்தெய்வமல்ல, முக்கண்ணுடையானும்தெய்வமல்ல, அயனும் தேவர்களும் தெய்வமல்ல, சித்தசொரூபமுந்தெய்வமல்ல, இவைகளுக்கதிஷ்டானவஸ்துவே தெய்வசப்தத்தாற் சொல்லப்படுகிறது. அத்தெய்வத்தையே பூஜிக்கக்கடவீர்.

अज्ञातशिवतत्त्वानामाकाराराधनं स्मृतम् ।
योजनाशक्तस्य क्रोशमात्रावधिकं यथा ॥ (538)

(பொ) ஒருயோஜனை தூரம்போகச்சக்தியற்ற புருஷனுக்கு கூப்பிடுதூரம்போகச்சொல்லுவதுபோல் தன்சொரூபமான சிவதத்துவத்தையறியச்சக்தியற்ற மூடர்களுக்கு பிரதிமாதி பூஜைவிதிக்கப்பட்டிருக்கிறது.

बोधस्साम्यं समश्चेति पुष्पाण्येतानि सन्ति ते ।
शिवं ज्ञानात्मकं पूज्यं पूजाविदो विदुः ॥ (539)

(பொ) போதமென்ன, சமபாவமென்ன சமமென்ன இப்புஷ்பங்களால் நிர்மலமாயுள்ள அறிவானசிவனைப்பூஜிக்கவேண்டுமென்று இப்பூஜையின்மகிமையையறிந்தபெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

समबोधादिभिः पुष्पैर्देवः शुद्धात्मकस्तु यत् ।
तदेव देवार्चनं विग्रहाकाराराधनं न हि ॥ (540)

(பொ) சமபோதாதி புஷ்பங்களால் ஆத்மாவான இத்தேவனை அர்ச்சிப்பதெதுவோ அதுவே தேவார்ச்சனமென்றும், பிரதிமாதிகளான மூர்த்திகளை அர்ச்சனைசெய்வது பூஜையல்லவென்றுமறிந்துகொள்ளக்கடவீர்.

स्वस्य तस्य स्वबोधेन वेदितव्यस्स्वयं स्वतः ।
गुरूपदेशशास्त्रार्थैर्विना ज्ञानं न लभ्यते ॥ (541)

(பொ) தன் ஞானத்தால் தன்சொரூபத்தை தானே உணரவேண்டும், அவ்விதக்ஞானமானது குருபதேசசாஸ்திரார்த்தக்ஞானமின்றி விளங்காவாம்.

स्वात्मदेवं विजानीयात्पूर्वोक्तेनैव वर्त्मना ।
एवं देवार्चनं नित्यं ज्ञानी कुर्यान्मुनिनायक ॥
कृतार्थस्सोऽहमेवेति तत्त्वं यातीति नान्यथा ॥ (542½)

(பொ) ஹேமுனிநாயக மேற்கூறியமார்க்கத்தால் தானன ஆத்மதேவனையறிந்து பூஜிக்கவேண்டும். இவ்விதம் தேவார்ச்சனையை நித்தியமெந்தஞானிசெ

ய்கின்றனே அவனுக்கு யான்முதலனைவோரும் வேலைக்காரர்களாகி, அவன் அந்த பிர்மபதத்தையடைவானென்பதிலையில்லை.

𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ।
𑌏𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌦𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 ॥ (543½)

(பொ) பிர்மக்ஞானநிஷ்டையையளிப்பதாயும், தத்துவக்ஞானார்த்தத்தை விளக்கிவைப்பதாயுமுள்ளது யாதோ அதுவே ஞானமென்றும், அதற்கன்னியமானவை அக்ஞானமென்றுமிவ்விதமாய் ஈசுவரன் கூறியிருக்கின்றார்.

(அ—கை) பகீரதமகாராஜன் திருதூலமுனியையடைந்து ஞானோபதேசஞ்செய்யவேண்டுமென்று வினவ பின்வருமாறு கூறுகிறார்.

𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌶𑍇𑌷𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣𑌾𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌨𑍇𑌹𑌸𑌵𑍇𑌷𑍇𑌣𑌾𑌮𑌹𑌾
𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑌮𑌶𑍀𑌷𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌸𑌮𑌗𑍍𑌰𑌾𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 । 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌹𑌂𑌕𑍃𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍇𑌹
𑌹𑌂𑌸𑌮𑌨𑌸𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌮𑌟𑌨𑍍 𑌭𑌵𑍍𑌯𑌸𑌿𑌤𑌵𑌾𑌨𑌮𑍋𑌽𑌯𑌦𑌿𑌹𑌵𑌸𑍍𑌯 𑌦𑌧𑍍𑌦𑍍𑌸𑍍𑌵
𑌪𑍃𑌦𑍇𑌵𑌾𑌰𑌵𑌿 ॥ (544½)

(பொ) ஹே பகீரதமஹாராஜனே சகலபயங்களையும்விடுத்து உபசாந்தமடைந்தவராய் ஈடணைத்திரயங்களையும் தள்ளி மேலானஞானமடைந்து சத்துருவிடத்திற் சகலசம்பத்துக்களையுமளித்து, தேகத்தில் நானென்றகங்காரமிழந்து, அந்தராஜ்ஜியத்திலேயே பிக்ஷைவாங்கிப்புஜித்து என்னைவந்தடைந்தீரேயானால் மேலானபதவியையடைவீர்.

𑌅𑌵𑌶𑍍𑌯𑌤𑍍𑌰𑍃𑌣𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌦𑍇𑌵𑌪𑍍𑌰𑌾𑌵𑌦𑌦𑍍𑌵𑌰𑌂 ।
𑌪𑍌𑌰𑌾𑌣𑌾𑌂 𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑍍𑌵𑌦𑍀𑌹𑌿𑌕𑍍𑌷𑌾𑌮𑌯𑌾𑌚𑌤 ॥ (545½)

(பொ) கூறியபடி பகீரதனும் தன்தேசஞ்சென்று சத்துருவுக்கு பட்டாபிஷேகம் செய்து மஹரிஷியினிடஞ்சென்று ஞானமடைந்து ஒருக்கால் சத்துருவாலாக்கிரமித்த தன்பட்டணமடைந்து, மந்திரிவீடுகளிலும் பட்டணத்து ஜனங்கள் வீடுகளிலும் நெல்லியிலைப்பிரமாணம் பிக்ஷையெடுத்துப்புஜித்துக்காலங்கழித்தனர்.

𑌸𑌮𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌾 𑌮𑍌𑌨𑍀 𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑍋 𑌵𑌿𑌮𑌤𑍍𑌸𑌰𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌽𑌯𑌕𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌤𑌸𑍍𑌥𑌾𑌵𑌸𑍀𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌃 ॥ (546½)

(பொ) சுகதுக்கங்களில் ஸமமானபுத்தியுடையவராயும், சாந்தமனமுடையவராயும், மௌனியாயும், ஆசையற்றவராயும், மாச்சரியமிழந்தவராயும் பிரா

ரப்தவலியால் வந்தபோகங்களைப்புஜிப்பவராயும், சந்தோஷவியசன்மற்றவராயுமிருக்கிற பகீரதமஹாராஜனனவர் சந்தோஷத்துடன்கூடிஞானவானாய்விளங்கினார்.

(அ—கை.) பிரிங்கிசமஹாரிஷியானவர் தன் வழக்கம்போல் தேவியின் சன்னதிக்குப்போகாமல் வெகுகாலம் ஈசுவரனைமட்டுமுபாசித்துவந்த யிச்சங்கதியையறிந்த தேவியானவள் தன்னுயகனிடமறிவிக்க சர்வக்ஞனை ஈசுவரன் அவருடையபக்திவிசேஷத்தைக்காண்பிவிக்கவேண்டி அர்த்தநாரீசுவரரானார். அதைக்கண்ணுற்ற அம்முனிவர் தன்ஸ்தூலசரீரத்தைவிட்டு வண்டுரூபமான சரீரத்தையடைந்து மாயாசக்திரூபியானதேவியை பிரதக்ஷிணம்செய்யாமல் ஈசனைமட்டும் பிரதக்ஷிணம்செய்து வெளியில்வந்து தன் சுவபாவசரீரத்திற் பிரவேசித்துவிளங்கிய பிரிங்கிசரைக்கண்ட அத்தேவியானவள் மாயாசக்தியுடன்கூடியவென்னை அலக்ஷியம்செய்து நீர் ஈசனைமட்டுமுபாசித்தால் உம் சரீரத்திலென்னம்சமான ரக்தத்தைமட்டுமேன்வைத்துக்கொண்டிருக்கிறீரென்றுரைத்தவுடன் ரக்தாம்சத்தையுந்தள்ளி, அஸ்தியான சரீரத்துடன்கூடியிருப்பதைக்கண்டு ஈசனாற்கொடுக்கப்பட்ட தண்டத்தைவகித்துக்கொண்டு அதிகவணக்கத்துடன் கூடியவராய் ஞானிகளின் விருதத்திரயங்களையுபதேசிக்கவேண்டுமென்று வினவ அவ்வீசனருளியதாய் வாசிஷ்டம் நிர்வாணபிரகரணத்தில் கூறியிருக்கிறது.

𑌕𑌿𑌂𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌮𑌹𑌾𑌕𑌰𑍍𑌤𑌾 𑌮𑌹𑌾𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌕𑌿𑌂𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 ।
𑌕𑌿𑌂𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌮𑌹𑌾𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌕𑌥𑌯𑌸𑍍𑌵 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌭𑍋 (547½)

(பொ) ஹே பிரபோ? மஹாகர்த்தாவின் லக்ஷணம் யாது, மஹாபோக்தாவின்தன்மையெப்பேர்க்கொத்தது, மஹாதியாகியின் பெருமையாது, இவைகளின் தர்மங்களையானறியும்வண்ணமருள்வீராக.

(அ—கை) மஹாகர்த்தாவின் லக்ஷணம் கூறல்.

𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌸𑍁𑌖𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑍌 𑌫𑌲𑌾𑌫𑌲𑍇 ।
𑌯𑌃 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑍈𑌵 𑌮𑌹𑌾𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ (548½)

(பொ) ராகதுவேஷங்கள், சுகதுக்கங்கள், தர்மாதர்மங்கள், பலாபலங்கள், இவைகளில் யாதொரு விவேகி ஆசையன்றிசெய்கின்றானே, அவனே மாஹகர்த்தாவெனக்கூறப்படுவன்.

𑌮𑍌𑌨𑌵𑌾𑌨𑍍 𑌨𑌿𑌰𑌹𑌂𑌭𑌾𑌵𑍋 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑌤𑍍𑌸𑌰𑌃 ।
𑌯𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌗𑌤𑍋𑌦𑍍𑌵𑍇𑌗𑍋 𑌮𑌹𑌾𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ (549½)

(பொ) மௌனியாயும் அகம்பாவமற்றவனும் மமதையற்றவனும் மாச்சரியமிழந்தவனுமிருந்து யாவன் பரபரப்பின்றிக்கிரியைகளைச்செய்கின்றானோ அவனே மஹாகர்த்தாவென்றுரைக்கப்படுவன்.

ஸவ_த்ரவி_ம_தஸ்ஹெஹாயஸாக்ஷிவஉவஸ்தி_தஃ ।
நிரிச்ச_த_வெதகாயெ_ஜஹாக_த_ரவ உவ்ரெத ॥ (550½)

(பொ) சகலவிஷயங்களிலும் சினேகமற்று சாக்ஷிபோல் யாவனிருந்து கொண்டு காரியங்களிலிச்சையற்றவனுய்ச்செய்கின்றானோ அவனே மஹாகர்த்தா வென்று சொல்லப்படுகிறான்.

(அ—கை) மஹாபோக்தாவின் லக்ஷணங்கூறல்.

கட்ஙாநு ஒவணாஂதிக்தூஜரு ஷடஂஜஷ டெஜவ ।
வஜெஜவவயொஸ—ஜெத்ஹஜாஹொக்தாவஉவ்ரெத ॥ (551½)

(பொ) அன்னாதிகளிலறுசுவைகள் அற்பமாயிருந்தாலும் அதிகமாயிருந்தாலும் அவைகளின் குணங்களை ஆராய்ந்துபாராமல் சமமாய் யாவன் புஜிக்கின்றானோ அவனே மஹாபோக்தாவெனச்சாற்றப்படுவன்.

(அ—கை) மஹாத்தியாகியின் லக்ஷணங்கூறல்.

ஸவெ_வாஸகஒாஸஂகாஸவெ_ஹாஸவ_நிஸ்யாஃ ।
யியாயெ_நவஸி_த்ஜாஜஹா_த்ாகீவ உவ்ரெத ॥ (552½)

(பொ) சமஸ்தமான ஆசைகளையும் சகலசம்சயங்களையும் சகலேச்சைகளையும் சர்வநிச்சயங்களையும் புத்தியினால் யாவன் நன்றாய் விட்டிருக்கின்றானோ அவனே மஹாத்தியாகியெனக்கூறப்படுகிறான்.

(அ—கை) ராமனுக்கிதோபதேசங்கூறல்.

நிெத்ாதி_தஂவிஜஒஜாஉ்ஜநஜா—வெஂஸ்ஹாஷிெநதாகஒாகஒநஂ ஹிகிஜிக । ஐெத்வஹாவ்யநிர நதாஜ—வெதாநிவ_ாணெஜஹிவகஒா ஜஒஸாஜவ்த்ஂ ॥ (553½)

(பொ) ஹே ராமா எப்பொழுதும் விளங்குகிறதாயும் நின்மலமாயும் ஆதியாயும் அனந்தரூபமாயும் சகலகற்பனைகளற்றதாயும் யாதொரு பிர்மம் பிரகாசிக்கின்றதோ அதுவே நானென்றுணர்ந்து நின்மலசாந்தவிருத்தியுடன்கூடி மோக்ஷத்தையடையக்கடவாய்.

(அ—கை) இக்கிரந்தாப்பியாசபலனும் பெருமையுங்கூறல்.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ॥ (555)

(பொ) ஹே ராமசந்திரா ? இந்நிச்சயமே வேதார்த்தம் இதுவே விஷ்ணுவாதிகளின் நிச்சயம் லக்ஷவருஷான்னதானம் செய்தாலும் கோடிவருஷம் அஜதானம் செய்தாலும் ஒருசுலோகத்தைக்கேட்டபலத்தின் பதினாறிலொருபங்குக்கிணையாகா.

[illegible] ।
[illegible] ॥ (556)

(பொ) மணல்களையெண்ணினாலுமெண்ணலாம், சகலப்பிராணிகளின் ரோமங்களைக்கணக்கெடுத்தாலுமெடுக்கலாம் இக்கிரந்தத்தைக்கேட்பவர்களின் பலன்களை கோடிகற்பமானாலும் கணக்கிடமுடியாவாம்.

[illegible] ।
[illegible] ॥ (557)

(பொ) நக்ஷத்திரங்களையும் கொசுக்கூட்டங்களையும் பிணங்களையுமெண்ணினாலுமெண்ணலாம் இச்சாஸ்திரத்தின் பெருமைபுகலவொண்ணா.

[illegible] ।
[illegible] ॥ (558)

(பொ) இக்கிரந்தத்தையுரைப்பவனே சத்குருவென்பதிலையமில்லை. இச்சாஸ்திரத்தைக்கூறினவனே ஆதிதேவனென்பதிலுஞ்சந்தேகமில்லை.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ (560)

(பொ) இக்கிரந்தத்தையுபதேசித்தவரான ஆசானை முமுக்ஷுவானவன் சர்வவிதத்தாலும் பூஜிக்கக்கடவன். நாமே பிரம்மநிஷ்டனென்றும், நமக்குத்தோஷம் யாதொன்றுமில்லையென்றுமெண்ணி, தன்குருவை யாவனாதரவுடன் பூஜிக்க

வில்லையோ அவனே பயங்கரமான நரகங்களையனுபவித்து பலத்தில்வசிக்கும் புழுவாய் ஜனிக்கிறான்.

[illegible] ।
[illegible] ॥ (561)

(பொ) தச்சன் முதலானவர்களால் கிரகிக்கப்பட்டஜடமான வாயுதங்களே அவர்களுத்தேசிக்கும் பலத்தைக்கொடுக்குமென்றால், பிர்மவித்தானமஹான்களுக்கு அவ்வளவு யோக்கியதைகூடயில்லாமற்போய்விடுமோ என்ன சொல்.

[illegible] ।
[illegible] ॥ (562)

(மபா) சண்டாளன் கிரகத்திலாவது நல்லதீர்த்தக்கரையிலாவது, இச்சரீரம் பிராரப்தநாசகாலத்தில் விழுகட்டும், ஆசையற்றவிவேகிஞானமுண்டாகும் சமயத்தில் முக்தனேயொழிய வேறல்ல.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ (564)

(பொ) மேலானவேதமானது தோன்றப்பட்ட சகலஜகத்தும் பிர்மமென்று கூறுகின்றது. பகிர்முகதிருஷ்டியுள்ள ஜீவர்களின் மனதின் பக்குவத்தையுத்தேசித்து பிர்மத்திற்கன்னியமாய் ஜகத்திருக்கிறதென்றேகதேசத்தில் ஒருக்கால் விசனத்துடன்சொல்லுகின்றது வஸ்துவைக்காட்டினும் வேறொன்றிருக்கிறதாகவறிகிற ஞானமே அக்ஞானமாம் அதிற்சந்தேகமில்லை.

[illegible] ।
[illegible] ॥ (565)

(பொ) விசாரித்தாலும் விசாரிக்காவிட்டாலும் யாம்கூறிய யிவ்வர்த்தமே சுருதியின் முடிவென்று இச்சதஸில் நாவில் மழுவேந்திக்கூறுகின்றேன்.

[illegible] ।
[illegible] ॥ (566)

(பொ) ஹே ராமா உனக்கு நம்பிக்கையுண்டாகும் நிமித்தமாய் சிலஹுனை என் குருவின்பாதத்திலாணைவைத்துக்கூறுகின்றேன். நான்சொன்ன அர்த்தமிவ் விதமன்றி வேறுவிதமாயிருக்குமேயாயின் இப்பொழுதே என் சிரசானது இவ் விடத்திலேயே அறுந்து விழுகட்டும்.

ஈத்ரூயெஸம்ஶயாவிஷ்டாஸ்தேஷாம்ஶ ஒஸ்ஹுரவ தக்ஷய: ।
ஹ்ர்ஹ்ரஹ மெவாஸ்ஹமிதிநிஸ்ஹுயம்ஈரஸவதா ॥ (567)

(பொ) யான் கூறிய அர்த்தத்தில் எவர்கள் சம்சயத்துடன்கூடியிருக்கிறார்களோ அவர்களின் சிரசானது இவ்விடத்தே அறுந்து கீழே விழுகட்டும். நானே பிர்மசொரூபமென்றுயெப்பொழுதும் நிச்சயஞ்செய்யக்கடவீர்.

நிஸ்ஹுயாஉவரொமொக்ஷாநாஸ்திநாஸ்தீதிநிஸ்திந ।
நிஸ்ஹுயம்காரணம்மொக்ஷாநாந்யகாரணமஸ்திவெ ॥ (568)

(பொ) இந்த நிச்சயத்தைக்காட்டிலும் வேறுமோக்ஷமில்லவேயில்லை இன்னிச்சயமே மோக்ஷகாரணமின்றிவேறில்லை. வாசிஷ்டம் நிர்வாணபிரகரணத்தில் கூறியிருக்கின்றது.

(அ—கை) இந்தப்பிரகாரம் குருவாலுபதேசிக்கப்பட்ட சீடனேகாந்தத்திலிருந்து சமாதியோகத்திஞலுண்டாயிருக்கிற ஆத்மசாக்ஷாத்காரத்தின் தன்மையைக்கூறுகின்றான்.

ஹாவாயெராக்ஷதக்ஷவ்ரவணதாமாஸ் வஸுகொஶாநிஹாயத்
க்ஷாஶ்ஹந்யஹிஜாஸஹயிதமயதயொவெக்ஷ்யகிஞ்ஜிஹுஹவம் । கர்ப
ஹ்ரஹஹாவாவமதிவிமஜாஷ்நவ்ரதிமுஹாதாஸத்ரந வெஜகாவம்
விமஸதாமஜம்ப்ரஹவணயேஜமர ॥ (569)

(பொ) ஈசுவராவதாரமான தன்னுசாரியனருளியவுண்மை நெறிதவராமல் அன்னமயாதிபஞ்சகோசங்களுந்தானல்லவெனநேதித்து அஞ்சனவிருளான சூன்னியத்தையுந்தள்ளி அகத்தில் தான் கிஞ்சிக்ஞனை ஜீவனுயிருந்தோமென்ற பாவமும்விடுத்து நான் கூடஸ்தனென்றும் நான் பிர்மமென்றும் நிச்சயித்திருக்கிற சுத்தவிருத்தியும் நழுவியவச்சீடனுன மஹாத்மாவானவன் சத்தியானந்தைக ரூபமாயும் நிர்மலசிரேஷ்டமாயும் உத்பத்தியற்றதாயும் பூர்ணமாயுமிருக்கிற பிர்மத்தைக்கண்டான்.

ஈநஹவஸவதாயெஹாஸமஹஸவணஷ்நமவகார
ணாநாம்ஸம்க்ஷயாஜ்ஞாயமத்ரு: । ஷம்ஸவியவஸ்வவ்ராவ்யநிஷ்டாஷ்
ஹாதாவரநஹவிஸஷவொரீவகாமம்வஹவ ॥ (570)

(பொ) அனுபவசுகமாகியஜலத்தில் மூழ்கிவிளங்கியபின் எங்கும் பூர்ண போதமாத்திரமாய் தேகேந்திரியகரணாதிபாவங்களுமிழந்து தன்குருவானுபதேசித்தபடி சிதாகாசசுவரூபத்திற் சமாதிநிஷ்டையடைந்து நனவிற்சுஷுப்தியுடையவனாகியவம்மஹாத்மா வெகுகாலம் சுவானுபூதியுடன் விளங்கினான்.

[illegible] ॥ (571)

(பொ) அன்புள்ளசீடனானவன் பகுகாலம் மேலானசிதாகாசஸ்வானுபூதியுடன்கூடினவனாயிருந்தபின்னந்தக்கரணமானது ஸ்வரூபத்தைவிட்டு கிரமமாக வெளியில்வந்தவுடன் தன் குருவென்றும் ஜகத்தென்றுமுணர்ந்து ஆனந்தபாஷ்பம் பெருகிக்கொண்டிருக்கிற நேத்திரங்களையுடையவனாய் குருவின்பாதகமலத்தில் தண்டம்போல் அஷ்டாங்கநமஸ்காரஞ்செய்தெழுந்து பிரதக்ஷிணம்செய்து கைகூப்பிநின்று சந்தோஷம் நிறைந்தவங்கத்துடன் கூடியவனாய் ஸ்ரீகுருசுவாமி கேட்டருள விண்ணப்பஞ்செய்வான்.

[illegible] ॥ (572)

(பொ) ஹே சுவாமின் அநேககோடி ஜனனங்களில் எனதந்தக்கரணத்துள்ள கோரமானவாசனைகளான விருளைநிவர்த்திக்கவுதித்த மத்தியான்னவொளியே உம்மை யான் வணங்குகின்றேன். ஆவரணசொரூபம் நீங்கி எனது நிஜசொரூபத்தையான் தரிசிக்கும்படி செய்துவைத்தயிணையற்றதானவிவ்வுதவிக்கு (என்னைத்தவிரவேறொன்றுமில்லாததால்) கைமாறொன்றும் யான் கண்டிலேன். ஆகையால் நினது திருவடிபோற்றி போற்றி.

[illegible] ॥ 573

(பொ) நல்லமாணாக்கனானவன் பிரத்தியுபகாரஞ்செய்ய யாதுங்காணேனென்றுசொன்னமொழியைக்கேட்டவாசாரியார்மகிழ்ந்து தமதுகிருபாநோக்கத்தாலவனைப்பார்த்தருளி இங்கேவாவென்று சமீபத்தில்வைத்து வணக்கத்துடன் கூடியவச்சீடனுக்கு கிருபையாலனுக்கிரகிப்பார், தீமைகளாகிய பிரதிபந்தங்களான அஞ்ஞானம் சந்தேகம் விபரீதங்களாகியமூன்றையுந்தள்ளி சுவரூபஞானத்திலாரூடனாயிருப்பாயேல் இதுவே நீ எனக்குச்செய்யாநிற்கும் பிரத்தியுபகாரமாம்

கூஉஹரிதிவிஹீநம்வெ்ாஉவதுவபுவ-ஹண-ுகஹுயஉந-ஹவஉா தூஜவு-
தாஸு்ாதுஉஷாவி। ஐதிவஉதிஸஶிஷெ்ுவு்ாஹஹ-ஹியொமாா-ஹக்ூாஹு-
ஈஉவிநிஜா-ஹவஹுகிதிம்யாதிவடுெஃ ॥ (574)

(பொ) சகலகற்பனைகளுமிழந்து ஆகாசம்போலெங்கும் பூர்ணமாய்நிறைந்தசுவானுபவஞானமானது எப்பொழுதாவது நழுவுமோ குருவேயென்றுகேட்ட சீடனைநோக்கி தன்மயமாகும் பிர்மரூபமானது சத்குரூபதேசத்தாலும் சத்சாஸ்திரவிசாரத்தாலுந்தோன்றும். அவ்விதந்தோன்றினும் அக்ஞானசந்தேகவிபரீதங்களாகிய மூவகைப்பிரதிபந்தங்களிருக்கும்பக்ஷத்தில் பிர்மானுபவந்திருடப்படமாட்டாது.

(அ—கை) மேற்கூறியபிரதிபந்தங்களைப்பிரித்துக்காட்டவேண்டுமெனில்

அஜ்ஞாநஸஂெஹவிவயுயாஷ்வெஹாஸ்ரீாஹ்ாஸவமாதூ வொ-
யம்। வுஜெ்வநிதூ்ுஶு-திஜநாஹ்ாஂஜ்ாநெநவெதாநியஹுயஷு॥

(பொ) என்னை நானறியவில்லையென்றவஞ்ஞானமும் அந்தபிர்மம் நாமாவோமாவென்றசந்தேகமும் தேகமே நான் ஜகத்சத்தியமென்ற விபரீதமுமான இம்மூன்றுபிரதிபந்தங்களும், பஹுஜன்மாப்பியாசத்திற் பழகிவந்ததிருடவாசனையானதால் நீ இப்போதுபழகியபிர்மஞானத்தைக்கெடுத்துவிடுமென்பதிலாக்ஷேபமில்லை. மேலானபிர்மாத்மைக்கியக்ஞானமும் பலத்திற்கேதுவாகாமற்போம், ஆகையால்சிரவணத்தாலக்ஞானத்தையும் மனனத்தாற்சந்தேகத்தையும் நிதித்தியாசனத்தால் விபரீதபாவனையையும் போக்கடிக்கக்கடவாய்.

(அ—கை). சொல்லியவர்த்தம் நன்குய்புத்தியிற்படும்பொருட்டு திருஷ்டாந்தத்துடன்விரித்துக்காண்பிவிக்கிறார்.

ஹிஹூாநவொபெநவஹவெதுணாஉ்ுஂவொயஹுயாஜ்ஞாநஉமஂநஹநூாக।
வஹவு்ஹாணாயவிஈஂஸஉாஶு்யெதுூ-திஜவிஜாஉவிதஂஸஉாயிஂ ॥ (576)

(பொ) மணிமந்திராதிகளாற் கட்டுண்டவக்னியானது காஷ்டமுதலியவைகளைத்தஹிக்கவற்பமும் யோக்கியமாகாதுபோல் அக்ஞானசந்தேகவிபரீதங்களுடன்கூடிய தத்துவக்ஞானமாகியவக்கினியால் அநாதிகாலந்தொடுத்துவந்துள்ள கருத்தாத்துவாதிபந்தமும் நீங்காது. நெடுங்காலமப்பியசித்துவந்த சிரவணமனன நிதித்தியாசனங்களாலேயே மோக்ஷப்பிரதிபந்தங்களானவம்மூன்றுதடைகளையுமொழிக்கக்கடவாய்.

ஆவு்தூ்வு்ஹூாவஂவு்ஹவதிவிஉயஜெஉஉஜ்ஞாநெஉத்தாெ்ுஶ்ரீெஉ-
ஶிகொக்ஷஷ-ஷிதஉநவெஸாவு்தூ்யஹுஂஶயொஸள। ஸெதூ்ாஸது

[illegible] ॥ (577)

(பொ) பிர்மாஹமெனும் பாவனையைமறைத்து நான் பிர்மமல்லனெனும் நினைப்பைவிருத்திசெய்வதே அக்ஞானமாம். குருவால் நீயேபிர்மமென்று தத்வமஸியாதிவாக்கியங்களாலுபதேசித்ததைவிசேஷித்து நம்பாமல் நான் பிர்மமோ அல்லவோவென்று கலங்குவது சம்சயமாம். ஜகத்சத்தியமென்றும் தேகமே நானென்றும் அகத்தேபொருந்துவதான மோஹமே விபரீதபாவனையாம். மேற்கூறியபிரதிபந்தத்திரயங்களை புத்திசாலிகளான விவேகிகள் சிரவணமனன நித்தியாசனங்களால் தியஜிக்கக்கடவர்கள்.

[illegible] ॥ (578)

(பொ) ஷட்விதலிங்கதாத்பரியத்துடன் குருமுகமாய் தத்துவானுபூதியைக்கேட்பதே சிரவணமாம். சிரவணத்தாற்சம்மதித்துள்ள (பொருளை) அபேதத்தைத்சாதிப்பதும் பேதத்தைவாதிப்பதுமானயுக்தியாற்சிந்திப்பதே மனனமாம். சித்தம் பிர்மாகாரமாத்திரமாய் நிற்கும் நிலைமையின் பழக்கமே நித்தியாசனமாமென்று பெரியோர்கள் கூறுகின்றனர். ஆகையால் நாடோறுமிவ்வாறு சிரவணாதிகளை யனுஷ்டித்துவருவாயாகில் அவ்வக்ஞானாதி பிரதிபந்தகம் நீங்கி நீ மோக்ஷமடைவாய்.

[illegible] ॥ (579)

(பொ) எவ்வளவுகாலம் ஞாதாவும் ஞானமுமுன்னிடத்திருக்குமோ அவ்வளவுகாலம் அக்ஞானாதிபிரதிபந்தகவிரோதிகளான சிரவணாதிகளைப்பழகவேண்டும். அப்பாற்பழகவேண்டுவதில்லை. ஆகாசமானது வாய்வாதிநான்குபூதங்களிலும் சம்மந்தப்பட்டிருந்தும் சம்மந்தமின்மைபோற் கற்பனையானதேகாதிசம்மந்தமற்று பிர்மாகாரமாத்திரமாயிருந்துகொண்டு சகலஜகத்தையும் சொப்பனம்போற் பார்ப்பவன் யாவனோ அவனே ஜீவன் முக்தனும். அஜ்ஜீவன்முக்தன் பிராரப்தாவசானகாலத்திற் சொரூபாகாரமான விதேஹமுக்தியைப்பொருந்துகின்றான்.

(அ—கை) ஜீவன்முக்தர்களின்பேதமும் விதேஹமுக்தர்களின் தன்மையுங்கூறல்.

[illegible] ॥ (580)

(பொ) ஞானம் நிறைந்தஜீவன்முக்தர்கள் இவ்வுலகிற் சகலராலும்பூஜிக்கப்பட்டவர்களாய் நான்குபேதங்களுடன்கூடியிருக்கின்றனர், அப்பேதங்களைப்பகரக்கேள். அவர்களுக்குள் நான்காவது பூமியையடைந்தவன் பிர்மவித்தென்றும், ஐந்தாவது பூமியையடைந்தவன் பிர்ம்வித்வரனெனவும், 6-வது பூமிபொருந்தியவன் பிர்மவித்துவரீயானாகவும், 7-வது பூமியடைந்தவன் பிர்மவித்துவரிஷ்டனுயும் அஜ்ஜீவன்முக்தர்களின் தன்மையை நான்குவிதமாய்க்கூறப்பட்டிருப்பதில் பிர்மவித்து, வரன் வரீயான் மூவர்களின் லக்ஷணங்களையுங் கூறுகின்றோம்.

(அ—கை) 1-வது பிர்மவித்தின் லக்ஷணங்கூறல்.

[illegible] ॥ (581)

(பொ) மனோதைரியமுடையவர்களாயும் உபசாந்தமனதுடையவர்களாயுமிருக்கிற பிர்மவித்துக்கள் ஞானம்வருவதற்குமுன் தங்களால் யாதொருலௌகிகவைதிககர்மங்கள் செய்யப்பட்டனவோ அவைகளை அன்னியர்களின்காரியம்போல் லோகோபகாரநிமித்தம் தங்கள் தங்கள் வர்ணாசிரமதர்மங்களைவிடாமற் செய்கின்றனர். தன்ஸ்வரூபத்தை நன்றாயறிந்து சந்தோஷத்தோடுகூடின ஞானிகள் பிராரப்தவலியால் வந்தகர்மங்களைத் தள்ளாமலும் தன்னிஜஸ்திதியைவிடாமலும் லோகானுக்கிரகதத்பரர்களாயிருந்து ஆனந்தமான பூர்ணபிப்பிராயத்தோடு கூடியவர்களாய் இம்மேதினியிற் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

[illegible] ॥ (582)

(பொ) காமாதிகள் பிராரப்தவலியால் பிர்மவித்துக்களின் ஹிருதயத்திற் ரோன்றினும் பிர்மக்ஞானத்திடத்தாற் கணத்தில் நாசமுறுகின்றன. விவேகயினர்களால் அவைகளிற்சம்மந்தப்பட்டதாய்ச்சொல்லப்படினும் தாமரையிலையுடன்கூடியஜலமானது தாமரையிலையிற்பற்றுததுபோல் நானசங்கனென்னுமனுபூதியால் அவ்வாசனைகளிற்சம்மந்தமுறார். இவ்வுலகத்தில் ஞானிகள் விவகாரத்துடன்கூடியிருந்தாலும் கர்மோபாசனைகளைச்செய்யினுமவைகளிற் சம்மந்தமுறாமல் அறியாதஜடர்கள்போலும் ஊமைபோலுமிருக்கிறதன்மையைக்காட்டுவார்கள் ஞானசாமர்த்தியத்தையுங்காட்டார்கள். மௌனபாவம் பொருந்தினவர்களாயிருந்தாலும் மஹான்களானபெரியோர்கள் நிரங்குசதிருப்தியடைந்து ஜீவன்முக்தர்களாய்ச்சஞ்சரிக்கின்றனர்.

கூாஷுாநாஂகஉுணாலெநகஹாவாெதுஷாஜெஷாஂவுதுயொலெநகஹெஉாঃ। வாணிஜ்யஂவாெதவொநஷிதிஂவாவிக்ஷாவ்யுஂகவுெதவாயாஜ்யஂ ॥ (583)

(பொ) பிராரப்தகர்மங்களும் நாணுப்பிரகாரமாயிருப்பதால் அவர்களின் பிராரப்தத்திற்குத்தகுந்த விவகாரம்பொருந்தும். வியாபாரஞ்செய்யினும்செய்வார், பெருமைபொருந்தியதவத்தைச்செய்யினுஞ்செய்வார், பிக்ஷைபுகுந்துண்ணினுமுண்பார், ராஜ்யத்தையாளினுமாளுவார்.

ஹுஷிநமதஜயாஉநவிஹாவிஉுஷெঃவஷ்டிதஂகுநஹவஜீமநதঃ வுரொஹெஷதி। ஸவஸிஸிஷயிதாவலிஸவெவநஜீவிெதமணாமணயிெயாஸிதாகவிவதயுஹஜிஂமதாঃ ॥ (584)

(பொ) சென்றதைப்பற்றிநினையார்கள். வரப்போகிறதைப்பற்றிக்கருதார்கள். பிராரப்தவலியாலெதிர்படும் போகங்களைப்புஜியாநிற்பர். ஆகாசமானது விழுதுபோற் பூமியில் விழினும் இரவியானது சந்திரகிரகணங்களைப்போற் சீதளமாகினும் மறித்தசவம்பின் ஜீவிக்கினும், குணுதுணங்களென்னும் புத்திகளிழந்த 4-வது பூமியடைந்தஜீவன்முக்தர்கள் மேற்கூறியவைகளை ஆச்சரியமாய்க்கருதார்களென்று கைவல்லியதத்துவதீபிகை 83முதல் 98வரை சுலோகங்களாற்கூறப்படுகிறது.

விஜாஸஜ்ஞ உெஜ்ஞ ெஹக்ஷ உஸநஂவாநஂஸுவிஆஷிஷஷுாதஜெ ணநிஸஂகஸாஷிதிஹிநிஉுாஸாெநவெந। வஹஂகஷாஉநெஸாஷ ஷாஜிஹி தஜிஷுாஷுஸய்ாஉஹீஸஜாெஸாநிமஉாஜவீயிஷவிஉாஂகீ ஷாவெஸவஹணி ॥ (585)

(பொ) சங்கற்பமற்றவனும் அன்னியர்களையாசியாமற் பிக்ஷாசரணஞ் செய்து புஜிப்பவனும் நதிகளிலும் தடாகங்களிலுமுள்ள நீரைப்பானஞ்செய்பவனும், தடையற்றவாத்மானந்ததிருப்தியுடன்கூடியவனும், மயானத்திலும், வனத்திலும் பயமற்றுதுயில்வோனும், தோய்த்துலர்த்தாததானவஸ்திரதாரியாயும் அல்லது திக்கையேவஸ்திரமாய்த்தரித்தவனும் பூமியேபடுக்கையாயமைந்தவனுமிருக்கிற ஞானி வேதாந்தமாகிறவீதியிற்சஞ்சாரஞ்செய்து மேலானதானபிர்மசொரூபத்தில் ரமித்துக்கொண்டிருக்கிறான்.

𑌵𑌿𑌮𑌾𑌨𑌮𑌾𑌲𑌮𑍍𑌬𑍍𑌯𑌶𑌰𑍀𑌰𑌮𑍇𑌤𑌤𑍍𑌭𑍁𑌨𑌕𑍍𑌤𑍍𑌯𑌶𑍇𑌷𑌾𑌨𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 ।
𑌪𑌰𑍇𑌚𑍍𑌛𑌯𑌾𑌬𑌾𑌲𑌵𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌤𑍍𑌤𑌾𑌯𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌽𑌨𑌨𑍁𑌷𑌕𑍍𑌤𑌬𑌾𑌹𑍍𑌯𑌃 ॥(586)

(பொ) ஸ்வரூபசாக்ஷாத்காரமாகியபிடிப்பையடைந்து, பாலனைப்போன்றவாத்மவித்தானவன் அன்னியர்களின் பிரயத்தினத்தால் தன்னைவந்தடைந்தவிஷயங்களைச்சரீரத்தாற்புஜித்தும் அதிற்சம்மந்தமற்றவனும் பாஹியத்தோற்றமற்றவனுமிருப்பன்.

𑌦𑌿𑌗𑌮𑍍𑌬𑌰𑍋𑌵𑌾𑌪𑌿𑌚𑌸𑌾𑌮𑍍𑌬𑌰𑍋𑌵𑌾𑌤𑍍𑌵𑌗𑌮𑍍𑌬𑌰𑍋𑌵𑌾𑌪𑌿𑌚𑌿𑌦𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌥𑌃 ।
𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌵𑌦𑍍𑌵𑌾𑌪𑌿𑌚𑌬𑌾𑌲𑌵𑌦𑍍𑌵𑌾𑌪𑌿𑌶𑌾𑌚𑌵𑌦𑍍𑌵𑌾𑌪𑌿𑌚𑌰𑌤𑍍𑌯𑌵𑌨𑍍𑌯𑌾𑌂 ॥ (587)

(பொ) திக்கேவஸ்திரமாயுடையவனும், அல்லது வஸ்திரத்தோடுகூடியவனும் மரவுரிதோல் முதலியவைகளை வஸ்திரமாய்த்தரித்தவனும் சிதாகாசத்தில் வசித்துக்கொண்டிருப்பவனுமான மஹாத்மாவானவன் இப்புவியிற் பித்தன்போலவும் பாலன்போலவும் பைசாசுபோலவுஞ்சஞ்சரிக்கின்றான்.

𑌕𑍍𑌵𑌚𑌿𑌨𑍍𑌮𑍂𑌢𑍋𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌪𑌿𑌮𑌹𑌾𑌰𑌾𑌜𑌵𑌿𑌭𑌵𑌃𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍍𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃𑌸𑍌𑌮𑍍𑌯𑌃𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌜𑌗𑌰𑌾𑌚𑌾𑌰𑌕𑌲𑌿𑌤𑌃 । 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍𑌪𑌾𑌤𑍍𑌰𑍀𑌭𑍂𑌤𑌃𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌵𑌮𑌤𑌃𑌕𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑌵𑌿𑌦𑌿𑌤𑌶𑍍𑌚𑌰𑌤𑍍𑌯𑍇𑌵𑌂
𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌸𑍍𑌸𑌤𑌤𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑍁𑌖𑌿𑌤𑌃 ॥ (588)

(பொ) இடைவிடாமல் மேலானவானந்தசுகத்தில் ரமித்துக்கொண்டிருக்கிற பிராக்ஞனானவன் ஓரிடத்தில் மூடன்போலவும், ஒருக்கால் வித்துவான்போலும், ஓரிடத்தில் மஹாராஜவைபவமடைந்தவன்போலவும் ஓர்சமயத்திற்பைத்தியங்கொண்டவன்போலும், ஓர்சமயம் நல்லமனதுடையவன்போலும், ஒருவேளையில் மலைப்பாம்பின் சுவபாவத்துடன்கூடியும், ஒருக்கால் பூஜிக்கப்படுகிறவனும், ஓரிடத்திலவமதிக்கப்படுகிறவனும் ஓரிடத்திலின்னவிதமாயிருக்கிறானென்றறியத்தகாதவனுமிருந்து இவ்வுலகிற்சஞ்சரிக்கின்றான்.

𑌤𑌮𑌸𑌾𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑌵𑌦𑍍𑌭𑌾𑌨𑌾𑌦𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑍋𑌽𑌪𑌿𑌰𑌵𑌿𑌰𑍍𑌜𑌨𑍈𑌃 ।
𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌹𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌵𑌸𑍍𑌤𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ॥ (589)

𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌬𑌨𑍍𑌧𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌹𑌵𑌨𑍍𑌮𑍂𑌢𑌾𑌃 𑌶𑌰𑍀𑌰𑌾𑌭𑌾𑌸𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ॥ (590)

(பொ) உண்மையில் இராகுவால் விழுங்கப்படாதசூரியனை ரவியின் சுபாவம் அறியாதவர்களால் விழுங்கப்பட்டதாய்ச்சொல்லுவதுபோல் தேஹாதிபந்தங்களினின்றும் விடுபட்டிருக்கிற பிர்மவித்தை சரீராபசத்தோற்றத்தால் மூடர்கள் தேஹவானுய்ப்பார்க்கின்றனர்.

𑌅𑌹𑌿𑌨𑌿𑌰𑍍𑌲𑍍𑌵𑌯𑌨𑍀𑌂 𑌵𑌾𑌯𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌹𑌂 𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌇𑌤𑌸𑍍𑌤𑌤𑌶𑍍𑌚𑌾𑌲𑍍𑌯𑌮𑌾𑌨𑍋 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌾𑌯𑍁𑌨𑌾 ॥ (591)

(பொ) சட்டையைக்கழற்றின சர்ப்பமானது அச்சட்டையிலபிமான முறுதுபோல் சமசாரபந்தமற்ற ஜீவன் முக்தன் சரீரமாகிறசட்டையானது பிராணவாயுவாலங்குமிங்குமாய்ச் சலிக்கப்படினும் அச்சரீரத்திலபிமானமற்றவனுயிருப்பன்.

𑌸𑍍𑌰𑍋𑌤𑌸𑌾 𑌨𑍀𑌯𑌤𑍇 𑌦𑌾𑌰𑍁 𑌯𑌥𑌾 𑌨𑌿𑌮𑍍𑌨𑍋𑌨𑍍𑌨𑌤𑌸𑍍𑌥𑌲𑌮𑍍 ।
𑌦𑍈𑌵𑍇𑌨 𑌨𑍀𑌯𑌤𑍇 𑌦𑍇𑌹𑍋 𑌯𑌥𑌾𑌕𑌾𑌲𑍋𑌪𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌷𑍁 ॥ (592)

(பொ) பிரவாகத்தாலிழுக்கப்பட்டக்கட்டையானது பள்ளமேடுகளிலெவ்விதம்போகின்றதோ அவ்விதம் பிராரப்தகர்மத்தாலிழுக்கப்பட்ட ஞானியின் சரீரமானது சுகதுக்கபலன்களையடைகின்றது.

𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌵𑌾𑌸𑌨𑌾𑌭𑌿𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌵𑌚𑍍𑌚𑌰𑌤𑌿 𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌷𑍁 𑌮𑍁𑌕𑍍𑌤𑌦𑍇𑌹𑌃 । 𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑌸𑌤𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌵𑌦𑌤𑍍𑌰 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑍂𑌲𑌮𑌿𑌵 𑌕𑌲𑍍𑌪𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌶𑍂𑌨𑍍𑌯𑌃 ॥ (593)

(பொ) தேஹவாசனையற்றவிவேகி ஆரப்தகர்மத்தாற்கற்பிக்கப்பட்டவாசனைகளால் விஷயபோகங்களில் சம்சாரிபோற் நடித்துக்கொண்டிருந்தாலும், பிர்மவஸ்துவில் தான் சாக்ஷிமாத்திரமாயிருந்து சக்கரம்சுற்றுவதற்காதாரமானகட்டைபோல் விகற்பசூன்னியமான நிர்விகற்பமௌனியாயிருப்பன்.

𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌗𑌤𑌿𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌯𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍𑌕𑍇𑌵𑌲𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌶𑌿𑌵 𑌏𑌵 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌃 ॥ (594)

(பொ) யாவன் லக்ஷியாலக்ஷியகதியற்று கேவலமான ஆத்மஸ்திதியையடைந்திருக்கின்றனோ அவனேசாக்ஷாத்சிவனென்றும் பிர்மவித்சிரேஷ்டனென்றுங் கூறப்பட்டிருக்கின்றனென விவேகசூடாமணியில் 541-முதல் 556 வரை சுலோகங்கள் வாயிலாய் வெளியிட்டிருக்கின்றனர்.

(அ—கை) வரன் முதலியோர்தன்மை கூறல்

त्रयाणाम् [illegible] समाधि [illegible] स्वयमेवोत्थाता [illegible]
[illegible] उत्थितः । वरीयान् [illegible] बोधितो [illegible]
वरिष्ठो [illegible] ॥ (595)

(பொ) வரன் வரீயான் வரிட்டனென்னுமேனையமூவர்களில் வரன் வரீயானிருவர்களும் சமாதியோகத்தைப்பொருந்தியிருப்பார்கள். பிக்ஷாடனாதி தேஹ சஞ்சாரநிமித்தம் தானாய்ச்சென்றுண்ணுவோன் 5-வது பூமியையடைந்தவரன் சமீபத்திலுள்ளவன்னியரானசீடன் முதலியோராலுணவளித்தும் சுவரூபானுபூதிபரவசததாலறியாநிற்பவன் 6-ம் பூமியையடைந்தவரீயான். அன்னியராலும் தன்னாலும் சரீரபிரக்ஞையின் தன்மையையறியாதவன் 7-வது பூமியுடன் கூடியவரிஷ்டனாம். அவனே துர்லபமான மாஹாத்மா. அவனே யெப்பொழுதும் தேகமற்றவனாய்ப்பிரகாசிப்பன்.

(அ—கை) தங்களாற்கூறப்பட்ட பிர்மவித்துமுதலானபேதங்களையடைந்த நால்வர்களுக்கும் முக்திசமமாயிருந்தும் சிலர்நிர்விகற்பசமாதியுடையவர்களாயும், சிலர்விவகாரமுடையவர்களாயுமிருப்பதை உலகிலும் சாஸ்திரங்களிலும் கண்டிருப்தால் அவர்களுக்குள் சமாதிபலத்தில் தாரதம்மியமுண்டாவல்லவா வென்பதைக்கேட்ட சிஷ்யனைக்குறித்து சமாதானஞ்சொல்லுகிறார்.

नानाविधा [illegible]
[illegible] ॥

(பொ) திரிலோகத்தும் கிடைத்தற்கதிதுர்லபமானவிச்சீவன்முக்தர்கள் பிராரப்தவசத்தால் நானாபேதமான விவகாரங்களையுடையவராயினும் ஞானபலமான மோக்ஷசுகம் சமமாம். வரன் முதலியோர் வெகுவருத்தப்பட்டடைந்திருப்பதான நிர்விகற்பசமாதியின் பிரயோஜனம் யாதென்று கேழ்பாயாயின் பிராரப்தவசத்தாலுண்டாகாநிற்கும் பெரியதாகியதிருஷ்டதுக்கத்தை பிர்மவித்தேயனுபவிப்பன். வரியானும் வரனும் மற்றவரிஷ்டனும் ஜீவன்முக்திசுகத்தினையேவுடையவராய்வாழ்வார்கள். இவைகளைக்காட்டிலும் அவர்களுக்குள் வேறுபேதமில்லை.

(அ—கை) ஞானிகளுக்கு விவகாராதிகளுண்டாகுமென்று தாங்கள்சொல்வீர்களேயானால் முன்பழக்கத்தால்வந்த ராகாதியால் ஜடபரதன்முதலியவர்களைப்போல் திரும்பவும் சம்சாரத்தையடைவார்களேயென்று சொல்லுவாயாகிலவர்களுக்குச்சம்சாராசக்திவரமாட்டாதென்று கூறுகின்றார்.

[illegible]
[illegible] तेषाम् । [illegible]
[illegible]
[illegible] ॥ (597)

(பொ) பிர்மவித்துக்களும் அறிவீனரைப்போலவே பிராரப்தத்திற்குத் தக்கப்பிரபஞ்சவியாபாரங்களையுடையவர்களாய் ஜீவித்தால் வலிபொருந்திய அவித்தைகாமகர்மங்களொழிந்து மீண்டு பிறவாதிருக்குங்காரணம் யாதென்றுகேட்பாயாகில் வாய்வாதிபூதபௌதிகங்களனைத்திலும் விரிந்திருக்குமாகாசமானது, ஒன்றிலும் பற்றாதுபோல் ஞானிகள் ஒருவிவகாரத்திலும் பற்றுதலையடையாமலே சம்மந்தமன்றியிருப்பார்கள். வாய்வாதிநான்குபூதங்களும், தம்மோடுகலவாநிற்கும் பதார்த்தங்களோடும் சம்மந்தியாநிற்கும்செயல்போல் அக்ஞானிகள் சம்சாரத்தையடைவார்கள்.

[illegible] ॥ (598)

(பொ) ஜீவன்முக்தர்களின் பாதாரவிந்தங்களையெவர்களாதரவுடன் பூஜிக்கின்றனரோ அவர்கள் அயன் அரி அரன் மூவர்களையும் பூஜித்தவராவார்களென்றும் உத்தமமானதபோநுஷ்டானங்களும் சாதுக்களாற்செய்யவேண்டிய சகலகிர்த்தியங்களையுஞ்செய்தவராவார்களென்றும் அறுதியானவேதங்கள் வெகன்புடன்கூறுகின்றன. இனிப்பொருந்துதற்கரியஜீவன்முக்தர்கள் நிற்கும் விதேஹகைவல்லியமுக்தியையும் நீ கேட்பாயாக.

[illegible] ॥ (599)

(பொ) பஞ்சைப்படபாமுகாக்னியானதெரித்து நீறெழப் பண்ணுவதுபோல் நாஞவிதஜனனங்களுக்குப்பீஜங்களாகிய சஞ்சிதகர்மங்களனைத்தையும் ஞாநாக்கினியானது எரித்துபஸ்மமாகச்செய்யும். ஞானியினுகாமியகர்மமானது ஜீவன்முக்திபலத்தால் அசரீரியான யிவனையற்பமும் சம்மந்தியாமற்போம். சேடமான பிராரப்தகர்மமானது போகானுபவத்தால் நாசத்தையடைகின்றது. இவ்விதம் முக்கர்மங்களும் நாசத்தையடைகின்றனவென்று கைவல்லிய 1-வது பிரகரணம் 99-முதல் 103-வரை சுலோகங்களாலரைகின்றனர்.

(அ—கை) ஆத்மாவின் மாயையானது மூன்றுவகையாய் நாசமடையுமென்று கூறுகின்றார்.

[illegible] ॥ (600)

(பொ) ஜகத்சத்தியமென்றும் பிர்மவஸ்துவில்லையென்றுமுண்டாயிருக்கிற ஆத்மமாயாரூபமான அசத்தாவரணசக்தியானது நீயே அந்தபிர்மமென்று குருவானுபதேசித்த சாஸ்திரஜன்னியஞானத்தால் நாசமடைகிறது. தேஹமே நானென்றும் ஆத்மவஸ்துவிளங்கவில்லையென்றதுமான அபானுவரணம்சமானது சொரூபசாக்ஷாத்காரவனுபூதியால் நாசமடைகின்றது. ஜகத்தின் தோற்றமானது பிராரப்தாவசானகாலத்தில் நாசமடையுமென்றுமூவகையாய் கூறுகிறது. வராகோபநிஷத் 2-வது அத்தியாயம்.

[illegible] ।
[illegible] ॥ (601)

(பொ) ஹே அர்ஜுனா அக்கினியானது கட்டைகளையும் சமித்துக்களையுமெரித்துச்சாம்பலாய்ச்செய்வதுபோல் ஞானக்கினியானது சஞ்சிதம் ஆகாமி பிராரப்தமிம்மூன்று கர்மங்களையுமெரித்துச் சாம்பலாய்ச்செய்யுமென்று பகவத்கீதை 4—அ—37—சு.

[illegible] ।
[illegible] ॥ (602)

(பொ) மாயாரகிதமான பிர்மத்தை யாவன் பார்க்கின்றானோ அவனுக்கு அன்னியோன்னியாத்தியாசத்தாலுண்டாயிருக்கிறஹிருதயக்கிரந்தியானதுபேதிக்கப்படுகிறது. அவனுக்கேசகலசம்சயங்களும் போகின்றன. அவனுக்கேசஞ்சிதாகாமிபிராரப்தகர்மங்களும் நாசமாகின்றனவென்று முண்டகோபநிடதம் 2-வது கண்டம் 8-வது வாக்கியம்.

(அ—கை) ஜீவன்முக்தர்களுக்குபோகத்தாலுண்டாயிருக்கிறபுண்ணியபாபபலங்கள் மறுஜன்மங்களுக்குச்சம்மந்தப்படாமற்போகுமென்றமார்க்கத்தைக்கேட்கக்கடவாயென்று குருகூறுகின்றார்.

[illegible]

நீநா௨விவிஉயதியெ ெதஉஹஜெஶ-ஹாநிஷீ திஂயெயொ௰ஹாஜாஂவிஉய தி
நிவிஷஂவ-ணு௨ரயாஜிெதவி ॥ (603)

(பொ) பிராரப்தபயனை சுகதுக்காதிகளை ஜீவன்முக்திதிசையிலனுபவிக்குங்கால் ஜீவன்முக்தர் சரீராதிகளாற்செய்யாநிற்கும் புண்ணியபாபமிசிரரூபமான கர்மங்களவாகளைத்தொடர்ந்திடாமலிறந்துபோமார்க்கம் யாதென்று சங்கிக்கில் அறிவின்மையோர் தோஷதிருஷ்டியால் நிந்தித்து அச்சீவன்முக்தர் தேகத்தாற் செய்தபாபங்களையேற்றுக்கொள்வர். அறிவுடையோர் பிர்மவித்து பிர்மமேயென்றும் சுருதிவாக்கியத்தின்படி ஞானியை பிர்மசொரூபமென்றுமறிந்து மனோவாக்குக்காயங்களாலாராதித்து அவர்களின் புண்ணியங்களனைத்தையுமேற்றுக்கொள்ளுவர். ஆகையால் பிராரப்தாதீனத்தாலுண்டாகிற கர்மங்களாலும் ஜன்மஹேதுவாகமாட்டாதென்றுணரக்கடவாய்.

(அ—கை) விதேஹமுக்தியின் தன்மைகூறல்.

ஸஂவித்ூவகஉஹூெ௨வஹிவ-ராவிஐ௰ரஶரீரஂவவ-ஷுஜுஂகாஉ வஶாதூ
தெஉயவ-நஷுஜுக்ஷுஂஶரீரஂகூ௨ரஃ । தவூாயஃவெதிதாஂவ-வதூ-விஉெஃ
வஜுெணுதவெூவெஉநிதூ௰ரநஂஉவிஉாதூகெவரதரொஶீநஂஹவெவூா
ஷூெத ॥ (604)

(பொ) துர்லபமானதத்துவக்ஞானக்கினியால் அவித்தையாகிய காரணதேகம் வெந்து நீறாய்விடும். தூலதேஹமும் அதற்கு நியமித்தகாலத்தில் (வேருகளைந்த விருக்ஷம்போல்) சவமாய் வீழாநிற்கும். அப்பொழுது உரிமையாகிய சூக்ஷுமதேஹமானது கொல்லனுலையிற் காய்ந்தவிரும்புண்டநீர்போல் துரியமாயும் பூரணமாயும் அழியாதவானந்த சிதாத்மாவாயும் சிரேஷ்டமாயும் நின்மலமாயும் சாசுவதமாயுமிருக்கிற மேலானபிர்மசொரூபத்தின்கண் லீனத்தையடையுமென கைவல்லியம் தத்துவப்பிரகரணம் 104—மு—105—வ—சுலோகவாயிலாக கூறுகிறது.

ஶூஷுகஉஹுணிவஹொ௰தவஉவநஷெவூ௰ணாஉயொவி௨௨ெநாதூ௨ிதஂ
ஸஂயஹூஃ । தவூாஷூநிஷுஜஉவதூயிவொயஶஜுெவஶீநாஹவஜிநவநஜூ
நநாஜிகஂஸூ௰ரஃ ॥ (605)

(பொ) பிராரப்தகர்மமும் போகத்தால் நாசமானவுடன் பிராணாதிகளுந் திரும்பவெளியில்வருவதற்கு யோக்கியமின்றி காய்ந்தகல்லிலிட்ட ஜலம்போல் போதசுவரூபியான நம்மிடத்தில் லீனமாகின்றன. அவ்வேதுபற்றி மறுஜன்மத்திற்கு யோக்கியமன்றென்று சதாசிவபிர்மயதீந்திரர் சொல்லியவாத்மவித்தியானுபூதியிற்கூறப்பட்டிருக்கிறது.

யத்ர யத்ர ம்ருதோ ஜ்ஞாநீ பரமாக்ஷரவித்ஸதா ।
பரப்ரஹ்மணி லீயேத நதஸ்யோத்க்ராந்திரிஷ்யதே ॥ (606)

(பொ) பரமார்த்தசொரூபத்தை எப்பொழுதுமறிந்திருக்கிற ஞானியின் சரீரமானது பிராரப்தாவசானத்திலெங்கெங்கவிடத்தில் வீழ்ந்தாலும் பிராணாதிகள் பரபிர்மத்தில் லீனத்தையடைவதால் அவனுக்கு திரும்பஜனனயோக்கியமானவுத்க்கிரமணமுண்டாகமாட்டாதென்று உபநிடதமரைகின்றது.

கடே தேஹே நஷ்டே ஸதி ம்ருதவத்தேஹநாஶே வ்யோமவத் ஸ்தூலஸூக்ஷ்மவிமுக்த
ஸகலோபாதிசூன்யாஸ் துரீயா: । நிர்வாணபதவர்த்திந: கோ
ஷ்டீயாத்யந்த மத்யரஹிதாஸ் ஸர்வாந்தர்பஹிர்வ்யாபகாஸ் ॥

(பொ) கடவுபாதியானது அபாவமாயின் கடாகாசமானது மஹாகாசத்தோடேகமாவதுபோல் சரீரத்திரயங்களாகியவுபாதிகள் நீங்கியவுத்தரக்ஷணம் துரியபதவியடைந்த ஜீவன்முக்தர்கள் ஆதியுமந்தமும் மத்தியுமில்லாமல் உள்ளும் புறம்புமில்லாமல் தானிருந்தபடியே விளங்காநின்ற விதேஹகைவல்லியபதத்தைப்பெற்று எண்ணெயற்றதீபம்போற் சாந்தமாயிருப்பார்கள். கை—106—சு.

க்ஷீரே க்ஷீரம் யதா க்ஷிப்தம் தைலே தைலம் ஜலே ஜலம் ।
ஸம்யுக்தமேகதாம் யாதி ததாத்மந்யாத்மவிந்முநி: ॥ (608)

(பொ) பாலிற்பால் கலந்ததுபோலும் எண்ணெயிலெண்ணெசேர்ந்ததுபோலும் ஜலத்தில் ஜலம் கலந்ததுபோலும் ஆத்மவித்தான முனியானவன் ஆத்மசொரூபத்தில் விதேஹமுக்தியான ஏகீபாவத்தையடைகிறானென்று ஆத்மோபநிஷத்திற்கூறுகிறது.

ஜீவந்முக்தபதம் த்யக்த்வா ஸ்வதேஹே காலஸாத்க்ருதே ।
விஶத்யதேஹமுக்தத்வம் பவநோஸ்பந்ததாமிவ ॥ (609)

(பொ) ஞானியின் சரீரமானது காலத்தாற் பிணமாய்விழுஞ்சமயத்தில் ரூபநாசமான ஜீவன்முக்திபதத்தைவிட்ட ஞானி அசைவற்றகாற்றைப்போல் சொரூபத்தில் அரூபநாசமான விதேஹமுக்தியையடைகிறானென்று யோககுண்டலியுபநிடதம் 3—அ—கூறுகிறது.

மத்கா: ஶாந்தமநஸோ வ்யோமவத்ஸர்வதேஹிந: ।
கதாஸ்தாநி விஜ்ஞாநமயஸ்ய ஸாந்தராத்மா ப்ரவிஶத்யேகீபவந்தி ॥ (610)

(பொ) சுரோத்திரேந்திரியமுதலான பதினைந்துகலைகளும் அவைகளுக் கதிஷ்டானங்களான திக்குமுதலியதேவதைகளும் பதினாறாவது கலையான ஜீவனும் இச்சா அனிச்சா பரேச்சாவென்ற பிராரப்தகர்மங்கள் மூன்றும் நாசரகிதமானபிர்மத்திலொன்றாய் விதேஹமுக்தியில்லீனத்தையடைகின்றன.

யதா நத்ய꞉ ஸ்யந்தமானா꞉ ஸமுத்ரேऽஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய ।
ததா வித்வாந் நாமரூபாத்விமுக்த꞉ பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ॥

(பொ) சமுத்திரத்தில் கங்கைமுதலியநதிகளனைத்தும் தங்கள் நாமமும் உருவமுமிழந்து சமுத்திரவடிவமாவதுபோல் மஹாத்மாவும் ஜீவனென்றநாமமும் சரீரவுருவமுமற்று மாயைக்கப்புறப்பட்டதாயும் புருஷராயும் சுவயம்பிரகாசராயுமிருக்கிற பிர்மத்தையடைகிறானென்று முண்டகோபநிஷதம் மூன்றாவது முண்டகம் 2-வது கண்டம் 7, 8 வது வாக்கியத்தில் கூறுகிறது.

[illegible] ॥ (612)

(பொ) ஹே குழந்தாய் எவ்விடத்தும் நிறைந்துள்ளவாகாசம் தானிருந்தபடியேயிருக்க பூமியை அகழ்ந்தபின்னர், ஆகாசம் பூர்ணமென்னும் ஞானமில்லாதவனுக்கு நூதனமாய்த்தோன்றுகிற கூபாகாசம்போல, எக்கணுவே சித்தமாயுள்ள பிர்மம் குருவுபதேசத்தாலும் சாஸ்திரவிசாரத்தாலும் அப்போது நூதனமாகவடையப்பட்டதுபோலவேதோன்றுநிற்கும். பிரமமாகியநாமெப்போதும் அகண்டைகரசவஸ்துவென்றிருக்கக்கடவாய். கை—107—சு.

ஆத்மா து ஸததம் ப்ராப்தோऽப்யப்ராப்தவதவித்யயா ।
தந்நாசே ப்ராப்தவத்பாதி ஸ்வகண்டாபரணம் யதா ॥ (613)

(பொ) தன் கழுத்திற்போடப்பட்டிருந்த ஆபரணமானது தனக்கறியப்படாமலிருந்து நினைவுக்கு வந்ததனால் தன் கழுத்திலிருப்பதாய்ப்பார்ப்பதுபோல் எப்பொழுதுந்தானாயிருக்கிற ஆத்மா அவித்தையாலடையப்படாதவர்போல்தோன்றி குருவுபதேசஞானத்தால் அவித்தைநாசமானவுடன் தானந்தபிர்மத்தையடைந்தவன்போல் விளங்குகிறான். ஆத்மபோதம் 44 சுலோகம்.

[illegible] ॥ (614)

(பொ) ரஜ்ஜுவிற்சர்ப்பம்போலும் கானலிற்ஜலம்போலும் தாணுவிற் புருடன்போலும் சுவப்னநகரம்போலும் ஆகாசத்தில்தோன்றுகிற கந்தர்வபட்டணம்போலும் வந்தியாசுதன்போலும் அஹங்காராதிப்பிரபஞ்சமனைத்தும்மித்தையென்றும் ஞானமேசத்தியமென்றும், மைந்தா? இத்தன்மையான உனதான்மாவை நம்மேலாணைவைத்துரைக்கின்றேன் நீமறவாதிருக்கக்கடவாயென்று கைவல்லியதீபிகை 108-வது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

(அ—கை) நாமுரைத்த பிர்மக்ஞானம் யாருக்கு சுலபமாய் கிடைக்கும் எவருக்கு கிடைக்காதென்று கேட்டசீடனுக்கு மூடனுக்கு முக்திசுலபமாய்க்கிடைக்கமாட்டாதென்பதை திருஷ்டாந்தத்துடன் ஆசான் காண்பிவிக்கிறார்.

சுஷ்ராவஸவிஷூாஷுமெகவியாதூவெஷஉஜ்ஞாநஉாஸ்ரீதவதஷூாஷூ ஹாநஉக்தி: । ரூஷுஸுமெஹஉஹிதஃவுதிபிம்பிதாஜஉாமுஉதவஸ்ஷ ஹிஒூதிரஹூகஸ்ய ॥ (615)

(பொ) நான்குவாயலிலும் கண்ணாடியாற்கட்டப்பட்டகிரகத்தையடைந்தமைந்தனுக்கு எங்குபார்த்தாலும் வாசலாய்த்தோணி அதைவிட்டுவெளியில்வர முடியாததுபோல் அத்தியாசத்தால் நானவிதரூபமாய்விளங்குகின்ற அக்ஞானத்தையடைந்தபுருஷனுக்கு மோக்ஷமானது சுலபமாய் கிடைக்கமாட்டாது.

(அ—கை) பின்னைமோக்ஷமடைகிறவர்கள் யாரென்றால் சாதனசதுஷ்டயத்துடன்கூடியபுருடர்களே குருகிருபையால்மோக்ஷமடைவார்களென்று திருஷ்டாந்தமூலமாயறிவிக்கிறார்.

ஶாஷ்ராஜிஸாயநவதாவாஷெதூஉநஸ்வாவ்ஷெ ... வா ஜெஶிகொக்ஷா । வொமெரஙணுவஸிணிஂஜிமெதநவஸாஜெமொநி ஜொஹிதஷுஹிஜ்ஜூமிமொவஉஜ்ஃ ॥ (616)

(பொ) ஆபரணங்களையபகரிக்கும் நிமித்தம் திருடர்களாற்கொண்டுபோகப்பட்டு அரண்யத்தையடைந்தராஜகுமாரன் தன்தேசமார்க்கமுணர்ந்த புருடர்களின் வாக்கியத்தால் தன்தேசமடைவதுபோல், சத்வாசனைகளாகியவாபரணங்களணிந்த சுத்தஜீவனை காமாதிகளானதிருடர்கள் கிரகித்துக்கொண்டுபோய் அவ்வாபரணங்களைப்பிடிங்கிக்கொண்டு சம்சாரமாகிறவனத்தில் ஞானமாகிற கண்களைக்கட்டிவிட்டுவிட்டார்கள். அதனால் துக்கிக்கின்ற அனேகர்களில் புண்ணியசாலியான ஜீவன் சாந்தியாதிசாதனம் நிறைந்தபுருடசிரேஷ்டரான குருவின் வாக்கியோபதேசத்தால் ஞானமாகிறகண்ணுடன்கூடி தன்தேசமானபிர்மபதத்தை தடையின்றியடைகிறான்.

KOVILOOR MADALAYAM KOVILUR-630 307 MANAGIRI VIA

(அ—ன்கை) இந்தஜீவன் அக்ஞானகாலத்தில் கருத்திருத்துவாதியபிமானம் நிறைந்தவனாயிருந்து நீயே அந்தபிர்மமென்று தேசிகனாலுபதேசிக்கப்பட்டு சுவபாவஸ்திதியையடைந்ததன்மையை திருஷ்டாந்தத்துடன்தெரிவிக்கின்றார்.

ஸ்ரீராஜ்ஞஸ்யவாநிதிமாக்ரமேவ நிஷ்டுரைர்நிஷாதைர்த்ருதஸ்தாநஸ்ய மாத்ருத்வைர்யாஸஸ்ஸ்ரீஹாவ: । ராஜாத்மஜஸ்யைவஜிதக்ஷநிர்வாயஸேநைவ்யாயாத்மதாவிஜ்ஞாநாத்ஸ்வராஜ்ஞஹாவ: ॥ (617)

(பொ) ராஜகுமாரன் ஜனித்தவுடன், யௌவ்வனகாலத்தில் ராஜியபட்டாபிஷேகம் கிடைக்குமென்றுசொன்ன ஜோஸியர்வார்த்தையைநம்பிய மஹாராஜன் தன்மைந்தனுக்கு நவரத்தனாதியாலிழைக்கப்பட்டவாபரணங்களைப்போடும்படிசெய்து சீராட்டுங்கால் அப்பாலன் நித்திரையடைந்ததருணமறிந்த திருடர்கள் ஆபரணங்கள் நிமித்தம் அப்பாலனைவனத்திற்கெடுத்துப்போய் நகைகளையபகரித்து அம்மைந்தனையும் நாசஞ்செய்யவெத்தனிக்குங்கால் அவர்கள்சமீபத்திலிருந்த சகோதரியின் வேண்டுகோளுக்கிணங்கி அப்பாலனையவள்வசமொப்பிவிக்க அவனும் அவ்வனத்திலிருக்கிறவேடுவர்களின் சேர்க்கையால் தான் ராஜாவென்பதைமறந்து வேடனென்று நிச்சயஞ்செய்து வெகுகாலம் ஜீவித்துக்கொண்டிருந்தான். அந்தப்புரத்திற்சென்று குழந்தையைப்பார்க்கும்போது காணாமல் விசனத்துடன்கூடியவரசன் ஜோஸியராலவனிருக்குந்திசையையுணர்ந்து அத்தேசஞ்சென்று ராஜகுமாரனைப்பார்த்து நீயாரென்றுவினவ நான் வேடனென்றுசொன்னதைக்கேட்டு, உன்மாதாவிடம்போய் சகோதரா நிபந்துக்களின் லக்ஷணங்களைத்தெரிந்துவரச்சொன்னமேல் மாதாவான அவித்தையிடஞ்சென்று, நான் யாருடையபிள்ளை, இங்கிருக்கிறவர்களெவ்விதசம்மந்தமென்றுவினவ மாதாவும் நீ உண்மையில் ராஜகுமாரன், உன்னை பாலியத்திலேயே நகைகளையபகரிக்க என்சகோதரர்களான காமாதிவேடுவர்கள் உன்னை கொண்டுவந்து நகைகளையபகரித்து உன்னையும் நாசஞ்செய்யவெத்தனிக்குங்கால் என்வேண்டுகோளுக்கிணங்கி குழந்தையற்றவளானவென்னிடமொப்பிவித்தார்கள், அதுமுதலென்னைத்தாயென்றும், சுற்றத்தாரானவகங்காராதிகளை பந்துக்களென்றெண்ணி வேடனென்றபாவனையைச்செய்துகொண்டிருக்கிறாய். வாஸ்தவத்தில் நீ அரசன்மைந்தனேயொழியவேறல்லவென்றுசொல்ல வெகுவேகமாய் ராஜாவுடன்கூடியஜோஸியரிடம் வந்து மேற்கூறியவைகளைத்தெரிவிக்க, அவரும் நீ மஹாராஜாவின் குமாரனேயொழியவேடுவனல்லவென்றுசொல்ல, நான் ராஜாவென்றுணர்ந்து வேடபாவத்தைவிட்டுச்சுகியாயிருப்பதுபோல், பிர்மப்பிரதிபலனமான ஜீவனானமைந்தன் சிருஷ்டிகாலத்திற் சுத்தசத்துவகுணம் நிறைந்திருக்கிற தன்மையையறிந்தகாமாதி திருடர்கள் நற்குணங்களானவாபரணங்களையபகரித்துக்கொண்டு இவன் சுத்தஜீவத்தன்மையை நிவர்த்திக்கப்பிரயத்தனப்படுங்கால் அவித்தையான தன்சகோதரி

பீடத்திலொப்பிவித்து அவளுடையசேர்க்கையாலும் பந்துக்களானவகங்காராதிச்சேர்க்கையாலும் தன் சுத்தபாவமிழந்து நான்கர்த்தாவென்றும் போக்தாவென்றும் அநேகவிதமாய்ச்சங்கற்பித்து சம்சாரமாகியவனத்தில் வெகுகாலந்துக்கித்துத்திரிந்துகொண்டிருந்தான்.

முன்செய்தபுண்ணியவிசேஷத்தால் குருவாகிய ஜோஸியரானவர் அவ்வனத்திற்குவந்து உபநிஷத்துடன்கூடியவாக்காலிவனையழைத்து ஆத்மாநாத்மவிசாரத்தால் (நீ சர்வவியாபகமாயிருக்கிற பிர்மமேயொழிய கர்த்தாவானவேடனல்லவென்றுசொன்னவுடன் மனனமாகிய தன்வேடகிரகத்திற்குவந்து மலினசத்வமான தன் தாயின்வசனத்தினாலும் தான்கர்த்தாவல்லவென்றுணர்ந்து நிதித்தியாசனபலத்தால் கருத்துருத்துவாதிதர்மங்களைவிட்டு சர்வவியாபகமான பிர்மமே தானென்றறிந்து சகலதுக்கங்களுமிழந்து தன் பிர்மசொபாவத்தைமறவாமல் தானாகவேசுகித்துக்கொண்டிருந்தான்.

(அ—கை) கூடஸ்தனுன் தனக்கு பந்தமோக்ஷாதியில்லையென்று திருஷ்டாந்தத்துடன் வெளியிடுகின்றனர்.

கூடஸ்த நித்ய ஸ்வஸ்வவெவாய தனோ ஸ்வ தீவொஸவெ ... ஸ்வர்க்காவ ...
உ வி ...ஷாஸ: | வஸ்த்ராஸ தஸ்வவ ...ராதிம ...ணவ ...வஷூஸ்தஷூதாவி
ஸ ...த்ராஸவஷிக்ஷ நெவ ॥ (618)

(பொ) மலடிமைந்தனுக்கு சரீரம் முதலான சகலவியாபாரங்களும் அவன் நாசமும் மிகவும் கற்பனையாயிருப்பதுபோல், கூடஸ்தராயும் நித்தியராயும் சுகபோதசொரூபராயுமிருக்கிற பிரத்தியகாத்மாவான தனக்கு அக்ஞானதிசையில் வந்ததாயெண்ணிய பந்தமும் ஞானதிசையில் நிவர்த்தியானதாயெண்ணிய ஜீவன்முக்தத்துவமும் சுத்தகற்பிதமேயொழிய வாஸ்தவமன்று.

(அ—கை) மேலெழுந்தபார்வையால் தோன்றுகிற ஜகத்து சுத்தபொய்யென்பதை திருஷ்டாந்தத்துடன் அருளுகின்றார்.

ஜூவா த த:ஸ்வ திஹயாஜமஉஸ்திவாஉஸ்த்ர ஹிர ...வணவியள நஷிகிஷிஉ
ஷி | ஸீரொவி ...ஹா திவஷி தஸ்திஸவிஶாஸ்ஷே ஶ்ருவதீவ ...க்ஷீகா நயெக
கிஉஷி ॥ (619)

(பொ) பயந்தபுருஷனுக்கு இருளே மயக்கத்தால் எங்கும் பிசாசாய்த் தோன்றின தோற்றமானது தீபதரிசனத்தால் அக்ஷணமே நிவர்த்தியையடைவதுபோல், தன்சொரூபத்தையுணரா‌த்மேலெழுந்தபார்வையால் திருசியம் சத்தியமென்றெண்ணியபுருடர்களுக்கு, ஜகத்துண்மையாய்த்தோன்றுமேயன்றி யதார்த்தமாய் ஞானதீபத்தால் யார்க்குங்காலிச்சகத்தில்லவேயில்லை.

(அ—கை) சைதன்னியசொரூபமாய்ப்பார்க்கும்போது இச்சகத் கற்பனை யில்லவேயில்லையென்பதை திருஷ்டாந்தமூலமாயறிவிக்கிறார்.

ஹ்ஜெ்ஜா திரெவஜமஹாத்தயாவகாஷ்ஷிவஷ்ஷஹ ராகிஉவிநாஷ்ஷிவிஷாயபூ உாணெ। ரஜெ்ஜாஹ்பூஉாஷிகாரணாஷிவரஜ்ஜ வஸவபூஷ்ஷகூாஷராஹவிதஉஹபூ திகிஂகயஞிக ॥ (620)

(பொ) பழுதையில் மயக்கத்தாற்கண்டசர்ப்பப்பிராந்தியானது பழுதைதான் வாஸ்தவமென்றுணர்ந்தமாத்திரத்திற் சர்ப்பம் பார்க்கப்படாததுபோல், சைதன்னியமான ஜோதிஸ்வரூபத்தை தன்னக்ஞானமயக்கத்தால் ஜகத்தாய்ப் பார்க்கப்பட்டு சொரூபவிசாரத்தாலவ்வறிவேதானென்றறிந்தவுடன் அச்செகத் துப்பொய்யாய்ப்போகின்றது.

(அ—கை) பிரபஞ்சமானது சுத்தமயக்கமென்பதை காண்பிக்கிறார்.

விஷ்ஷஂஸஉஷ்ஷஉவிவிஹ்உஉாத்ரூஉதஉாஉைத்தவஸஷயஉநந்யஸவஹ்காஶஃ। ஷூஞஉைத்யூவவிஷ்ஷஉவிஸத்யூதீஜிதஞெக்ஷாநாஉஶக்ஷிரஜஉதநயநீ நஹாவீ ॥ (621)

(பொ) சகலஜகத்தும் சுத்தமயக்கமாம். சச்சிதானந்தமானவாத்மாவேயெப்பொழுதுமுளது. தோற்றுமாத்திரத்தாலிச்சகமுண்டென்று சொல்லுவாயாயின் கிழிஞ்சலைவெள்ளியென்றுநம்பியபுருஷன் ஏன் தனவானாகமாட்டான்?

(அ—கை) ஜகத்தே இல்லவேயில்லையென்று வற்புருத்திக்கூறுகின்றார்.

நாஷ்ஷிவஹ்தீத்யவஸஉநவரநவஷ்ஷாஉாஷ்ஷயபூஉதஉவஹாதிதயாவிவிஷ்ஷஂ। யதாகிஉஹ்தஜிவெஹஉஹஂஹ்ஜாஷஂ உயாவிகஷ்ஷிதஜிதிவஹ்திஹாஸஉதஹி ॥ (622)

(பொ) சிருஷ்டிக்குமுன்னும் பிரளயத்திற்குப்பின்னுமில்லாதவிச்சகமானது இப்பொழுதுதோன்றுகிற மாத்திரத்தாற் சத்தியமாகவொருக்காலுமாகவேமாட்டாது. இச்சகம் தோன்றுகிறதேயென்று கேட்பாயாகில், இந்திரஜாலக்காரன் வருவதற்குமுன்னும் அவன் சக்தியை நிருத்தினபின்னுமில்லாமல் மத்தியில் தோன்றிய இந்திரஜாலப்பட்டணமானது அவன் சக்தியாற்கற்பிக்கப்பட்டதுபோல் இச்சகமானது மாயையாற்கற்பிக்கப்பட்டதேயொழியவாஸ்தவத்திலில்லை.

(அ—கை) ஒன்றானவாத்மவே தன்மயக்கத்தாலிரண்டாய்க்கற்பிக்கப்படுவதை திருஷ்டாந்தத்துடன் போதிக்கின்றனர்.

[illegible] ॥ (623)

(பொ) ஒன்றாயிருக்கிற சந்திரன் தன் திருஷ்டிதோஷத்தாலிரண்டு சந்திரனாய்ப்பார்க்கப்படுவதுபோல் ஒருவராயும் சர்வவியாபகராயும் பூர்ணாநந்தசொரூபராயுமிருக்கிறவாத்மாவே தன்னிடத்திற்கற்பிக்கப்பட்டிருக்கிறவக்ஞானபடலத்தின் மிகுதியால் நானாவாய்ப்பார்க்கப்படுகிறார்.

(அ—கை) இச்சகம் வாஸ்தவத்திலில்லையென்பதை பின்னும் திருஷ்டாந்தத்துடனுரைக்கிறார்.

[illegible] ॥ (624)

(பொ) பொரிவாணம் சுற்றும்பொழுது நெருப்புப்பொரிகள் தோன்றுவனபோல் இச்சகம் புவனச்சக்கிரத்தால் அஸ்திரமாய்த்தோன்றுகிறதெனப்பார்க்கக்கடவாய். பொரிவாணம் சுற்றுவது நின்றவுடன் அதன்பொரிகள் காணப்படாததுபோல் தெய்வகிருபையால் மயக்கமாகிற சுற்றுதல் நீங்கியவுடனிச்சகம் காணப்படமாட்டாது.

(அ—கை) ஆரோபமானஜகத்து நம்மிடத்திலில்லவேயில்லையென்று திருஷ்டாந்தத்துடன் வெளிப்படுத்துகின்றனர்.

[illegible] ॥ (625)

(பொ) சைதன்னியமாகியவாகாசத்தில் இச்சகத்தாகிய கந்தர்வபட்டணமானது விவஸ்தையின்றித்தோன்றுகிறது. ஆத்மவித்தையான மின்னனுதித்தமாத்திரத்திலிச்சகம் தோன்றாமற்போகிறது.

[illegible] ॥ (626)

(பொ) ரணரங்கத்திற்சென்றமதங்கொண்டயானை சத்துருக்களையும்சாரத்தியஞ்செய்த புருஷனையும் ஹதம்செய்து தான்மாத்திரமாய்ச்சஞ்சரிப்பது

போல் பிரமாகாரமான சித்தம் தோற்றுமாத்திரமானவக்ஞானசத்துருக்களைக் கொன்று கர்த்தாவானஜீவனையும் நாசமுறச்செய்தபின் ஜகத்தின்தோற்றமற்று தான்மாத்திரமாய்ச்சேஷிக்கின்றது.

(அ—கை) இச்சரீரமானது இப்பவேநசிப்பதாலும் வெகுகாலமிருந்து நசிப்பதாலும் யாதொருபிரயோஜனமில்லையென்று திருஷ்டாந்தத்துடனுரைக்கின்றார்.

கடஸ்யாஸ்து ததா நாஸ: ஸ்திதிராஸ்தாம் கடஸ்ய வா ததாகாஸஸ்ய நோ கோபி விஸேஷ: । தேஹோபி நஸ்யது சிரம் திஷ்டது வா ததைவ தேஹஸாக்ஷிண: நஹி கோபி விஸேஷோஸ்ய ॥ (627)

(பொ) கடமானது இக்கணத்தில் நாசமுற்றாலும் வெகுகாலமிருந்தாலும் கடாகாசத்திற்கெவ்விதவிசேடமுமேற்படாததுபோல் இவ்வுடலிப்பொழுதேநாசமுற்றாலும் சந்திராதித்தியர்களுள்ளபரியந்தமிருந்தாலும் சிதாகாசசொரூபமான நமக்கு அவைகளாலொருவிசேடமுமில்லை.

அஹிநிர்ல்வயநீ ஸர்ப்பநிர்மோகோ ஜீவவர்ஜித: ।
வல்மீகே பதிதஸ்திஷ்டேத் தம் ஸர்ப்போ நாபிமந்யதே ॥ (628)

ஏவம் ஸ்தூலம் ச ஸூக்ஷ்மம் ச ஸரீரம் நாபிமந்யதே ।
ப்ரத்யக்ஜ்ஞானஸிகிவித்வஸ்தமித்யாஜ்ஞானே ஸஹேதுகே ॥ (629)

(பொ) சட்டையைக்கழற்றின நல்லபாம்பானது ஜீவனற்றதான அச்சட்டை தான்வசிக்கும் பொந்தின் வாயலிற்கிடந்தாலும் தன்னதென்றபிமானிக்காததுபோல் பொய்யாயிருக்கிறவக்ஞானம் காரணத்துடன் பிரத்தியக்ஞானக்கினியாற் பொசுக்கப்பட்டிருக்கும்பொழுது இத்தூலசூக்ஷுமசரீரங்கள் ஞானிக்குத்தோன்றினும் அவைகளில் தன்னதென்றவபிமானமுறான் வராகோபநிடதம் 2-வது அத்தியாயத்திலும் அத்வைதரசமஞ்சரியிலும் கூறியிருக்கிறது.

(அ—கை) சிந்தையாலேயே ஜகத்தோற்றமுண்டாகுமென்பதை திருஷ்டாந்தத்துடன்சான்மொழிகின்றார்.

ஸங்கல்பமாத்ரஸங்க்லுப்தஸ்ருஷ்டிர்விஸ்வம் விஸ்வஸ்ய ஸ்வப்நவத்ஸ்ருஷ்டிஸ்ருஷ்டிவாத: । யதா ஸ்வப்நஜநிதாம் வநிதாம் விஜ்ஞாய ஸ்வயமேவ த்வம் ஸத்யதயா விபாவ்யஸ்ருஷ்ட: ॥ (630)

(பொ) மனிதனொருஸ்திரீயை வெகுகாலம்நினைத்து மனோராஜ்யஞ் செய்யுங்கால் அவளேவந்துவிட்டதாய் அம்மனோராஜ்யகாலத்திலெண்ணி சந்தோஷமடைவதுபோல் சங்கற்பமாத்திரத்தாற் கற்பிக்கப்பட்டஜகத்தை மந்தயுத்தியுடையபுருஷன் சத்தியமென்றெண்ணிமோகிக்கிறான்.

(அ—கை) ஜகத்தோற்றமில்லவேயில்லையென்பதை திருஷ்டாந்தத்துடன் சொல்லுகிறார்.

[illegible]
[illegible]
[illegible] ॥ (631)

(பொ) சத்தியமாயும் தன்னாத்மாசம்பொருந்தியதாயும் அழியாதசுகபோதரூபமாயுமிருக்கிற தன்னிடத்தில் மயக்கத்தாலிச்சகமிருப்பதாய்த்தோற்றப்படுகிறது. ஓரிடத்திலும் பார்க்கப்படாததாயும் அரூபமாயுமிருக்கிறவிச்சகத்தை ஆகாசசித்திரத்திற்குச்சமானமாய் யாமெண்ணுகிறோம்.

[illegible]
[illegible]
[illegible] ॥ (632)

(பொ) மையின்விகாரத்தால் நானாவிதசித்திரங்கள்தோன்றுகிறவஸ்திரமானது தன்சுபாவதர்மத்தையிழக்காதிருப்பதுபோல், அத்தியாசத்தால் அறிவுசொரூபமான நம்மிடத்தில் தோன்றப்படுகிற இச்சகத்துத்பத்திநாசங்கள் சிறிதும் ஒருக்காலுமுண்டாகவுமில்லை, தள்ளப்படவுமில்லை.

(அ—கை) ஆத்மசொரூபமேநானென்றனுபவத்துடன் கூடியிருப்பதை திருஷ்டாந்தத்துடன் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible] ॥ (633)

(பொ) மூடன் அஞ்ஞானமயக்கவாசனையால் தேகேந்திரியாதிகளைத்தானென்றபிமானிப்பதுபோல் ஞானி சச்சிதானந்தசுகசொரூபமாயும் தேசகாலவஸ்து பரிச்சேதாஹிதமாயுமிருக்கிற ஆத்மவஸ்துவையெப்பொழுதும் நானென்றெண்ணிக்கொண்டிருக்கிறான்.

(அ—கை). விவேகிகள் ஜகத்தோற்றத்தை சத்தியமென்றெண்ணார்களென்பதை திருஷ்டாந்தத்துடனளிக்கிறார்.

[illegible] ॥ (634)

(பொ) அறிஞர்கள் கானற்பூமியிற் சூரியகிரணத்தால்தோன்றுகிற கானல் நீரைத்தள்ளி மனோக்கியமாயுள்ள கங்காஜலத்தைப்பான்ம்பண்ணுவதுபோல் மஹான்கள் தமக்குண்டாயிருக்கிற ஞானதைரியத்தால் இச்சகம் பொய்யென்றும் ரசமற்றதென்றுமெண்ணி சத்தியபுத்தியை நீக்கி பிர்மானந்தரசத்தை அந்தரங்கத்திலனுபவிக்கின்றனர்.

(அ—கை). ஆத்மசொரூபத்தை அக்ஞர்களறியவேயில்லையென்பதை திருஷ்டாந்தத்துடன் தெரிவிக்கிறார்.

[illegible] ॥ (635)

(பொ) சகலஜகத்தையும் விளக்கிவைக்கிறவராயும் சர்வப்பிராணிகளாலும் சூரியமண்டலத்திற் பிரத்தியக்ஷமாய்ப்பார்க்கப்படுகிறவராயுமிருக்கிற பாஸ்கரனை கோட்டான்கள் சூரியனுதித்திருக்கிறாரென்று சந்தோஷியாததுபோல் ஏகாந்தத்திலனுபவிக்கத்தக்கவராயும் சுவயம்பிரகாசராயுமிருக்கிற தானான ஆத்மசொரூபத்தை மூடர்களாதரிக்கவில்லையன்றோ. ஆ! கஷ்டம்.

(அ—கை) தன்சொரூபத்தில் அறியாமையால் தோன்றுகிறஜகத்தை தனக்கன்னியமாய் நினைத்துத்துக்கிக்கிறார்களென்பதை திருஷ்டாந்தத்துடனுரைக்கின்றார்.

[illegible] ॥ (636)

(பொ) பாலன் தீபாதிவெளிச்சத்தால் தன்சரீரநிழலை தனக்கன்னியமாயெண்ணி மயங்கித்துக்கிப்பதுபோல், மூடன் தன்னானந்தஸ்பூர்த்தியால் விளங்குகிற பொய்யான ஜகத்தை தனக்கன்னியமாயெண்ணி பரிதபிக்கிறான்.

(அ—கை) மாயாவிகாரங்களில் அசங்கரானவாத்மா சம்மந்தப்படாரென்பதை திருஷ்டாந்தத்துடன் தெரிவிக்கின்றார்.

[illegible] ॥ (637)

(பொ) தாமரையிலைகளில் முகில்கூட்டங்களெவ்வளவு ஜலம் வருஷித்தாலும் அவைகளைநனைப்பிக்கமுடியாததுபோல் அசங்கனுயிருக்கிற என்னை மாயையாற்கற்பிக்கப்பட்டபஞ்சபூதவிகாரங்களாற் சங்கனைச்செய்யமுடியாதன்றோ.

[illegible] ॥ (638)

(பொ) ஆகாசத்திற்கற்பனையால் தோன்றப்பட்ட நீலநிறமுதலானவைகள் ஆகாசத்தை சம்மந்தப்படுத்தாதுபோல் சகல சங்கமற்று அசங்கனுயிருக்கிற என்னை தோற்றுமாத்திரமான சரீராதிஜகத்கற்பனைகள் வந்தணுகமாட்டா.

(அ—கை) அவஸ்தாத்திரயாதிகற்பனைகள் தோன்றினும் அவைகளில் ஞானி சத்தியபுத்திவையானென்பதை திருஷ்டாந்தத்துடன் காட்டுகிறார்.

[illegible] ॥ (639)

(பொ) அரவமானது தன் சட்டையைக்கழற்றியபின் அச்சட்டையானது அப்பொந்துவாயிலிற்கிடந்தாலும் அதிலபிமானமுறாதுபோல் ஜாக்கிர சொப்பன சுஷுப்திகளான மூன்றவஸ்தைகளும் அடிக்கடி உண்டாய் நாசமுற்றாலும் நாமாகிறசாக்ஷியினிடத்தில் தோன்றிக்கொண்ருக்கிறதென்றுதெரிந்து அவைகளிற் சத்தியபுத்தியற்றவனாயும் அபிமானமற்றவனாயுமிருப்பன்.

(அ—கை) விவகாரத்தில் ஜாக்கிரசொப்பனமென்றகற்பனைபோல் பிரத்தியகாத்மா பரமாத்மாவென்ற கற்பனையுண்டாயிருக்கிறதென்பதை திருஷ்டாந்தத்துடன் காட்டுகிறார்.

[illegible] ॥ (640)

(பொ) ஜாக்கிரம் சொப்பனமென்றுசொல்லுகிற சொற்கள்பேதமாகினும் மாயாமயமென்பதிலிரண்டும் சமமாயிருக்கின்றனபோல் பிரத்தியகாத்மாவென்றும் பரமாத்மாவென்றும் சொற்களாற்பேதமாயினும் சச்சிதானந்தசொரூபத்திலிரண்டுமொன்ருய் ஒரேசொரூபமாய்விளங்குகின்றன.

(அ—கை) குருவிடத்தில் சிரவணமனன நிதித்தியாசனங்கள்செய்தசீடனானவன் சத்துவாபத்தியான நான்காம்பூமியடைந்த தன்மையும் பிர்மசொரூபத்திற்சித்தவிசிராந்தியுடன்கூடிய நிர்விகற்பசமாதிரூபமான நனவினிற் சுஷுப்தியவஸ்தையைப்பொருந்திய பிர்மவித்தின் லக்ஷணத்தையும் காண்பிக்கிருர்.

விரக்தபாஹ்யவிஷயவ்யஸநாநந்தமயாஸ்வகரிதயோவரிஜஸநமதி
கூமா: । ஸாநந்தத்யுதிஸ்ம்ருதவரிஸ்தவேதவோயதோஜாக்ரதோவ்யக
ஸவதிஸந்துஷ்டுப்தாவஸ்ரம ॥ (641)

